கோகுலம்

GOKULAM

பிப்ரவரி '87 | ரூ 2





உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். — பாரதியார்

கோகுலம்

1987 பிப்ரவரி மாத இதழ்
மலர் 5 இதழ் 1
தனிப் பிரதி ரூ. 2/—
ஆண்டுச் சந்தா ரூ. 24/—
கௌரவ ஆசிரியர்:
அழ. வள்ளியப்பா



புகைப்படம்: என் அய்யப்பன்

அருமைச் சிறுவர் சிறுமியரே,

உங்களின் புத்தாண்டு வாழ்த்துக்கள், பொங்கல் வாழ்த்துக்கள் கிடைத்தன; நன்றி.

இது கணித மேதை ராமானுஜம் பிறந்த நூறாவது ஆண்டு. உலகம் போற்றும் அந்தக் கணித மேதை, நம் தமிழ்நாட்டிலே பிறந்தார் என்ற பெருமை நமக்கு உண்டு.

கணக்கு என்றாலே பலருக்குக் கசப்பாக இருக்கும். அப்படிப்பட்ட கணக்கிலே அளவில்லாத ஆர்வம் சின்னஞ்சிறு வயதிலே ராமானுஜத்துக்கு ஏற்பட்டு விட்டது.

ஆரம்பப் பள்ளியில் படிக்கும் போதே, பள்ளி விட்டு வந்ததும், அவர் ஒரு சிறு துணியைக் கட்டிக் கொண்டு, வீட்டுத் திண்ணையிலே உட்கார்ந்து கொள்வார். கையிலே ஒரு சிலேட்டு இருக்கும். அதிலே கணக்குகளைப் போடுவார். விடை கண்டுபிடிப்பார். பிறகு சிலேட்டிலுள்ள கணக்கை அழிப்பார். மீண்டும் ஒரு கணக்கை எழுதுவார். விடை கண்டுபிடிப்பார்.

இப்படியே எண்களுடன் அவர் விளையாடி மகிழ்வார். ஆனாலும் தங்களுடன் விளையாட வராமல் எப்போதும் கணக்குப் போட்டுக் கொண்டிருக்கும் ராமானுஜத்தை இவரது தெருப் பிள்ளைகள் கேலி செய்வார்கள்; கிண்டல் செய்வார்கள். சில குறும்புச் சிறுவர்கள் இவர் மீது சிறுசிறு கற்களை எறிவார்கள். அந்தத் தொல்லைகளையெல்லாம் இவர் சிறிதும் பொருட்படுத்த மாட்டார். கணக்கிலேயே கவனத்தைச் செலுத்துவார்.


நாள் ஆக ஆக, பெரிய பெரிய கணக்குகளுக்கெல்லாம், வெறும் மனக்கணக்குப் போல இவர் விடை கூறிவிடுவார். 20 வரிகளில் செய்யக் கூடிய கணக்கை இரண்டே வரிகளில் செய்து காட்டி, ஆசிரியர்களையும் மாணவர்களையும் ஆச்சரியத்தில் ஆழ்த்துவார்.

இத்தகைய மேதையின் நூற்றாண்டு விழாவை நம் தமிழகம் சிறப்பாகக் கொண்டாடும் என நம்புகிறோம். ஒவ்வொரு பள்ளிக்கூடமும் இதில் பங்கு கொள்ளும் என எதிர்பார்க்கிறோம்.

அழ. வள்ளியப்பா

இந்த இதழ் எழுத்தாளர்கள்



பட்டுக்கோட்டை ராஜா


இரா. கனகசுப்புரத்தினம்

பிருந்தாவனக் கதாசிரியர்கள்


எஸ். கோபிநாதன்


சே. ஸ்ரீவித்யா



ஏ. பரிமளநாதன்

பிருந்தாவனக் கவிஞர்கள்


எஸ். விஜயநந்தினி


செ. சரவணகுமார்

அட்டை வண்ணப்படம்: சரஸ்வதி சத்தியமூர்த்தி



ஜார்ஜ் வாஷிங்க்டன்

இவர் அமெரிக்க ஐக்கிய நாட்டின் முதல் குடியரசுத் தலைவராக விளங்கியவர்.

அமெரிக்காவிலுள்ள வேக்பீல்டு என்ற கிராமத்தில் இவர் பிறந்தார். இளமையில் தொடர்ந்து கல்வி கற்கவில்லை. தமது 11—வது வயதில் தந்தையை இழந்தார். 15—வது வயதில் நிலங்களை அளவிடும் வேலையை மேற்கொண்டார். பிறகு படை வீரரானார்.

அப்போது அமெரிக்கர் இங்கிலாந்தை எதிர்த்து, சுதந்திரப் போராட்டம் நடத்தினர். அந்தச் சுதந்திரப் போராட்டத்தை நடத்த முற்றிலும் தகுதி வாய்ந்தவர் இவரே என்று முடிவு செய்து இவரைத் தலைமைத் தளபதியாகத் தேர்ந்தெடுத்தார்கள். கொஞ்சம்கூடப் பயிற்சியில்லாத படை வீரர்களுக்கு நல்ல முறையில் பயிற்சி அளித்து, வீரத்துடனும், கட்டுப்பாட்டுடனும் அவர்களுடன் சேர்ந்து போர் புரிந்தார். எட்டு ஆண்டுகள் நடந்தது இந்தப் போர். இறுதியில் வெற்றி தேடித் தந்தார்.

விடுதலை பெற்ற 13 அமெரிக்கக் குடியேற்றங்களும் ஒன்று சேர்ந்து, 'அமெரிக்க ஐக்கிய நாடுகள்' என்ற பெயரில் புதிய ஒரு நாடாக உருவானது. அதன் குடியரசுத் தலைவராக இவரையே தேர்ந்தெடுத்தார்கள்.

நேர்மையாக நிர்வாகம் நடத்தி பலமுள்ள ஒரு நாட்டை உருவாக்கிய இவரை 'அமெரிக்கக் குடியரசின் தந்தை' என்று அனைவரும் போற்றி வருகின்றனர். இவர் நினைவாக அமெரிக்க மாநிலம் ஒன்றுக்கும், அமெரிக்காவின் தலைநகருக்கும் 'வாஷிங்க்டன்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது!



பம்மல் சம்பந்த முதலியார்


இலட்சக்கணக்கான தமிழ் மக்களைச் சிரிக்க வைத்த நாடகம் 'சபாபதி.' இதேபோல் சிரிக்க வைக்கும் நாடகங்கள், சிந்திக்க வைக்கும் நாடகங்கள், தெய்வபக்தியை ஊட்டும் நாடகங்கள், தேசபக்தியை வளர்க்கும் நாடகங்கள் என்று நூற்றுக்கு மேற்பட்ட நாடகங்களை எழுதியவர் பம்மல் சம்பந்த முதலியார்.

இந்த நூற்றுண்டின் தொடக்கத்தில் நாடகக் கலை மிகவும் மோசமான நிலையில் இருந்தது. அதற்குப் புத்துயிர் கொடுத்து அதை மேல்நிலைக்குக் கொண்டு வந்தவர் இவரே.

நீதிபதியாகப் பணியாற்றிய இவர் 1891—ல் 'சுகுண விலாச சபா' என்ற ஒரு சபையைத் தொடங்கினார். அதில் நடிப்பதற்குப் பல நாடகங்களை எழுதினார். பல நடிகர்களைத் தயார் செய்ததோடு, இவரே முக்கியமான பாத்திரங்களையும் ஏற்று நடித்தார். படித்துப் பட்டம் பெற்றுப் பெரும் பதவிகளில் இருந்த பலர் இவருடன் நடித்தார்கள்.

இவர் எழுதிய முதல் நாடகம் 'புஷ்பவல்லி'. இவரது நாடகங்களில் மிகவும் குறிப்பிடத்தக்கவை: 'மனோகரா', 'இரத்தினாவளி', 'இரண்டு சகோதரிகள்', 'சந்திர ஹரி'. இவற்றுடன் ஆங்கில நாடகங்களையும், சமஸ்கிருத நாடகங்களையும் தழுவித் தமிழிலே பல நாடகங்களை எழுதி மேடை ஏற்றினார்.

'பத்மபூஷண்' விருது பெற்றவர். நாடகக் கலைஞர்கள் எல்லாரும் சேர்ந்து இவருக்கு 'நாடகப் பேராசிரியர்' என்ற பட்டத்தை 1944—ல் வழங்கினார்கள். 92—ஆம் வயதில் காலமானார்.



ஜார்ஜ் வாஷிங்டன்


தோற்றம்: 22-2-1732 மறைவு: 14-12-1799



பம்மல் சம்பந்த முதலியார்

தோற்றம் : 1-2-1873 மறைவு: 24-9-1961

மின்மினிக் கதைகள்



இறை வணக்கம் எது?

மதீனா நகரின் பள்ளிவாசலில் ஒரு மனிதர் எப்பொழுதும் காணப்பட்டார். நபிகள் நாயகம் (ஸல்) பள்ளிவாசலுக்கு வந்தபோதெல்லாம் அந்த மனிதரைச் சுட்டிக்காட்டி, ''யார் இவர்?'' என்று வினவினார்கள்.

அதற்குத் தோழர், ''அவர் மிகவும் நல்லவர்; சிறந்த பக்திமான்; இரவும் பகலும் இறை வணக்கத்திலேயே மூழ்கியிருப்பவர்'' என்று சொன்னார்.

''அதுசரி! அப்படியானால் அவரது வாழ்க்கை எப்படி நடக்கிறது?'' என்று கேட்டார் நபிகள் நாயகம் அவர்கள்.

''அவருக்கு ஒரு சகோதரர் இருக்கிறார். அவர் விறகு வெட்டி வியாபாரம் செய்கிறார். அவர்தான் இந்த மனிதரது தேவைவ்யையும் கவனித்துக் கொள்கிறார்'' என்று தோழர் பதில் சொன்னார்.

''அல்லும் பகலும் ஆண்டவனை வணங்கும் அந்த நண்பரிடம் சொல்லுங்கள்! அவரைவிட விறகு வெட்டிப் பிழைக்கும் அவரது சகோதரர் ஆயிரம் பங்கு மேலானவர். குடும்பத்தின் தேவைக்காக நியாயமான வழியில் சம்பாதிப்பதும் இறை வணக்கம்தான் என்று அந்த நண்பருக்கு எடுத்துச் சொல்லுங்கள்'' என்று பெருமானார் தெரிவித்தார்கள்.


நபிகள் நாயகத்தின் கருத்தை அறிந்த அந்த மனிதர், அன்று முதல் தொழுகை நேரங்களில் மட்டும் பள்ளிவாசலுக்கு வந்து இறைவணக்கத்தில் ஈடுபட்டார்., பிற நேரங்களில் தமது சகோதரருக்கு உதவியாக விறகு வெட்டி வணிகம் புரியத் தொடங்கினார்.

அனாதைச் சிறுவன்

அந்த நாள் மகிழ்ச்சிக்குரிய திருநாள்! ஆம்! அன்றுதான் 'ஈத்' பெருநாள்! புத்தாடை அணிந்து புதுமணம் பூசி எல்லோரும் ஈத்காஹ் (பெரு

நாட்களில் அனைவரும் கூட்டாகத் தொழுமிடம்) நோக்கிச் சென்றார்கள். பெற்றோர்கள், தம் பிள்ளைகளுக்கு அழகிய ஆடைகளை அணிவித்து மகிழ்வோடு அழைத்துச் சென்றார்கள்.

அண்ணல்' நபி அவர்கள் பெருநாள் தொழுகைக்காகப் போய்க் கொண்டிருந்தார்கள். மகிழ்ச்சிக்குரிய அந்த நாளிலே ஓர் அழுகுரல்



கேட்டது. அண்ணலார் திரும்பிப் பார்த்தார்கள். அங்கே ஒரு சிறுவன் தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தான். அவன் அருகில் சென்று, ''ஏன் தம்பி அழுகிறாய்?'' என்று பரிவோடு நபிகளார் கேட்டார்கள்.

''எனக்குத் தாயும் இல்லை; தந்தையும் இல்லை! எல்லாப் பிள்ளைகளையும் அவரவர் தந்தையார் தொழுகைக்காக அழைத்துப் போகிறார்கள். என்னை அழைத்துப் போகத்தான் யாருமில்லை. எல்லாரும் புத்தாடை அணிந்து மகிழ்ச்சியுடன் பெருநாள் கொண்டாடுகிறார்கள். நான் மட்டும்...'' சிறுவன் அழுது கொண்டே சொன்னான். அவன் மேனியிலிருந்த கந்தலாடையைக் கண்டு அண்ணலாரின் கண்கள் கசிந்தன. அந்த அனாதைச் சிறுவனை ஆரத் தழுவிக் கொண்டார் அண்ணலார்.


''தம்பீ! நீ அழக் கூடாது! இன்று முதல் நான் உனக்குத் தந்தை; ஆயிஷா உன் தாய்; பாத்திமா உன் சகோதரி. உனக்குச் சம்மதந்தானே!'' பெருமானாரின் பேரன்பில் சிறுவன் திகைத்து நின்றான். அவனை அன்போடு தம் வீட்டிற்கு அழைத்துச் சென்ற அண்ணலார், ''ஆயிஷா! உமக்கு ஒரு மகனை அழைத்து வந்திருக்கிறேன்!'' என்று சொன்னார்கள்.

ஆயிஷா நாயகி அந்த அனாதைச் சிறுவனை அன்போடு வாரி அணைத்துக் கொண்டார். தாமே அவனைக் குளிப்பாட்டிப் புத்தாடை அணிவித்தார். இனிப்புப் பண்டங்களைக் கொடுத்தார். சிறுவன் மகிழ்ச்சிக் கடலில் திளைத்தான். பின்னர் அவன் பெருமானாரின் திருக்கரத்தைப் பற்றிக் கொண்டு 'ஈத்காஹ்'வுக்குச் சென்றான். அவனது விழிகளில் மகிழ்ச்சிப் பேரொளி சுடர் விட்டது.

சொர்க்கம்

''வாயில்லாத பிராணிகளைக் கண்டால் ஆண்டவன் இருக்கிறான் என்றெண்ணி அஞ்சி நடந்து கொள்ளுங்கள்! உயிருள்ள பிராணிக்கு உணவு ஊட்டுவதில் கூட ஆண்டவனிடமிருந்து சன்மானம் கிடைக்கும்'' என்பது நபிகள் நாயகத்தின் நல்லுரைகளின் தாத்பரியமாகும். இக்கருத்தினைத் தமது தோழர்களிடம் அண்ணலார் பின்வருமாறு விளக்கினார்கள்.

''ஒரு பெண், ஒரு பூனையை வளர்த்து வந்தாள். அவள் அந்தப் பூனையை எப்பொழுதும் கட்டி வைப்பாள். பட்டினி போட்டுக் கொடுமைப் படுத்துவாள். அந்தப் பெண் ஒருநாள் திடீரென இறந்து போனாள்.



இப்பொழுது அவள் நரகத்தில் வேதனைப்படுகின்றாள்'' என்று நபிகளார் சொன்னார்கள். பிறகு அவர்களே தொடர்ந்து இன்னொரு நிகழ்ச்சியையும் சொன்னார்கள்.

''பாலைவனத்தில் ஒரு மனிதர் சென்று கொண்டிருந்தார். அவர் செல்லும் வழியில் ஒரு கிணறு இருந்தது. அந்தக் கிணற்றின் அருகில் அடக்க முடியாத தாகத்துடன் ஒரு நாய் நின்று கொண்டிருந்தது. அந்த நாயின் தாகத்தைத் தீர்ப்பதற்கு அவர் விரும்பினார். ஆனால் கிணற்றிலிருந்து நீரெடுக்கப் பாத்திரம் இல்லை, உடனே அவருக்கோர் எண்ணம் தோன்றியது. தமது ஆடையைக் கழற்றிக் கிணற்றில் விட்டு நனைத்தார். அதையெடுத்து,துணியை முறுக்கிப் பிழிந்து, தண்ணீரை நாயின் வாயில் ஊற்றினார். அந்த மனிதர் அந்த நாய்க்கு உதவி செய்தமையால், அவர் இறந்த பிறகு சொர்க்கத்திற்கு உரியவரானார்'' என்று நபிகளார் சொன்னார்கள்.

'விலங்குகளிடம்அன்பாய்இருப்பவர்களுக்கும்சொர்க்கம்கிடைக்கும்' என்பது நபிகள் நாயகம் கூறிய இவ்விரு நிகழ்ச்சிகளால் தெளிவாகின்றது.

தாய்ப்பறவை

தமது தோழர்களோடு பெருமானார் ஓரிடத்தில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது அங்கே அவசரமாக வந்து சேர்ந்த ஒரு நண்பர், ''பெருமானாரே! ஒரு விசித்திரச் செய்தி'' என்றார். அண்ணலாரும் அது என்னவென்று கேட்டார்கள். நண்பர் தொடர்ந்து சொன்னார்.

''நான் வரும் வழியில் ஒரு புதரிலிருந்து விசித்திர ஒலியைக் கேட்டேன். அருகில் சென்று பார்த்தபோது, ஒரு கூட்டில் இரு புறாக்குஞ்சுகள் இருக்கக் கண்டேன். நான் அவற்றை எடுத்து என் போர்வைக்குள் சுருட்டி



வைத்துக் கொண்டு நடக்கலானேன். அப்போது எங்கிருந்தோ தாய்ப்பறவை வந்துவிட்டது! தன் குஞ்சுகளைக் காணாமல் அது அலைமோதியது. என் தலைக்கு மேலே அது வந்தபோது என் போர்வையைக் கொஞ்சம் விலக்கினேன்! என்ன வியப்பு! தாய்ப்புறாவும் எனது போர்வைக்குள் புகுந்து தனது குஞ்சுகள் மீது சிறகுகளைப் பரப்பிப் பாதுகாக்கத் தொடங்கிவிட்டது. இதோ பாருங்கள்!'' என்று போர்வையைத் திறந்து காட்டினார்.

அதைக் கண்ட அண்ணலார் அவர்கள், ''மீண்டும் இவற்றைக் கொண்டு போய் அவற்றின் கூட்டில் சேர்ப்பித்து விடுங்கள்! சீக்கிரம் செல்லுங்கள்'' என்று அந்தத் தோழரை ஏவினார்கள். பிறகு தமது தோழர்களை நோக்கி நாயகம் அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்.

''தாய் அன்புதான் எவ்வளவு உயர்வானது! இந்தத் தாய்ப் புறா தன் குஞ்சுகளுக்காகச் செய்ய முனைந்த தியாகமும், அது செய்த முயற்சியுந்தான் எவ்வளவு சிறப்பானது! ஆயினும் தோழர்களே! தாயன்பைவிட இறைவன் தம் படைப்பினங்களின் மீது கொண்டுள்ள அன்பு அளவிட முடியாதது; மிக மிக உயர்வானது.''

அண்ணலாரின் அருளுரையை அவர்களது தோழர்கள் மெய்யுருகிக் கேட்டார்கள்.

— மு. சாயபு மரைக்காயரின் 'திரு நபி வாழ்வினிலே' என்ற புத்தகத்திலிருந்து. வெளியிட்டோர்: இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட், சென்னை — 12.

பழைய கதை; புதிய பாடல்

வேணு-நாணு

குழந்தைக் கவிஞர்



வேலை யில்லா இரண்டு நண்பர்
வேணு, நாணு என்பவர்
காலை முதலாய் மாலை வரையில்
கவலை யின்றித் திரிபவர்.

இருவர் வீட்டின் இடையில் தூரம்
இரண்டு கிலோ மீட்டராம்.
ஒருநாள் சினிமாப் பார்ப்பதற்கு
இரவில் சேர்ந்து சென்றனர்.

திரைப் படத்தைப் பார்த்து விட்டுத்
திரும்பி நடந்து வந்தனர்.
அருகில் இருந்த வேணு வீட்டை
அவர்கள் சென்று அடைந்தனர்.

"எனது வீடு செல்ல வேண்டும்.
இருளில் பயமாய் இருப்பதால்,
துணைக்கு நீயும் வருவாய்" என்றே
சொல்லி அழைத்தான் நாணுவும்.

"ஆமாம், நீயும் தனியாய்ச் சென்றால்
அச்ச மாக இருந்திடும்.
சேம மாகக் கையைக் கோத்துச்
செல்வோம்" என்றான் வேணுவும்.

நாணு வீட்டை அடைந்த பிறகு
"நானே தனியாய்ச் செல்வதா?
வேணும் உனது துணைதான் என்றே
வேணு அழைத்தான் நாணுவை.

வேணு வுடைய வீட்டை நோக்கி
விரைந்து சென்றார் இருவரும்
நாணு உடனே திரும்பிச் செல்ல
வேணு துணையை வேண்டினான்.

இரண்டு பேரும் இந்த விதமாய்
இங்கும் அங்கும் நடக்கவே,
இரவு நீங்கி, கிழக்கு வெளுத்து
எழுந்து வந்தான் சூரியன்.

"விடிந்து போச்சு பயமில் லாமல்
வீடு செல்ல லாமென
முடிவு செய்து பிரிந்து சென்றார்,
வேணு — நாணு நண்பர்கள்.



என் குழந்தைப் பருவம்

தசாவதானி. வெ. இராமையா

திருக்குறள் தசாவதானி வெ. இராமையா அவர்கள் நினைவாற்றல் கலையில் வித்தகர். அவரது மூளையை ஒரு 'கம்ப்யூட்டர்' என்றே சொல்ல வேண்டும். ஒரே நேரத்தில் ஒன்றல்ல, இரண்டல்ல, பத்துக்கும் மேற்பட்ட நினைவு வேலைகளில் கவனம் செலுத்தி, அனைத்தையும் மூளையில் பதித்துக் கொள்வார். கடைசியில் எல்லாவற்றிற்கும் சரியான விடைகளைக் கூறி வியப்பில் ஆழ்த்துவார். திருக்குறள் முழுவதையும் எழுத்துவாரியாக, எண் வாரியாக, இன்னும் எத்தனையோ வழிகளில் மனத்தில் பதித்து எப்படிக் கேட்டாலும் விடை சொல்லக் கூடிய ஆற்றல் பெற்றவர். சங்க இலக்கியங்களையும், பாரதியார், பாரதிதாசன் பாடல்களையும் கரைத்துக் குடித்தவர். நினைத்த நேரத்தில் நினைத்த கருத்துக்குப் பாடல் இயற்றும் திறம் பெற்றவர்.

இத்தனை பெருமைக்குரிய இவர், இருவிழிகளின் பார்வையை இழந்தவர். அந்த இழப்பும் நம் தாய்த்திரு நாட்டின் விடுதலைக்காகப் போராடிச் சிறை சென்று, சிறைக் கொடுமைகளினால் ஏற்பட்டது என்பது வேதனைக்குரியது. இவை எல்லாவற்றையும் விட அதிசயம் என்னவென்றால், இவர் இத்தனை திறமைகளையும், நூல் அறிவையும் கண்பார்வையை இழந்தபின், பிறர் சொல்லக் கேட்டே வளர்த்துக் கொண்டார் என்பதுதான்! முப்பது ஆண்டுகளாக இத்தகைய அற்புதப் பணியைச் செய்து வரும் இவர், நினைவாற்றல் கலையை எப்படி வளர்ப்பது என்பதை விளக்கி 'நினைவுக் கலை' என்று ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். இவரது திறமையையும் தமிழ்ப்பணியையும் பாராட்டித் தமிழ்நாடு அரசு இவரை அரசவைக் கலைஞராக ஏற்றுப் பெருமைப்படுத்தியது.

ஏராளமான சிறப்புப் பட்டங்களைப் பெற்ற இந்த அதிசய மனிதர், கடந்த 18.05.1986 அன்று இயற்கை எய்தினார். 'எதிர் நீச்சல்' என்ற தலைப்பில் எழுதப் பெற்றுள்ள இவரது வரலாற்றில் காணப்படும் குழந்தைப் பருவ நிகழ்ச்சிகள் சிலவற்றை இங்கு காணலாம்.

சாலிச்சந்தை — நான் பிறந்த சிறிய கிராமம். மதுரைக்குத் தென் மேற்கே முப்பது கல் தொலைவில் மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டி பேரையூர் என்ற சிறிய நகருக்கு அருகில் உள்ளது இக்கிராமம். அப்பா பெரிய கருப்பனார். அம்மா சின்னத் தாயம்மாள். மூன்று வயதிற்குள் அப்பாவையும் அம்மாவையும் ஆறு மாதத்திற்குள் அடுத்தடுத்து இழந்தேன். அன்று முதலே எனக்கு நானே தான் ராஜா, மந்திரி எல்லாம். அப்பா பெரும் வணிகர். ஏராளமான செல்வத்தை என்னைப் போலவே அனாதையாக விட்டு விட்டுச் சென்று விட்டகால் எனக்கும், எட்டே வயதான என் ஒரே சகோதரிக்கும் சோற்றுப் பஞ்சம் மட்டும் இல்லை. மற்றபடி அன்புப் பஞ்சம், அறிவுப் பஞ்சம் எல்லாம் மிக அதிகம். கட்டுப் படுத்தவோ, வாழ்வை நெறிப்படுத்திக் கொடுக்கவோ யாரும் இல்லை.

விளைவு?

அப்பனைப் போல் அடங்காத பயல், உருப்படாத பயல், வாலில்லாக் குரங்கு, மரமேறும் தேரை — இவை ஊரார் எனக்குக் குழந்தைப் பருவத்தில் கொடுத்த கௌரவப் பட்டங்கள். ஆனால், என்னைப் பொறுத்த வரை ஊரார் பார்வைக்கு ஒருவனாகவும், எனக்கு நானே ஒருவனாகவும் தான் வாழ்ந்தேன். மற்றவர்கள்



செய்யக் கடினமானதைச் செய்ய வேண்டும் என்ற உணர்வு எனக்குப் பிறவி முதல் உள்ளுக்குள்ளேயே நெருப்பாய்த் தகித்துக் கொண்டிருந்தது!

இதனால் ஏறக் கஷ்டமான பெரிய மரத்தின் உச்சிக்கு ஏறுவேன். அங்கிருந்து குரங்கு போல் கால்களைக் கொப்பில் மாட்டிக் கொண்டு தலைகீழாய்த்தொங்குவேன். மரத்திலிருந்து தலைகீழாய் இறங்குவேன். ஆழமான கிணற்றிற்குள் தலைகீழாய்ப் பாய்ந்து அடியில் சென்று மண் எடுத்தல் எனது மற்றொரு சாகசம். என் பிறவித் தகிப்பு மற்றவர்க்குத் தெரியாத காரணத்தால் வாலில்லாக் குரங்கு, மர மேறும் தேரை என்று மட்டுமே கௌரவித்தனர்.

ஒருமுறை எங்கள் ஊரில் கழைக் கூத்தாடிகள் முகாமிட்டிருந்தனர். அதில் ஒரு பெண்மணி கயிற்றின் மேல் நடந்தாள். ஊரே ஆச்சரியப்பட்டது. அன்றிரவு எனக்குக் கயிற்றின் மேல் நடப்பதைப் பற்றியே நினைப்பு, கனவு எல்லாம். மனத்திற்குள் மூட்டம் போடத் தொடங்கியது — தகிப்பு. என் உறவினர் ஒருவரின் தாழ்வான மாடி அறையில் என் பயிற்சி தொடங்கியது. விட்டத்தைப் பிடித்துக் கொண்டே கயிற்றின் மேல் நடந்த முயற்சியில், பலமுறை கீழே விழுந்து ஊமையடி வாங்கினேன். இறுதியாகக் கயிற்றின் மேல் நடந்து, என்னைப் போன்ற வாண்டு நண்பர்களை ஆச்சரியமடைய வைத்த பிறகுதான் என் தகிப்பு அடங்கியது. இதுபோல் பல சம்பவங்கள்.

ஊரைச் சுற்றி திசைக்கு ஒரு கோவிலாக எட்டுக் கோவில்கள் உள்ள எங்கள் கிராமத்தின் முகப்பில், கம்பீரமாய் இருக்கும் பெரிய கோவில் அருள்மிகு கருணையானந்த சுவாமிகள் திருக்கோவில். நூற்றைம்பது ஆண்டுகட்கு முன்னால் எங்கள் குலத்தில் பிறந்த இந்த மகான் பெரிய ஞானியாகி, சித்தியும், முக்தியும் பெற்றுச் சிவமாய் அடங்கியவர் ''பாட்டையா கோவில்'' என்று உரிமையாக அந்தப் பகுதி மக்களால் அழைக்கப்படும்திருத்தலம் அது.

அக்கோவிலே எங்களுக்குத் திண்ணைப் பள்ளி, அக்கோவிலுக்குப் பூஜை செய்யும் குருநாதர் வீரபத்திர அய்யர் அவர்களே எங்கள் பள்ளிக்கும் ஆசிரியர். மற்றவர்கள் என்னை அடங்காத பையனைப் பார்த்த வேளையில், என்னை அன்பாகப் பார்த்தவர் என் ஆசிரியர். அதற்கு இரண்டு காரணங்கள்: ஒன்று, நான் தாய் தந்தையை இழந்தவன் என்பது. இரண்டு, அவரது பூசைக் கைங்கரியங்கட்கு முகம் கோணாமல் உதவியாய் இருப்பவன் என்பது.

மடப்பள்ளிப் பாத்திரங்களை விளக்குவேன், பூஜைப் பொருட்களை வாங்கி வருவேன். விறகுச் சுள்ளி பொறுக்கி வருவேன். குருநாதர் குளிப்பதற்குத் தண்ணீர் இறைத்து ஊற்றுவேன். மூன்று வேளையும் அவர் பூஜை செய்யும் முறைகளைக் கோவில் மணியை



அசைத்தபடி கூர்மையாகக் கவனிப்பேன். மறுபடியும் மனத்திற்குள் ஒரு தகிப்பு. நாமும் குருநாதர் செய்வதைப் போல் ஒரு கோவிலிற்குள் பூசை செய்யவேண்டும் என்ற தகிப்பு.

ஏரிக்கரைக் களிமண்ணில் அழகான பிள்ளையாரை உருவாக்கினேன். வீட்டு மாடியில் தற்காலிகக் கோவில் ஒன்று தயாரானது. என் வயது நண்பர்கள் நான் வைத்திருந்த சர்க்கரைப் பிரசாதத்தை நினைத்து பக்தியுடன் நிற்க, குருநாதரைப் போல் பக்தியுடன் பூசை செய்தேன். பிரசாதமும் வழங்கினேன். இது எனது நிரந்தர விளையாட்டாகவும் மாறிவிட்டது.

திண்ணைப் பள்ளியில் ஆத்தி சூடியில் தொடங்கிக் கடுமையான நிகண்டு வரை மனப்பாடம் செய்ய வைப்பார் எங்கள் குருநாதர். பொருள் புரிகிறதோ இல்லையோ எதுவாயிருந்தாலும் மனப்பாடம் செய்துவிட வேண்டும் என்பது எங்கள் குருநாதரின் கட்டளை. அந்தப் பயிற்சி எனக்குப் பிற்காலத்தில் மிகப் பெரிய அளவில் உதவியது. எதையும் செய்ய முடியாது என்று நினைப்பது எனக்குப் பிடிக்காது. அதுபோல் ஒரு முயற்சியை அரை குறையாய் நிறுத்துவதும் எனக்குப் பிடிக்காது.

ஒருமுறை எங்கள் ஊர்க்கோவிலுக்கு ஒரு சிறந்த தவயோகி வந்திருந்தார். அவர் நாள்தோறும் காலையில் கோவிலின் பின்புறத்தில் பிராகாரத்தின் உள்ளே மணலைக் கூட்டி வைத்து





மயூராசனம், சர்வாங்காசனம், சிரசாசனம் போன்ற பல்வேறு ஆசனப் பயிற்சிகள் செய்வார். மற்ற சிறுவர்களோடு சேர்ந்து நானும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பேன். மற்ற பையன்கள் வேடிக்கை பார்த்ததோடு நின்றுவிட்டார்கள். எனக்கோ வழக்கம் போல் தகிப்பு தொடங்கிவிட்டது. கூடிய சீக்கிரமே யோகியாருக்குப் போட்டியாக மணலைக் கூட்டி வைத்து, கோவில் மதிற்சுவரை ஒட்டி ஆசனப் பயிற்சியைத் தொடங்கிவிட்டேன். என் ஆர்வத்தைக் கண்ட யோகியார் எனக்கு முறைப்படி ஆசனம் செய்யப் பயிற்சி கொடுத்தார். அதோடு கோவில் பூசையில் நான் செய்து வந்த உதவிகளைக் கண்டு என் மீது மிகவும் அன்பு கொண்டார்.

அப்போது எனக்குப் பன்னிரண்டு வயதிருக்கும். அது ஒரு பௌர்ணமி நாள். காலைவேளை. தோப்போரம் இருந்த புதர்ப் பகுதியில் முழங்காலிட்டு அமர்ந்து, பூவில் தேன் எடுத்துக் கொண்டிருந்த வண்ணத்துப் பூச்சி ஒன்றைப் பிடிப்பதில் மனத்தைக் கூர்மையாக்கிக் கொண்டிருந்தேன். கிணற்றில் குளித்துவிட்டு வந்து கொண்டிருந்த யோகியார் நீண்ட நேரம் என்னைக் கவனித்துக் கொண்டே இருந்ததைப் போல் தெரிந்தது. ''தம்பி, இங்கே வா!'' என்று கூப்பிட்டார். ''இந்தப் பூச்சியைப் பிடித்து உனக்கு என்ன



ஆகப் போகிறது? என்னுடன் வா. மனிதப் பூச்சிகளைப் பிடிக்கும் மந்திரம் சொல்லித் தருகிறேன்!'' என்று கூறி அழைத்துச் சென்றார். கோவில் கர்ப்பக்கிருகத்தினுள் சென்றதும், கடவுளை விழுந்து வணங்கச் சொன்னார். அவர் சொன்னபடியெல்லாம் செய்தேன். கிழக்கு நோக்கிநிற்கவைத்தார். கைகட்டி, வாய் புதைத்துப் பணிவுடன் நின்றேன். நான் சொல்வதைத் திரும்பச் சொல் என்றபடி காதருகே குனிந்து, ''ஓம்... ஐம்... க்ரீம்... தோத்... தஸ்... சுவாக'' என்று மூன்று முறை சொன்னார். நானும் திரும்பச் சொன்னேன். இனம்புரியாத உணர்வு ஒன்று என்னை ஆட்கொண்டது. ஓய்வாய் இருக்கும்போதெல்லாம் முருகனை எண்ணி இந்த மந்திரத்தைச் சொல் என்று சொல்லி விட்டுப் போய் விட்டார். நானும் பலனைப் பற்றியோ வேறு எதைப் பற்றியோ கவலைப்படாமல் விளையாட்டாக மனத்திற்குள் சொல்லிக் கொண்டிருப்பேன்.

பக்கத்து ஊராகிய பேரையூரில் உள்ள கீற்றுக் கொட்டகையில் ஒரு முறை பட்டினத்தார் திரைப்படம் வந்திருந்தது. உறவினர் ஒருவர் படம் பார்க்க என்னை அழைத்துச் சென்றார். இளமை நிலையில்லாதது, செல்வம் நிலையில்லாதது என்பதை உணர்ந்து அனைத்தையும் உதறிவிட்டு, இடுப்பில் அரை வேட்டியுடன் துறவியாகத் திரிந்த பட்டினத்தடிகள் கதை என்னை மிகவும் பாதித்தது. ஊருக்குத் திரும்பிக்கொண்டிருக்கும்போதே மனத்திற்குள் மீண்டும் தகிப்பு. அன்றிரவே என் கால் சட்டை, மேல் சட்டை எல்லாவற்றையும் மூட்டையாகக் கட்டி மூலைக்குத் தள்ளி விட்டேன். மறுநாள் காலை முதல் இடுப்பில் துண்டை மட்டும் கட்டிக் கொண்டு திரிந்தேன். என்னப்பா சட்டையெல்லாம் சலவைக்குப் போய் விட்டதா? என்று கேட்டவர்களிடம்,

''காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே'' என்று சொல்லி விட்டுப் போய்க் கொண்டிருப்பேன். நீண்ட நாட்கள் என் பட்டினத்தார் வேடம் நீடித்தது. ''அப்பன் அரசன் போல் இருந்தான். அவன் பிள்ளை ஆண்டியாகப் போய்விட்டான்!'' என்று கிண்டல் செய்தனர். நான் ஆண்டியாக இருந்த காலம் முதல் அரசவைக் கலைஞராகப் போற்றப்பட்ட காலம் வரை போற்றி வந்த செல்வங்கள்:

1. எதையும் முடியாது என்று எண்ணாத இயல்பு.
2. எந்த முயற்சியையும் அரைகுறையாக நிறுத்தாத செயலாக்கம்.
3. மூளையின் சோம்பேறித்தனத்தை வளர்க்காமல், விடாமல் அதற்கு வேலை கொடுத்து வந்த பயிற்சி.
4. செய்யக் கடினமானதைச்



செய்ய வேண்டும் என்ற ஏ
பிறவித் தகிப்பு.

ஆகியவையே.

அருமைக் குழந்தைகளே, உங்களுக்கும் இந்தத் "தகிப்பு" உண்டாகி விட்டதா? நிச்சயம் நீங்களும் உயரலாம், உங்களுக்குப் பிடித்த துறையிலே! முயன்றால் முடியாததே இல்லை!

இரு கண்களையும் இழந்த நிலையில், நானே இவ்வளவு சிறப்புக்களை அடைந்திருக்கிறேனே! இந்த நிலையில், பார்வை உள்ள நீங்கள் தானா பாரில் சிறக்க முடியாது?

தகவல் தொகுப்பு:
இளைய அவைதானி
இரா. கனகசுப்புரத்தினம்.

இந்திய ஆசிரியைக்கு அமெரிக்க ஜனாதிபதி விருது!



திருமதி விஜயலட்சுமி ராமகிருஷ்ணன் என்ற ஆசிரியைக்கு அமெரிக்க ஜனாதிபதி விருது கிடைத்துள்ளது! அமெரிக்காவில் ராபிட் சிட்டியிலுள்ள மத்திய உயர்நிலைப் பள்ளியில் விஞ்ஞானம், கணிதம் இரண்டிலும் மிகத் திறமையாகப் பயிற்சி அளித்ததைப் பாராட்டியே இந்த விருது வழங்கப் பெற்றது.

ஜனாதிபதி விருது மட்டுமா? நேஷனல் சயன்ஸ் பவுண்டேஷன் இவருக்கு 5000 டாலரும் அளித்துச் சிறப்பித்திருக்கிறது. விஞ்ஞானத்தை மிகச் சுவையாகவும், தெளிவாகவும் போதிக்கும் இவரது திறமையின் காரணமாக இவரிடம் பயின்ற மாணவர், மாணவிகளில் பலர் தேசியப் போட்டிகளிலும், சர்வதேசப் போட்டிகளிலும் கலந்து கொண்டு வெற்றி பெற்றிருக்கிறார்கள். மாணவர்கள் மட்டும்தானா? ஏராளமான ஆசிரியர்களும், இவர் அளித்த பயிற்சியால் பெரும் பயன் அடைந்திருக்கிறார்கள்.

தாவிர இயல் பற்றி இவர் எழுதிய மூன்று நூல்களும், விஞ்ஞான இதழ்களில் இவர் வெளியிட்ட 20—க்கு மேற்பட்ட கட்டுரைகளும் இவரது திறமைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

இவரையும், இவருடன் ஜனாதிபதி விருது பெற்ற மற்றவர்களையும் கௌரவிக்கும் வகையில் வாஷிங்டனில் பல நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. அந்த விழாக்களில், விஞ்ஞானத்திலும், கணிதத்திலும் தாம் பெற்ற அனுபவங்களை இவர் பகிர்ந்து கொண்டார்.

இவரது திறமையைப் பாராட்டும் வகையில் தென் டகோட்டா மாநில கவர்னர் 1986—ஆம் ஆண்டு ஏப்ரல் 11—ஆம் நாளை 'விஜயலட்சுமி யு. ராமகிருஷ்ணன் நாள்' என்று அறிவித்தார். அந்த நாளை, மிகவும் கோலாகலமாக கவர்னரும், இவரிடம் பயின்ற, பயிலுகின்ற மாணவர்களும், மாணவிகளும் அவர்களின் பெற்றோர்களும் நன்றி தெரிவிக்கும் நாளாகக் கொண்டாடினர். 1969—ஆம் ஆண்டு நம் நாட்டிலிருந்து, தம் கணவரும் பொறியியல் பேராசிரியருமாகிய திரு ராமகிருஷ்ணனுடன் அமெரிக்கா சென்ற இவர், இந்தியாவிற்குப் பெருமை தேடித் தந்ததற்கு நாமும் அவர்களுடன் சேர்ந்து நன்றி செலுத்துவோம்.

பிருந்தாவனக் கவியரங்கம்



காந்தித் தாத்தா

மூன்றுகால் கொண்டவர்
முன்னாலே வந்தாரே
ஊன்றுகோல் ஓர்காலால்
ஊன்றியே வந்தாரே

வட்டவட்டக் கண்ணாடி
மகிழ்ந்து போட்டிருந்தாரே
கிட்டகிட்ட வரச்சொல்லி
குனிந்து என்னைப்பார்த்தாரே

உனக்கு யாரைப் பிடிக்கும்
உலகிலே என்றாரே
எனக்குஉங்களைப் பிடிக்கும்
எப்போதும் என்றேனே

வந்தகாந்தித் தாத்தாவும்
வாய்திறந்து சிரித்தாரே
இந்தஅம்மா எழுப்பவே
என்கனவும் கலைந்ததே!

— எஸ். விஜயநந்தினி (7431)
திருச்சி—20

தென்னை மரம்

எங்கள் வீட்டுத் தென்னைமரம்,
என்றும் தேங்காய் கொடுக்கும்மரம்.

தேங்காய் என்று நினைத்ததுமே
தேனைப் போல இனிக்கிறதே.

இளநீர் குடித்தால் நம்முடைய
களைப்பு நீங்கும் அப்பொழுதே..



அடியில் ஊற்றிய நீரினையே
அமுத மாக்கித் தருகிறது.

கூந்தல் கட்டக் குருத்துகளும்
குடிசை கட்ட ஓலைகளும்

வாழை போலப் பலஉதவி
வழங்கும் தென்னை மரமன்றோ?

— பா. நந்தகுமார் (11,409),
திருச்செங்கோடு.

மானும் நானும்

அந்தி சாயும் வேளையிலே
ஆர வாரக் குரல்கேட்டுச்



சற்றே வெளியில் வந்தேனே;
சுற்றிலும் உற்றுப் பார்த்தேனே.

கார்முகில் எங்கும் வானத்தைக்
கவ்வி யிருக்கக் கண்டேனே.


வாசல் புறத்தில் பார்த்தேனே!
மயங்கிக் கிடந்த மான்ஒன்றை!

காலில் கண்டேன் காயத்தை
களிம்பு தடவிக் காத்தேனே.

மனமும் திருப்தி அடைந்ததுவே.
மழையும் பெய்யத் தொடங்கியதே!

— செ. சரவணகோபால் (13,252),
திருச்செங்கோடு.

தட்டச்சு



எந்தன் அருமைத் தட்டச்சு.
என்றும் உதவும் பொறிஅச்சு.

டப்டப் ஒலிக்கும் தட்டச்சு.
நன்றாய் அடிக்கச் சொல்லிச்சு!

ஆர்வம் பொங்க அடித்தேனே.
அழகாய் எழுத்தைப் பதித்தேனே.

அச்சுப் போல அடித்திடலாம்.
அடித்து அழகாய் முடித்திடலாம்.

அடிக்கத் தெரிந்தோர் அனைவர்க்கும்
அவசியம் உதவும் தட்டச்சு.

எந்தன் அருமைத் தட்டச்சு.
என்றும் உதவும் பொறியச்சு.

— இரா. கணேஷ் (6563), கிருஷ்ணகிரி.

பாருங்கள்



படகைக் கொஞ்சம் பாருங்கள்.
பாங்குடன் அக்கரை சேர்த்திடுதே!


மெழுகைக் கொஞ்சம் பாருங்கள்.
மெலிந்தும் ஒளியை வழங்கிடுதே!

பசுவைக் கொஞ்சம் பாருங்கள்.
பரிவுடன் பாலைப் பொழிந்திடுதே!

அடுத்தவர்க் குதவும் அருங்குணங்கள்
அவற்றிட மிருந்து நாம்பெறுவோம்!

— இல. நடேஷ்பாபு (3884),
மணப்பாறை.





வருங்கால நட்சத்திரங்களுக்கு ஒரு போட்டி!

விளையும் பயிருக்குக் கிரிக்கெட்டில் ஆர்வம் மிகுந்திருப்பதற்குப் பள்ளிப் பருவத்திலேயே அவர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் தருவதாகும். பதினைந்து வயதிலிருந்து பத்தொன்பது வயது வரையுள்ள 'இளைஞர்களுக்கு வெள்ளிவிழாப் போட்டி, ஸி. ராமசாமி கோப்பைப் போட்டிகள் உதவுகின்றன. மாவட்டங்களிலுள்ள பள்ளி மாணவர்களுக்கு ஏதாவது போட்டி உண்டா என்று நீங்கள் கேட்பது காதில் விழுகிறது. மாவட்டப் பள்ளிச் சிறுவர்களின் திறமையைச் சோதிக்க ரத்னவேலுத் தேவர் கோப்பைப் போட்டியை நிறுவியிருக்கிறார்கள். நகரப் பள்ளி மாணவர்களும், மாவட்டப் பள்ளி மாணவர்களும் போட்டியிட என். ஆர். சாமியப்ப முதலியார் கிரிக்கெட் போட்டி நடைபெற்று வருகிறது. இந்த மூன்று கிரிக்கெட் போட்டிகளிலும் தேர்ந்த இளைஞர்கள்தான் ராஜ்ய கிரிக்கெட் ஆட்டக்காரராக வருவதற்கு வாய்ப்பிருக்கிறது. தென்னிந்திய ராஜ்யங்களுக்கிடையேயான பள்ளி மாணவர்கள் கிரிக்கெட் போட்டி மிகவும் பிராபல்யமானது. குலாம் அஹமது கோப்பை இந்தத் தென்னிந்திய ராஜ்யங்களுக்கான மாணவர் போட்டியாளருக்கு வழங்கப்படுகிறது. ஒவ்வொரு வருஷமும் தலைசிறந்த பள்ளி மாணவனுக்கு ஸி. சுப்பிரமணியம் கோப்பையும், ஜூனியர் கிரிக்கெட் ஆட்டக்காரருக்கு டி ஆல்விஸ் கோப்பையும் வழங்கப்படுகின்றன.

பள்ளி மாணவர்கள் கிரிக்கெட்டின் தந்தை என்று வி. பட்டாபிராமனைக் குறிப்பிடுகிறார் கிரிக்கெட் கண்ட்ரோல் போர்டு தலைவர் ஸ்ரீராமன். வி. பட்டாபிராமன் நினைவுப் பரிசுகள் தமிழ்நாட்டிலுள்ள நகரப் பள்ளி மாணவர்களுக்கும் மாவட்டப் பள்ளி மாணவர்களுக்கும் திறமை அறிந்து வழங்கப்படும் பரிசுகளாகும். கூச் பிகார் கோப்

குண்டுமணி

பைப்பந்தயம் இளமைச் சிறுவர்களின் திறமையைச் சோதிக்கும் போட்டியாகும். கிரிக்கெட்டிலும் படிப்பிலும் தலைசிறந்த மாணவர்களைக் கௌரவிக்கூடி. சீனிவாசராகவன், ஜே. சுப்புஸ்வாமி, எம். வேங்கட்ராமானுஜுலு, எஸ். கே. குருநாதன் நினைவுப் பரிசுகள் இருக்கின்றன. தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் எம். ஏ. சிதம்பரம் பள்ளி மாணவர்களுக்கான திறமைப் பரிசுகள் வழங்குவதற்கான வழிவகைகளை வகுத்திருக்கிறார். பிருத்திவி கிரிக்கெட் கிளப், யங் மென் அசோஸியேஷன் ஸ்காலர்ஷிப்கள் இளம் கிரிக்கெட் ஆட்டக்காரர்களுக்கு வழங்கி வருகின்றன. கிரிக்கெட் கிளப்களின் உதவியால் மாணவ கிரிக்கெட் திறமைசாலிகளுக்குப் பயிற்சி முகாம்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பதினைந்து வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்கான கிரிக்கெட் பந்தயம் நகர, மாவட்ட மாணவர்களுக்காக நடத்தப்படுகிறது. பதினைந்து வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கான தெற்கத்தியப் பிரிவு கிரிக்கெட் பந்தயம் விஜய் மர்ச்செண்ட் கோப்பையாகும். கிரிக்கெட் அடித்தளத்தில் பன்னிரண்டு வயதுக்குட்பட்ட மாணவர்களுக்காகத் தெற்கத்தியப் பிரிவுப் பந்தயம் முதன் முதலாக ஹைதராபாத்தில் 1985 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்தப் பன்னிரண்டு வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான பந்தயத்தில் தமிழ்நாடு, ஹைதராபாத், ஆந்திரா, கர்நாடகம், கேரளா, கோவா மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்டனர். போட்டியை நடத்துவதற்கு யோசனை கூறியவர் பிரபல டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டக்காரர் ஜெயசிம்மா. இந்த யோசனையை அமுலுக்குக் கொண்டு வருவதற்கு நியூட்ரீன் நிறுவனம் நிர்வாக டைரக்டர் பி. வாசுரெட்டியின் அக்கறையும் உற்சாகமும் வழிவகுத்தன. 1985 ஆம் வருஷம் ஹைதராபாத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாத் மாணவர்கள் வெற்றிக் கொடி நாட்டினார்கள். தமிழக மாணவர்கள் ரன்னர் கோப்பையைப் பெற்றார்கள்.

இரண்டாவது நியூட்ரீன் 'ஸூப்பர் ஸ்டார் கிரிக்கெட் போட்டி நியூட்ரீன் நிறுவனமும் தமிழக கிரிக்கெட் கழகமும் இணைந்து சிதம்பரம் ஸ்டேடியத்தில் நடக்க உதவியுள்ளன. இந்த இளம் கிரிக்கெட் ஆட்டக்காரர்களுக்குப் பயிற்சி முகாம் நடத்தித் தேர்ந்தெடுக்க உதவியவர் ஜெயசிம்மா.

முன்னாள் டெஸ்ட் வீரர் ஜெயசிம்மாவிடம் இந்த இளம் கிரிக்கெட் ஆட்டக்காரர்களின் திறமையைப் பற்றிக் கேட்டபோது, "ஆறு மாநிலங்களைச் சேர்ந்த முப்பது இளம் கிரிக்கெட் சிறுவர்களுக்குப் பதினைந்து நாட்கள் பயிற்சி அளித்தோம்., இந்த இளம் கிரிக்கெட் வித்துக்களில் நல்ல திறமை பொதிந்திருக்கிறது! பாட்டிங், பௌலிங், உடல் வாகு, பீல்டிங் எல்லாத் துறைகளிலும் சிறுவர்கள் அக்கறை கொண்டிருப்பதைக் கண்டேன்! நியூட்ரீன் பன்னிரண்டு வயதுக்குட்பட்ட இளம் சிறுவர்களுக்கு ஒரு போட்டி நடத்த வந்தது போற்றுதற்குரியது! இந்த இளம் சிறுவர்களில் வருங்கால கபில் கவாஸ்கர் உருவாவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது!" என்றார்.

கிரிக்கெட் கண்ட்ரோல் போர்டின் தலைவர் எஸ். ஸ்ரீராமன் பன்னிரண்டு வயதுக்குட்பட்ட இளம் சிறார்களுக்கான கிரிக்கெட் போட்டியைத் தொடங்கி வைத்தார். தமிழ்நாடு, கேரளம், ஆந்திரா, கர்நாடகம், ஹைதராபாத் இளம் சிறுவர்களுக்குக் கிரிக்கெட் உடைகளும் தொப்பியும் தந்து



உதவியுள்ளது நியூட்ரீன் நிறுவனம். பிரபல டெஸ்ட் ஆட்டக்காரர்கள் ஆடிய சிதம்பரம் ஸ்டேடியத்தில் இந்த இளம் குருத்துக்களின் போட்டிகள் நடைபெறத் தொடங்கின.

கிரிக்கெட்டில் சுடர்விடும் சில நட்சத்திரங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள அந்தந்த மாநில கிரிக்கெட் மானேஜர்களை அணுகினோம்.

தமிழகக் கிரிக்கெட் பற்றி மானேஜர் நந்தகுமார் சொல்கிறார்: "தமிழகக் குழுவின் காப்டன் ஸ்ரீராம். இவர் இடதுகைசுருள்பந்து வீச்சாளர். நல்ல பாட்ஸ்மன். சென்ற தடவை போட்டியில் இவர் நாலு விக்கெட்களை வீழ்த்தியது தனிச்சிறப்பு. தமிழகத்துக்கு ஆடும் மாணவன் நவீன், ஆப் ஸ்பின்னர், பாட்ஸ்மன். நகர, மாவட்டப் போட்டிகளில் கண்டெடுத்த தங்கம். மதனகோபால் நல்ல பாட்ஸ்மன். முன்னுக்கு வரும் புள்ளி. கற்பக வேல் லெக்ஸ்பின்னர்! டான் பாஸ்கோ பள்ளி மாணவன் சத்ய மேடப்பா மத்திம விரைவுப் பந்து வீச்சாளன். வெங்கட்டிடமே பயிற்சி பெற்ற அவரது புதல்வன் விக்ரம் 'பாட்டிங்'கில் கவனம் செலுத்துகிறான்!"

கர்நாடகக் குழுவுக்குப் பயிற்சி அளிப்பவர்கள் பி. எஸ். விஸ்வநாத்தும், நாராயணனுமாவர். முன்னாள் ரஞ்சி ஆட்டக்காரர் எஸ். மகேந்திராதம் கர்நாடகக் குழுவின் சிறப்பியல்புகளைத் தருகிறார்.

"கர்நாடகக் குழுவின் காப்டன் ஏ. விஜய் மத்திய விரைவுப் பந்து வீச்சாளன். நடுத்தர பாட்ஸ்மன். ஜெய சிம்மா வருங்கால கிரிக்கெட் நட்சத்திரம் என்று போற்றுவது வால்மீகி என்.பூச்சாகும்.பெங்களூர்செயிண்ட் ஜோசப் பள்ளியில் ஆறும் வகுப்பு மாணவன். வருங்கால கிரிக்கெட் நட்சத்திரமாக உருவாகும் திறமை உண்டு!"

கேரள விளையாட்டுத்துறை கோச் கணேஷ் கேரள மாணவர் குழுவுக்குப் பயிற்சி அளிப்பவர்.

"1985 ஹைதராபாத்தில் நடைபெற்ற பந்தயத்தில் தமிழ்நாட்டுடன் மோதிக் கேரளம் தோல்வியுற்றது. கேரள குழுவுக்குக் காப்டன் அனுப் நாயர். முருகன் விரைவுப் பந்து வீச்சாளர். ஜோதிபாசு லெக் ஸ்பின்னர். ராஜேஷ் ஆப்ஸ்பின்னர். முன்னாள் ரஞ்சி ஆட்டக்காரர் மதன் மோகனின் புதல்வர் சந்தீப் மோகனும் கேரளக் குழுவில் ஆடுகிறான்," என்று வர்ணனை தருகிறார் கணேஷ்.

ஆந்திராவின் அதிர்ஷ்டம் முதல் மாட்ச் "வாக் ஓவர்!" கோவாவில் பதற்ற நிலை காரணமாகக் கோவா குழு பங்கேற்கவில்லை.

ஆந்திரக் குழுவின் மானேஜர் ஏ. சந்திரசேகர் ஆந்திரக் குழுவின் திறமைகளை விளக்குகிறார். "ஆந்திரக் குழுவுக்குக் காப்டன் வேணுமாதவ் சிங். ஆல்ரௌண்டர். மேலும் ஜகதீஷ், பிரசாத், இரண்டு பேரும் ஆல்ரௌண்டர்கள். மத்திய விரைவுப் பந்து வீச்சாளன் நரசிம்மராவ். ஆந்திரக் குழுவுக்குப் பயிற்சியாளர் சி. மகேந்திரகுமார். எட்டு நாட்கள் இந்தச்சிறுவர்களுக்குப்பயிற்சிமுகாம் நடத்தியிருக்கிறார். ஆந்திரா இறுதி ஆட்டம் வரை கலந்து கொள்ளும் என்ற நம்பிக்கை இருக்கிறது!"

ஹைதராபாத் குழு சென்ற வருஷ சாம்பியன். இந்த வருஷம் ஹைதராபாத் குழு தோல்வியுற்று, ஆந்திரக் குழுவும் கர்நாடகக் குழுவும் இறுதி ஆட்டத்தை ஆடத் தகுதி பெற்றன. கர்நாடகக்குழுவின் காப்டன் ஏ.விஜய்யும் கர்நாடகக் குழுவைச் சேர்ந்த அருண்குமாரும் தலைசிறந்த விளையாட்டுக்காரர்கள் என்ற கோப்பையைப் பெற்றனர். கர்நாடகக் குழு நியூட்ரீன் கோப்பையைப் பெற்றதற்கு அதன் சிறப்பான ஆட்டமே காரணமாகும். பாட்டிங், பௌலிங், பீல்டிங் அனைத்திலும் கர்நாடக அணி சிறப்பாக மிளிர்ந்தது.

தமிழககிரிக்கெட் சங்கத்தின் காரிய தரிசி வேங்கடராகவன் இந்தப் பன்னிரண்டு வயதுக்குட்பட்ட சிறுவர்களின் போட்டி அகில இந்திய அளவில் வெற்றி பெற வாய்ப்புண்டு என்ற நம்பிக்கை தெரிவித்தார். கர்நாடகம், ஆந்திரம், கேரளம், தமிழக அணிகளிலிருந்து ஐந்து தலைசிறந்த சிறுவர்கள் பயிற்சி முகாமுக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டு, அவர்களுக்கு இடையறாத பயிற்சி கொடுக்கவிருப்பது பாராட்டுக்குரியது.

புதையல் வீடு

டாக்டர் பூவண்ணன்



5. வாண வேடிக்கை

'செங்கோடா!' என்னும் குரலைக் கேட்டுத் திரும்பினான், செங்கோடன்.

அருகே தலைமை ஆசிரியர் நின்று கொண்டிருந்தார்.

''செங்கோடா! இடைவேளைக்கு வெளியே போன மாணவர்கள் திரும்பிவரலையே? எங்கேபோனாங்க? ஒவ்வொருவகுப்பிலும்பாதிமாணவர்கள்தான் இருக்கிறாங்க?''

தலைமையாசிரியர் சொன்னதும், செங்கோடன் சிறிது முன்னே, தான் கண்ட காட்சியை விவரித்தான்.

''அப்படியா? ஊருக்குள்ளே யாரு வந்திருக்காங்க?''

''என் காதிலே அது விழலைங்க. ஐயா, நான் வேண்டுமானால் ஊருக்குள்ளே போய்ப் பார்த்துட்டு வாரேன்!''

''போய்ப் பார்த்துட்டு வா! நம்ம மாணவர்கள் அங்கே இருந்தா அழைச்சிட்டு வா.''

''ஆகட்டும், ஐயா.''

செங்கோடன் பள்ளியின் ஒரு பகுதியில் நிறுத்தி வைத்துள்ள சுமதியின் சைக்கிளை எடுத்துக் கொண்டான். மாணவர்கள் ஓடிய திசையில் சைக்கிளைச் செலுத்தினான். வழியில் பெரியவர்களும் சிறுவர்களுமாகச் சிலர் ஓட்டமும் நடையுமாய்ச் சென்று கொண்டிருந்தார்கள். அவர்களை முந்திக் கொண்டு செங்கோடனின் சைக்கிள் சென்றது.

ஊர்க் கோடியில் ஒரு பெரிய வீட்டின் வெளியே ஒரு வெள்ளை வேன் நின்றிருந்தது. அந்தவீட்டுக்குமுன்னே பெருங்கூட்டம். அந்தக் கூட்டத்தில் மாணவர்கள் இருப்பதைக் கண்ட செங்கோடன் அங்கே வந்தான்.

''இத்தனை கூட்டம், இந்தக் காலை நேரத்திலே கூடுகிற அளவு யார் வந்திருப்பாங்க?'' என்று யோசித்துக் கொண்டே, செங்கோடன் சைக்கிளை ஒருபுறம் நிறுத்திவிட்டுக் கூட்டத்தில் நுழைந்தான். அடுத்த நிமிடமே அங்கே யார் வந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்டான்.

தற்போது தமிழ்நாட்டில் எந்தப் பாகுபாடுமின்றி எல்லோரும் விரும்புவது சினிமா. மக்களை ஆளுகின்ற அமைச்சர்களின் பெயரும் முகமும் பெரும்பாலோருக்குத் தெரியாது. ஆனால், சினிமா நட்சத்திரங்களைக் குழந்தை முதல் கிழவர் வரை எல்லோருக்கும் தெரியும். நேற்றுத்தான் அறிமுகமான புதுமுகங்களைக் கூட இன்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள். முன்பு சினிமாப் பத்திரிகைகள்தாம்



புற்று நோய்க்கு வேப்பங்குச்சி

டேவிட் பர்னெஸ் என்ற அமெரிக்க டாக்டர் புற்று நோயைத் தடுக்க வேப்பங் குச்சி பயன்படும் என்ற உண்மையைக் கண்டுபிடித்துள்ளார். புற்றுநோய்த் தடுப்பு மருந்தாக வேம்பைப் பயன்படுத் தலாம் என்பது நமக்கெல்லாம் இனிப் பான செய்தி! வேப்பங்குச்சியால் பல் துலக்குபவர்களுக்கு வாய்ப் புற்று நோய் வரவே வராது!

— கீதா பஞ்சு.

நடிக நடிகையரைப் பற்றி எழுதும். இப்போது வார இதழ், மாத இதழ் மட்டுமல்லாமல், தினசரிச் செய்தித் தாள்களும் சினிமாவுக்கு முக்கியத்து வம் கொடுத்து வருகின்றன. அதனால், தமிழ்நாட்டில் பட்டிக்காடு முதல் பட்டணம்வரை சினிமாவின் ஆதிக்கம் செங்கோலோச்சுகிறது. இதற்கு விஜய மங்கலமும் விதிவிலக்கன்று!

திரை உலகில் புதிய இயக்குநர்கள் புகுந்து, கிராமங்களிலேயே படங் களை உருவாக்கி வெளியிட்டனர். அத்தகைய சிலர் கொங்கு நாட்டு ஊர் களை நோக்கிப் படையெடுத்தனர்.

விஜயமங்கலம் மக்களுக்கு ஓர் ஆசை! 'கொங்கு நாட்டைச் சார்ந்த இயக்குநர்கள் சிலர் புகழ்பெற்றிருக்கி றார்களே, அவர்களில்யாராவது விஜய மங்கலத்துக்குப் படமெடுக்க வரமாட் டார்களா?' என்று ஓர் ஏக்கம்.

"ஊட்டியையும்குன்னூரையும்விட் டுட்டு, சிறுவாணியையும் திருமூர்த்தி மலையையும் விட்டுட்டு, எவன்டா நம்ம காஞ்சு போன ஊருக்குப் பட மெடுக்க வரப்போறான்?" இப்படிச் சிலர் அலுத்துக் கொண்டனர்.

"வருவான்! சத்யஜித்ரேன்னு ஒரு டைரக்டர்! அவர் இப்படி வறண்ட நிலம், காஞ்சு போன ஊருன்னு தேடித் தேடிப் போய் இந்தியாவின் வறுமையைப் படம் எடுப்பாராம்! அவர் ஒருநாள் நம்ம ஊரைத் தேடி வருவார், பார்," என்று சினிமா ஞானம் உள்ள ஒருவன் அடிக்கடி சொல்லிக்கொண்டிருப்பான். அவன் கிண்டல்செய்கிறானா, நம்பிக்கையூட்டு கிறானா என்பதே மக்களுக்குப் புரியாது!

எப்படியோ, அவன் வாக்குப் பலித்து விட்டது! சத்யஜித் ரே வர வில்லை என்றாலும் யாரோ ஒருவன் விஜயமங்கலத்தைத் தேடிப் படம் எடுக்க வந்து விட்டான். அன்று காலை அந்த ஊருக்குப் புதிதாக வந்தவர்கள், சினிமாக்காரர்கள். அதனால் மாண வர்களும் மற்றவர்களும் மட்டற்ற மகிழ்ச்சியுடன் அந்தச் சினிமாக்காரர் கள் இறங்கியிருக்கும் வீட்டைச் சுற்றி முற்றுகையிட்டனர்.

செங்கோடன் அந்தக்கூட்டத்தில் நுழைந்து "சினிமாக்காரர்கள் வந்தி ருக்கிறார்கள்" என்பதை மட்டும் அறிந்தான். அங்கே நின்றிருந்த வேனில், 'பாபு அவுட் டோர் யூனிட், சென்னை — 34' என்று எழுதியிருந் ததைப் பார்த்தான். மற்றபடி, எந்த நடிகர், எந்த இயக்குநர் வந்திருக் கிறார் என்ற விவரம் தெரியவில்லை. செங்கோடன் மாணவர்களிடம் தலைமை ஆசிரியர் கூறியதைச் சொல்லிப் பள்ளிக்குத் திரும்ப வேண் டினான். சாதாரணமாகச் செங்கோடன் சொல்லுக்குக் கட்டுப் படும் மாணவர்கள் இன்று அவன் சொல்வதை ஏற்கும் நிலையில் இல்லை.

செங்கோடன் அங்கிருந்து புறப்படு வதற்குள் மேலும் கூட்டம் கூடியது. ஒருவழியாகப் பள்ளிக் கூடத்தை அடைந்த செங்கோடன், தலைமை ஆசிரியரிடம் செய்தியைச் சொன் னான். அவன் சொன்ன செய்தி மெது வாகப் பரவியது. மூன்றாவது மணி அடித்த போது பள்ளியிலிருந்த பாதி மாணவர்களிலும் பெரும்பாலோர் மெல்ல நழுவிவிட்டனர். நான்காம் பீரியட் நடந்த போது பள்ளியைச் சுற்றிப்பார்த்ததலைமைஆசிரியர் திடுக் கிட்டார். ஒவ்வொரு வகுப்பிலும் விரல் விட்டு எண்ணக் கூடிய மாண வர்களே இருந்தனர்.

ஆசிரியர் ஒருவர், "சார்! பிற்பகல் யாரும் வகுப்புக்கு வர மாட்டார்கள். பேசாமல் விடுமுறை விட்டுவிட

லாம்'' என்று யோசனை கூறினார்.

தலைமை ஆசிரியர் அன்று பிற்பகல் விடுமுறை விடவில்லை. ஆனால், மறு நாள் விஜயமங்கலத்தில் படப்பிடிப்பு இருந்தது. அதனால் மாணவர்கள் பள்ளிக்கு வரவில்லை. தலைமை ஆசிரியர் வேறு வழியில்லாமல் விடுமுறை விட்டார்.

மூன்றாம் நாள் பள்ளிக்கு விடுமுறை விடவில்லை. என்றாலும் பெரும்பாலான மாணவர்கள் படப்பிடிப்பு நடக்கும் இடத்திலேயே சுற்றுச் சுவர் போலச் சூழ்ந்து நின்றனர்.

வயல்வெளியில் யாரோ ஒரு நடிகை நடனம் என்னும் பேரால் ஓடினாள்; நின்றாள்; குனிந்தாள்; நிமிர்ந்தாள். அவள் அழகாக இருந்தாள். ஆனால், இதற்கு முன் படத்தில் தோன்றாத புதுமுகமாம், பெயர் லாவண்யா. மற்றொரு நடிகை வந்திருந்தாள். அவள் பெயர் சொர்ணகுமாரி. அவளும் புதுமுகமாம். இயக்குநர் பெயர் பத்மராஜ். அவரும் புதிய இயக்குநர். படத்தயாரிப்பாளர் பாபு இதற்குமுன் தெலுங்குப் படங்கள் எடுத்துள்ளாராம். இதுதான் அவருக்குமுதல்தமிழ்ப் படம். 'திரைப்படக் கல்லூரியில் பயின்ற இளம் கலைஞர்களை வைத்துப் புதுப்படம் தயாரிக்கிறேன். படம் வெள்ளிவிழாக் கொண்டாடும் என்பது நிச்சயம்' என்று நம்பிக்கையோடு சொன்னார்.

எல்லாரும் புதுமுகங்கள் என்பதால் விஜயமங்கலமக்களுக்குக்கொஞ்சம் ஏமாற்றம். என்றாலும் அவர்கள் வாழ்க்கையில் முதல் முதலாகப் படப்பிடிப்பை நேரில் காண்பதால், உற்சாகம் குறையவில்லை. 'எல்லாரும் புதுமுகங்கள்' என்பதைக் கேட்டுச் சோர்ந்த மக்கள், அடுத்த நிமிடமே உற்சாகம் அடைந்தனர். காரணம், அடுத்த வாரம் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அந்தப் படத்தில் கௌரவ நடிகராக நடிக்க அந்த ஊருக்கு வரப் போகிறார். இதைக் காட்டிலும் வேறு என்னவேண்டும்? ரஜினிவரும்நாளில் விஜயமங்கலமே விழாக் கோலம் கொள்ளும்படி செய்ய வேண்டும் என்று சிலர் திட்டம் போட்டனர்.

அது நான்காம் நாள்! காலை நேரம்! மணி எட்டு! செங்கோடன் சுமதி வீட்டுக்குப் போனான்.

''வா, செங்கோடா! சுமதி டிபன் சாப்பிடறா. நீயும் சாப்பிடலாம், வா'' என்று அன்போடு அழைத்தாள், பத்மா.

''வேண்டாம்மா. நான் சாப்பிட்டாச்சு. காப்பி மட்டும் கொடுங்க'' என்று கூறிவிட்டுத் திண்ணையில் உட்கார்ந்தான். சில நிமிடங்களில் சுமதி அங்கே வந்து சேர்ந்தாள்.

''என்ன செங்கோடா! படப்பிடிப்பு நடக்கிற வரை பள்ளிக்கூடம் சரியா நடக்காதே. நீ இவ்வளவு சீக்கிரமா வந்துட்டே'' என்று கூறிக்கொண்டே சுமதி எதிர்த் திண்ணையில் உட்கார்ந்தாள்.

செங்கோடன் உடனே பதில் பேசவில்லை. ஏதோ யோசித்துக் கொண்டிருந்தான்.

''செங்கோடா, என்ன விஷயம்?''

செங்கோடன்சுமதியைப்பார்த்துப் பேசினான்:

''காலையிலே எங்க வீட்லே பழையதுதான். இன்னிக்கு வீட்டிலே உப்பில்லே. அதனாலே விடிஞ்சதும் என்னை உப்பு வாங்கிட்டு வரச் சொல்லி அம்மா அனுப்பினாங்க. உன் சைக்கிளை இங்கே விட்டுட்டேன். அதனாலே நடந்து வந்தேன். சினிமாக்காரங்க தங்கியிருக்கிற வீட்டு வழியா வந்தபோது, மொட்டை மாடியிலே யாரோ நிக்கறது தெரிஞ்சது. சிவப்பு நிற லுங்கி அணிஞ்ச ஒருத்தன், கழுத்திலே மைனர் செயின் போட்டுக்கிட்டு, கையிலே இரும்பு வளையம் மாட்டிக்கிட்டு இருந்தான். நான் அவனையே



பார்த்துக்கிட்டு நடந்தேன். அவன் பார்வை என் மீது பட்டதும், திடீர்னு உட்கார்ந்துட்டான். அதனாலே அவனை மேலும் பார்க்க முடியலே!''

''உன்னைப் பார்த்ததும் அவன் ஏன் உட்கார்ந்துட்டான்?'' — சுமதி கேட்டாள்.

''அதுதான் எனக்குத் தெரியலே. உடனே நான் அருகேயிருந்த மரத்தின் பின்னால் மறைந்து நின்றேன். கொஞ்ச நேரத்திலே அவனே மெல்ல எழுந்து நின்றான். நான் இருக்கிறேனான்னு கவனிக்கிற மாதிரி தெருவிலே இரண்டு பக்கமும் பார்த்தான். அப்புறம் மொட்டை மாடியிலேருந்து இறங்கிப் போனான். நான் மரத்தின் பின்னாலேயே நின்னுக்கிட்டிருந்தேன். ஒரு அஞ்சு நிமிஷத்துக்குப் பிறகு அவன் வெளியே வந்தப்போ நான் திகைச்சுட்டேன்.''

''ஏன்?''

''இப்போ அந்த ஆசாமி முகத்திலே குறுந்தாடி இருந்தது! முதல்லே நான் பார்த்த போது தாடியில்லே!''

''அப்படின்னா யாரோ தம்மை வெளிப்படுத்திக்காம தாடி ஒட்ட வச்சுக்கிட்டு இருக்கிறாங்கன்னு சொல்லு!''

''ஆமாம் சுமதி. அந்த ஆசாமி தான் படத்தயாரிப்பாளர் பாபு. ஒரு படத்தயாரிப்பாளர் எதுக்குப் பொய்த் தாடியோட இருக்கணும்? நேத்து நான் பள்ளிக்கூடத்திலே இருந்த சமயம், வயல் வெளியிலே படப்பிடிப்பு நடந்துக்கிட்டிருந்தப்போ இந்தப் பாபுவும் இன்னொருத்தனும் பெருமாள் கோயிலைப் பார்க்க வந்தாங்கன்னு அம்மா சொன்னாங்க. அவங்க பெருமாள் கோயிலைப் பார்க்க வந்தாங்களா? எங்க வீட்டைப் பார்க்க வந்தாங்களான்னு இப்போ சந்தேகமாய் இருக்கு.''

''இந்த ஊருக்கு வந்திருக்கிற சினிமாக்காரங்க நிஜமானவங்களா, போலியான்னு சந்தேகப்படறே! இல்லையா?''

''ஆமாம, சுமதி.''

''சரி. நான் விசாரிச்சு இன்னைக்குச் சாயந்திரமே சரியாச் சொல்லிடறேன், வந்திருக்கிற சினிமாக்காரங்க ஊராரிடம் சொன்ன தகவல்களை எல்லாம் எங்கிட்டே இன்னொரு தரம் சொல்லு!''

செங்கோடன் சொல்லி முடித்தான். ''அது சரி சுமதி. இவங்க போலியா, இல்லையான்னு எப்படிக் கண்டுபிடிப்பே?'' என்று கேட்டான்.

''கண்டுபிடிக்கிறேன். வேணும்னா நீயே இன்னும் அரை மணி நேரம் எங்கூட இருந்து தெரிஞ்சுக்கோ.''

சுமதி சொன்னாள். செங்கோடன் அவளுடனே இருந்தான்.

சரியாக ஒன்பது மணிக்கு முத்து சாமியின், 'பத்மா பார்மஸி'யில் சுமதி தொலைபேசியைச் சுழற்றி, சென்னை விருகம்பாக்கத்தில் உள்ள தன் தோழி மஞ்சுளாவை அழைத்தாள்.

மஞ்சுளா சுமதியின் உயிர்த் தோழி. தொலைபேசியில் சுமதியின் குரலைக் கேட்டதும் துள்ளினாள். ''சுமதி! எப்படி இருக்கே. நீ இல்லாம எனக்குப் பள்ளிக்கூடமே வெறுத்துப் போச்சு. எப்ப திரும்பி வருவே?'' என்று தன் பாசத்தை வெளிப்படுத்தினாள். பிறகு சுமதி பேசினாள்.

''மஞ்சு, எனக்கு ஓர் உதவி செய்யணும். சென்னையிலே பாபு மூவீஸ்னு ஒரு படக்கம்பெனி இருக்கா?



அதன் தயாரிப்பாளர் பெயர் பாபு என்பதும் அவர் பல தெலுங்குப் படங்களைத் தயாரித்திருக்கிறார் என்பதும் உண்மையா? அந்தப் பேரிலே ஒரு குழு இந்த ஊருக்கு வந்திருக்கு. டைரக்டர் பத்மராஜ், நடிகைகள் லாவண்யா, சொர்ணகுமாரி — எல்லாரும் புதுமுகங்களாம். தமிழ்ப் படம் எடுக்கிறாங்க. இன்னும் பெயர் வைக்கலையாம். அடுத்த வாரம் ரஜினிகாந்த் இந்தப் படத்திலே கௌரவ நடிகரா நடிக்க இந்த ஊருக்கு வராராம். இந்த விவரங்கள் எந்த அளவுக்கு உண்மைன்னு உங்கப்பா கிட்டே கேட்டு வை. நான் இரவு எட்டு மணிக்கு போன் செய்யறேன்!''

சுமதி ஒருவழியாகத் தொலைபேசியைக் கீழே வைத்தாள்:

சென்னையில் ஒரு பிரபலமான சினிமா பத்திரிகையின் ஆசிரியர் மகள் மஞ்சுளா. அவளுக்கு இந்த விவரங்களை அறிவது எளிது என்பது சுமதிக்குத் தெரியும்.

அன்றிரவு சுமதி மஞ்சுளாவுடன் தொலைபேசியில் பேசிய போதும், செங்கோடன் அருகே இருந்தான்.

பாபு மூவீஸ் என்று எந்தச் சினிமாக் கம்பெனியும் தமிழ்ப் படம் எடுக்கவில்லை. படம் எடுப்பதானால் ஃபிலிம் சேம்பரில் பதிவு செய்திருக்கும். அப்படிச் செய்ததாகத் தெரியவில்லை. பாபு என்று தெலுங்குப் படத் தயாரிப்பாளர் இருக்கிறார். அவர் கம்பெனிக்கு பாரத் மூவீஸ் என்று பெயர். பத்மராஜ் என்று புது இயக்குநர் இருந்தால் அவர் டைரக்டர்களின் சங்கத்தில் உறுப்பினராகி இருக்க வேண்டும். அந்தப் பெயரில் யாரும் உறுப்பினராகவில்லை. லாவண்யா, சொர்ணகுமாரி என்று இரண்டு துணை நடிகைகள் இருக்கிறார்கள். ரஜினிகாந்த் படப்பிடிப்புக்காக இன்றுதான் ராஜஸ்தான் பயணமானார். அவர் பதினைந்து நாளுக்குப் பிறகுதான் திரும்பி வருவார்.— இவ்வளவும் மஞ்சுளாவின் தந்தை அறிந்து கூறிய ஆதார பூர்வமான உண்மைகள். இவற்றை மஞ்சுளா சுமதிக்குச் சொன்னாள்.

சுமதி செங்கோடனிடம் மஞ்சுளா சொன்னவற்றைச் சொன்னாள்.

''அப்படின்னா, இவங்க எதுக்காக இப்படிப் பொய் சொல்லிட்டு, பொய்த் தாடி வச்சுக்கிட்டு நம்ம ஊருக்கு வந்திருக்காங்க?'' செங்கோடன் கேட்டான்.

''செங்கோடா! வந்தவங்க உங்க வீட்டுப் பக்கமும் வந்ததாச் சொல்றே. அதனாலே பழையபடி யாரோ உங்க வீட்டு மேலே குறியா இருக்கிறாங்கன்னு தெரியுது. தாத்தாவிடம் விஷயத்தைச் சொல்லிடலாமா?''

''வேண்டாம் சுமதி. வயசான காலத்திலே வீணா அவரை ஏன் கலவரப்படுத்தணும்? அவரைக் கொலை செய்யவும் ஒருத்தன் துணிஞ்சான் என்பதை எப்படி மறைச்சமோ, அதைப் போல இதையும் மறைச்சுடுவோம். அதோடே இந்த சினிமாக்காரங்களை நான் கண்காணிச்சுக்கிறேன்,'' என்றான், செங்கோடன்.

சினிமாக்காரர்கள் மூன்று நாளுக்கு மேல் படப்பிடிப்பு நடத்தவில்லை., ஆறாம் நாள் இரவு வாண வேடிக்கை நடத்தி அதைப் படமாக்கப் போவதாக, காலையிலேயே ஊர் முழுக்கச் செய்தி பரவியது. அதற்காகச் சிவகாசியிலிருந்து விதவிதமான வெடிகளை வரவழைத்திருந்தனர். வாண வேடிக்கை நடத்தத் தேர்ந்தெடுத்த இடம், ஊருக்கும் பெருமாள் கோயிலுக்கும் இடையேயிருந்த திறந்தவெளி.

ஏழு மணிக்கெல்லாம் மக்கள் சாப்பிட்டு முடித்துவிட்டு வாண வேடிக்கை பார்க்கக் கூடியிருந்தனர். வாண வேடிக்கை சரியாக இரவு பத்து மணிக்குத் தொடங்கியது.

மண்ணிலிருந்து விண்ணுக்குச் சீறிக் கிளம்பி, 'டமால்' என்று வெடித்து, வண்ண வண்ணமாக, பூப்பூவாகச் சிதறி வானவெளியையே ஒரு நந்தவனமாக்கின, சினிமாக்காரர்கள் விட்ட வாணங்கள். ஊரின் எந்த மூலையில் நின்று பார்த்தாலும் வாண வேடிக்கையின் வர்ண ஜாலம் தெரிந்தது.

சுமதி முதலில் வாண வேடிக்கைக்குப் போகவிரும்பவில்லை. வானத்தில், தோன்றிய வண்ணக் கோலங்களைப் பார்த்ததும், சைக்கிளை எடுத்துக் கொண்டு கிளம்பிப் படப்பிடிப்பு நடக்கும் இடத்துக்குச் சென்றான்.

செங்கோடன் அங்கே இருக்க மாட்டான் என்பது அவளுக்குத் தெரியும். சோமு தாத்தாவின் நெருங்கிய நண்பர் ஒருவர் வீட்டின் திருமணம் மேட்டுப்பாளையத்தில் மறுநாள் காலை நடக்க இருந்தது. அதற்காகச் சோமு தாத்தா அன்றே போய் விட்டார். அதனால் இரவில், செங்கோடன் மண்டபத்தை விட்டு வெளியே வரமாட்டான்.

சுமதி கூட்டத்தை விட்டு விலகி நின்று வாண வேடிக்கையைப் பார்த்தாள். பத்து நிமிட இடைவெளிக்குப் பிறகு மீண்டும் வாணங்கள் விண்ணிலே வெடித்துச் சிதறின. ஒரு வாணம் செங்குத்தாக மேல் நோக்கிச் செல்வதற்குப் பதில் கொஞ்சம் சாய்ந்து பக்கவாட்டில் 45° கோணத்தில் புறப்பட்டு உயர்ந்தது. நல்லவேளையாக அந்தப் பக்கம் மக்கள் கூட்டம் இல்லை.

சுமதியின் பார்வை சுருசுரு என்று தீப்பொறியுடன் சாய்ந்து புறப்பட்ட வாணத்தைத் தொடர்ந்தது. அது பெருமாள் கோயிலை அடைந்தபோது வெடித்து ஒளிமழை பொழிந்தது!

அந்த ஒளியிலே பெருமாள் கோயில் மதில் சுவரின் மேல் இருவர் நிற்பதும், மதிலை ஒட்டியபடி வெள்ளை நிற வேன் ஒன்று நிற்பதும் ஒரு நொடி தெரிந்தன. அதற்குள் ஒளிமழை இடமாறிச் சென்றது. பழையபடி அங்கே இருள் நிறைந்தது.

இந்தக் காட்சியை ஒரு நொடிப் பொழுது கண்ட சுமதி திடுக்கிட்டாள்.

''பாழடைந்த கோயிலின் மதில் மேல் இந்த நேரத்தில் இரண்டு பேருக்கும் என்ன வேலை? இரண்டு பேரில் ஒருவன் முகத்தில் குறுந்தாடி தெரிந்த மாதிரி இருந்ததே! வெள்ளை வேன் கூட சினிமாக்காரங்க வேன் மாதிரி தோணுது. பெருமாள் கோயிலிலே என்னமோ நடக்குது!'' என்று நினைத்த சுமதி, உடனே சைக்கிளில் ஏறி, கோயிலை நோக்கிச் சென்றாள்.

வெடிச்சத்தமும் வண்ணக் கோலமும் மக்களின் வியப்புக் குரல்களும் தொடர்ந்தன!

(தொடரும்)



16 பக்க வண்ணப் படக்கதை

பாலன் பிரகலாதனுக்கு அருளிய நாராயண நரசிம்மர்!

கதை: ஆனந்தி
படம்: வினு

சார் தபால்!

சட்டை மாறியது எப்படி?

* குழந்தைப் பருவம் எவ்வளவு குதூகல மான பருவம்! நேர்மை, நாணயம், ஒழுக்கம், இவை அடி நாதமாக அப்பருவத்திலே ஊற வேண்டும் என்பதை புதுவை முதலமைச்சர் பாரூக் மரைக்காயர் வாழ்க்கை வரலாறு துல்லியமாகவே பிரதிபலிக்கிறது.

— கே.எல். ஸ்ரீதேவி,
மேலக்கிருஷ்ணன்புதூர்.

* **M.O.H.** பாரூக் மரைக்காயர் அவர்களின் குழந்தைப் பருவ நிகழ்ச்சி படிப்பதற்கு மிகச் சுவையாகவும், பயனுள்ளதாகவும் இருந்தது.

— அ. இரவீந்திரன் (12761),
குஞ்சன்விளை.

* டாக்டர் பூவண்ணன் எழுதும் 'புதையல் வீடு' தொடர்கதை படிக்கப் படிக்க விறுவிறுப் பாக இருக்கிறது. சீக்கிரம் கதையை முடித்து விடாதீர்கள்!

— என்.பி. மாசிலாமணி (14382),
நாட்டான்வலசு.

* என்ன சார் இது! 'கேளுங்கள்; சொல்லு கிறோம்' பகுதி இரண்டு பக்கங்களாகக் குறைந்துவிட்டது. குறைந்தது நான்கு பக்கங் களாவது வெளியிடுங்கள்.

— க. தங்கராஜ் (8557),
ப. அய்யம்பாளையம்.

* 'பழைய மாணவனுக்கு வரவேற்பு' என்ற டி. டேவிட்ஜான் பிரிட்டோவின் கதையில் வரும் புனித வண்ணனின் பொறுமை முன் கோபக்காரனை எனக்கு ஒரு பாடமாக அமைந்தது. எங்கள் வீட்டில் அனைவரும் படித்து ரசித்தனர்.

— ஜெ. குருகண்ணன், வையச்சேரி.

* 'பழைய மாணவனுக்கு வரவேற்பு' எங் களின் தாழ்வுணர்ச்சியைப் போக்கியதோடு நில்லாமல் புத்துணர்ச்சியை ஏற்படுத்தியது.

— கே.ஏ. சுரேஷ் (7222), அரசம்பட்டி.

* 50-ம் பக்க ஜோக்கில் கையில் மடக்கு நாற்காலியோடு பஸ் ஸ்டாப்புக்கு வரும் வெள்ளைச் சட்டைக்காரர், நாற்காலியில் உட்கார்ந்தவுடன் அவரது சட்டை கலர்ச் சட்டையாக மாறியது எப்படி?

— எஸ். கண்ணன், வடலூர்.

* 'கோகுலம்' ஒரு தங்கத் தட்டு என்றால், கதைகள் யாவும் அதில் பதித்த முத்துக்களா கும். அதிலும் 16 பக்க வண்ணப் படக் கதை விலையுயர்ந்த முத்து. எனவே, எல்லாவற்றை யும் பைண்ட் செய்து வைத்திருக்கிறேன்.

— ஆர். பிரசன்னா (3221), கரூர்-1.

* முக்கிய நாயன்மார்களில் சுந்தரர், ஞான சம்பந்தர், மாணிக்கவாசகர் ஆகிய மூவரின் கதைகளை நன்கு தெரிந்து கொண்டோம். அப்பரின் கதையையும் விரைவில் வெளி யிடுங்களேன்.

— ஆர். குருராஜ், (1444), கரூர்.

* விவேகானந்தர் வாழ்விலே சுருக்கமாக, அழகாக இருந்தது. 'பிருந்தாவனக் கவியரங் கம்' ஒரு கவிதைச் சோலை.

— இரா. குமரேசன் (15436),
வீரவநல்லூர்.

* பழைய கதை; புதிய பாடல் மிக இனிமை யாகவும் வேடிக்கையாகவும் இன்னும் படிக்க வேண்டும் என்ற ஆசையைத் தூண்டுவதாக வும் இருக்கிறது. தொடர்ந்து வெளியிடுங்கள்.

— என். மாதேஸ்வரனும் உறுப்பினர் களும், தாமரை மலர் சிறுவர் சங்கம்,
தேர்ப்பேட்டை, ஒசூர்.

* 'பொன்வண்ணன்' எழுதிய 'புதுப் பையன்' கதை மிக அருமை. பிறரைக் கேலி செய்யும் மாணவர்களுக்கு இக்கதை ஒரு பாடம்.

— ஆ. முரளி (12348), தருமபுரி.

* 'மறைந்த மாம்பழம்' கதையில் வரும் மாம்பழம் மாயமாய் மறைந்து போனாலும் அக்கதை எங்கள் உள்ளத்தில் என்றும் மறை யாமல் நிற்கக் கூடியது.

— மா. தா. ஸ்ரீதர் (13601),
மா.தா.கோவிந்தராஜன் (15042)
சென்னை—106.

* எங்கள் ஊரில் அவதரித்த சம்பந்தரின் வரலாற்றை 16 பக்க வண்ணப் படக் கதை யாக வெளியிட்டு எங்கள் ஊர்ச் சிறுவருக்கு இன்ப மூட்டியதற்கு நன்றி.

— கி. வாசுதேவன், சீர்காழி.

* 'இரு மொழிகளில் பழ மொழிகள்' பகுதியைப் பத்திரமாக எடுத்து வைக்கிறேன். மிகவும் பயனுள்ளது.

— தங்க, கார்த்திகை ராஜா,
விருத்தாசலம்—1.

* பத்து வயதிலேயே இவ்வளவு ஆற்றலா! மைதிலியின் ஆசை நிறைவேற என் வாழ்த் துக்கள்.

— எஸ். லதா (392),
நாட்டரசன்கோட்டை.

சென்ற நவம்பர் மாதம் குழந்தைகள் நாளில் கல்வி அமைச்சரால் வெளியிடப் பெற்ற புத்தகங்களில் சிலவற்றை, சென்ற மாதம் அறிமுகப்படுத்தினேம். இப்போது மேலும் சிலவற்றை அறிமுகப்படுத்துகிறேம்.

— ஆசிரியர்.

புதிய புத்தகங்கள்

பூகம்பம்

இப்புத்தகத்தில் மூன்று கதைகள் இருக்கின்றன. சுந்தரம், அவன் தங்கை சுசீலா, அவர்களின் தாய் மூவரும் அஸ்ஸாமில் இருக்கும்போது, அங்கு ஏற்பட்ட பூகம்பத்தால் ஆளுக்கொரு பக்கமாகப் பிரிந்து, பல துன்பங்களை அனுபவித்துக் கடைசியில் கூடுவதைச் சுவையாகக் கூறுகிறது 'பூகம்பம்' என்ற முதல் கதை. இத்துடன், 'மல்லிகா,' 'பட்டுச் சட்டை' என்ற இரு கதைகளும் இப்புத்தகத்தில் இடம்பெற்றுள்ளன. தமக்கே உரிய எளிய, அழகிய நடையில் கதைகளை எழுதியிருக்கிறார் ஜெ. எத்திராஜன். பக்கங்கள்: 100, விலை: ரூ. 9.50. வெளியிட்டோர்: குழந்தை இலக்கியக் கழகம், 72, கிருஷ்ணு நகர், சென்னை — 91.

திருஞான சம்பந்தர்

'சமயம் வளர்த்த சான்றோர்' என்ற வரிசையில், ஆதி சங்கரர், இராமானுஜர் என்ற இருநூல்களைத் தொடர்ந்து இப்போது வெளி வந்திருக்கிறது 'திருஞான சம்பந்தர்' என்ற நூல். சின்னஞ்சிறு வயதில், பார்வதி தேவியிடம் ஞானப் பால் உண்டு, பல அற்புதங்களைச் செய்து, அழகு தமிழில் பாடி, சைவம் தழைக்கச் செய்த திருஞானசம்பந்தரின் வாழ்க்கை வரலாறு சிறுவருக்கு ஏற்றபடி படங்களுடன் தரப்பட்டுள்ளது. ஆசிரியை மீனுட்சி. பக்கங்கள்: 82, விலை: ரூ. 6.90.

நன்றியுள்ள நாய்கள்

நாய்கள் பல விதம்; பல ரகம். காலி, கிரேட் டேன், அல்ஸேஷியன், பூடில் என்னும் 15 வகையான நாய்களைப் பற்றியும், அவற்றின் பிறப்பிடம், அவற்றின் இயல்புகள், அவற்றால் மனிதருக்கு ஏற்படும் நன்மைகள் போன்றவை குறித்தும் எழுதப்பட்டுள்ளது. ஒவ்வொரு நாயையும் முழுப் பக்க வண்ணப்படத்துடன் தெளிவாகக் காணலாம். பக்கங்கள்: 32, விலை ரூ. 4.90.

பொம்மை மனிதன்

ஒரு தச்சர் செய்த பொம்மை நன்ருகப் பேசுகிறது; ஓடியாடி விளையாடுகிறது; பல குறும்புகளைச் செய்து மாட்டிக் கொண்டு, பிறர் செய்த உதவியால் தப்பித்துக் கொள்கிறது. கடைசியில், ஒரு தேவதை தோன்றி, பொம்மை மனிதனுக இருந்த அதை உண்மை மனிதனுக்கி, அவனுக்குத் திருமணமும் செய்து வைக்கிறது.

பக்கங்கள்: 48, விலை: ரூ. 4.90.

மேலே கண்ட 3 புத்தகங்களையும் வெளியிட்டோர்: பழனியப்பா பிரதர்ஸ், சென்னை — 14.

இரக்கமுள்ள அரக்கன்

ஓர் அரக்கனல் குகைக்குள் அடைக்கப்பட்ட அம்மாவையும், தன் மூன்று அண்ணன்களையும் கால் ஊனமுற்ற சிறுவனுன பூபாலன் எப்படிக் காப்பாற்றுகிறுன் என்பதை விறுவிறுப்பாக விளக்கும் கதை. பூபாலனின் பொறுமையும், புத்தி நுட்பமும் பிறருக்கு உதவும் பெருங்குணமும் நன்கு சித்திரிக்கப்பட்டுள்ளன. எழுதியவர்: வி. நரசிம்மன். பக்கங்கள்: 64, விலை: ரூ. 6.50.

நம்பிக்கை நட்சத்திரம்

பிடிவாத குணம் கூடாது, நம்பிக்கையே வெற்றிக்கு அடித்தளம், பிறருக்கு உதவும் பெருங்குணத்தால் உயர்வு பெறலாம் போன்ற நல்ல கருத்துக்களை எடுத்துக் காட்டும் பத்துக் கதைகள் அடங்கிய பயனுள்ள புத்தகம். இக்கதைகளின் ஆசிரியர்: நாகை தருமன். பக்கங்கள்: 100, விலை: ரூ. 6.50.

முல்லாவின் சிரிப்புக் கதைகள்

முல்லா நஸ்ருதீனின் கதைகள் உலகப் புகழ்பெற்றவை. அவரது, சமயோசித அறிவும், நகைச்சுவை உணர்வும், அறிவுக்கு விருந்தாகவும், மனக்கவலைக்கு மருந்தாகவும் விளங்குகின்றன. நூற்றுக்கணக்கான முல்லாவின் கதைகளிலிருந்து 50 கதைகளைத் தேர்ந்தெடுத்து இனிய நடையிலே தந்திருக்கிறார் பேராசிரியர் மு. சாயபு மரைக்காயர். பக்கங்கள்: 84, விலை: ரூ. 6/—.

மேலே கண்ட இரு புத்தகங்களையும் வெளியிட்டோர்: வானதி பதிப்பகம், சென்னை — 17.





ஓவியப் போட்டி

த. அருள் சிவபாலன் தலைமையில் செங்கற்பட்டில் இயங்கி வரும் வெண்ணிலா கோகுலம் சிறுவர் சங்கம் சமீபத்தில் பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப் போட்டி ஆகியவற்றை நடத்தியது. இப்போட்டிகளில் 600 க்கும் மேற்பட்ட சிறுவர் சிறுமியர் கலந்து கொண்டார்கள். ஓவியப் போட்டியில் கலந்து கொண்டவர்களின் ஒரு பகுதி இதோ

பாண்டிச்சேரியில் பாராட்டு விழா

புதுவையிலுள்ள குழந்தை இலக்கிய மன்றம், செந்தமிழ்த் தொண்டர் சிவ. கண்ணப்பா தலைமையில் இரண்டு எழுத்தாளர்களுக்கு மிகச் சிறந்த முறையில் பாராட்டு நடத்தியது. புதுவை வானொலியில் பணிபுரியும் நடாதூர் நம்பி, நாட்டின் வளர்ச்சித் திட்டம் குறித்து எழுதி அமைத்த வானொலி நிகழ்ச்சிக்கு அகில இந்திய விருது கிடைத்துள்ளது. தங்க சிவராசன், குழந்தை எழுத்தாளர் சங்கத்தில் ஏ. வி. எம். பரிசும், எல்லப்பா — ரங்கம்மாள் நினைவுப் பரிசும் பெற்றிருக்கிறார். இந்த இருவரையும் பாராட்டி இலக்கிய வீதி இனியவன், அரிமதி தென்னகன், கல்லாடன், அரியரன், பூதலூர் முத்து, ஞா. ஜெயசீலன், பரிதி வேங்கடேசன், கோவிந்தராஜலு ஆகியோர் பேசினர். கோகுலம் கௌரவ ஆசிரியர், நடாதூர் நம்பிக்குப் பொன்னாடை போர்த்தும் காட்சியை கீழே காணலாம்.






கோகுலம்


சிறுவர் சங்க உறுப்பினர் பட்டியல் (தொடர்ச்சி)


4246 ஆர். கோபாலகிருஷ்ணன், 4/27, N.H. 2 மறைமலைநகர் — 603 209
4247 வி. கண்ணன், 18, வரதராஜபுரம், திருநெல்வேலி — 1
4248 **M. Elanthamilan, 33, Jalan, 4/46 D, Petaling Jaya, Selangor, Malaysia.**
4249 உமா பார்வதி, 7 C, 38/1846 புத்தன் சாலை, திருவனந்தபுரம்
4250 டி. வஜ்ஜிரவேல், S/o. என். திருமுருகன், கே.எல்.கே. நாயுடு காலனி, கும்மிடிப் பூண்டி
4251 கே. தீனதயாளன், காட்டு கொல்லைத் தெரு, கும்மிடிப்பூண்டி — 601 201.
4252 எம். ஆர். பாலசுப்ரமணியன், த/பெ. எம். ஆர். ராமசாமி, மங்கலக்கரை புதூர், — 641 104.
4253 எஸ். ராஜேஸ்வரி, 85, தேசி செட்டி தெரு, காவேரிப்பட்டணம் — 635 112.
4254 ஒய்., கோமதி, 7 ஏ, சௌத் கார்டன்ஸ், திருப்பூர் — 638 604.
4255 வா. ஹேமமாலினி, C/79, சண்முகம் தெரு, திருநகர், மதுரை — 6.
4256 இரா. இராஜசேகரமூர்த்தி, CC- 15, விநாயகர் கோவில் வீதி, மகாலிங்கபுரம். 'B' காலனி, பொள்ளாச்சி.
4257 சு. வானதி, D/o. டி. விஜயலட்சுமி, எஸ். வி. வி. உயர்நிலைப்பள்ளி, குல்லூர் சந்தை — 626 053.
4258 எஸ். கல்யாணி, 13, தாகூர் நகர் காலனி, 4 வது தெரு, மதுரை — 625 016.
4259 கே. மகேஷ், 5/71, தெற்கு வீதி, கடையம் — 627 415.
4260 பி. கே. நித்யகல்யாணி, D/o. ஆர். வள்ளியம்மாள், சத்திரம், பாரதி மகளிர் உயர்நிலைப் பள்ளி, கடையம்.
4261 ஆர். சுரேஷ் கிருஷ்ணா ஸ்டோர்ஸ், 77, பட்டேல் ரோடு, பல்லடம்.
4262 கே. துரைசாமி, பெருமாம்பாளையம், பூமலூர் போஸ்ட், — 638 663.
4263 உமர் பாரூக், 51, போர்ச்சுக்கீஸ் தெரு, சென்னை — 1.
4264 வி. நிக்ஸன், வியோநார்ட், C-8/16, ரேஸ் கோர்ஸ் காலனி, மதுரை — 2.
4265 பா. ரங்கலட்சுமி, L-9, டி. ஆர். ஓ. காலனி, கே. புதூர், மதுரை — 7.
4266 சி. மேகலநாதன், 5, முத்தானந்த கோவில் தெரு, தல்லாகுளம், மதுரை.
4267 சுபாஷினிபாய், ஜனதா இரும்புத் தொழிலகம், மெயின் ரோடு, பாக்கமுடையான் பட்டி, பாண்டி.
4268 அ. மாலதி, D/o. என். அருள்பிரகாசம், மேரி வீதி, பாகூர் — 607 402.
4269 அ. பாரதி, D/o. என். அருள்பிரகாசம், மேரி வீதி, பாகூர் — 607 402.
4270 ப. மருதாசலம், 8, ஜீவானந்தம் வீதி, சீரநாயக்கன்பாளையம், கோவை — 641 007.
4271 டி. எஸ். சேதுராமன், 18, தெப்பக்குளம் மேல்கரை, மன்னார்குடி.
4272 கே. எஸ். ராஜேந்திரன், 38, மாணிக்கமேடு காலனி, மன்னார்குடி.
4273 சு. அஜாய்குமார், அ. மே. பள்ளி, மஞ்சூர்.
4274 பி. ஆர். தேசி, புதும்மன் கோவில் தெரு, வடக்கு தாமரை குளம், குமரி மாவட்டம்.
4275 இரா. குமார், 4/G, காட்டேரி ரோடு, குன்னூர் — 643 102.
4276 ஜி. சீனிவாசன், 29, ஜவாகர் தெரு, சிதம்பரம் — 608 001.
4277 ரா. ஸ்ரீமதி, F-27/2, ரயில்வே காலனி, பொன்மலை, திருச்சி — 4.
4278 எஸ். ரமேஷ், 56, குமரக்கட்டளைத் தெரு, கூறைநாடு — 2.
4279 கா. சுப்பிரமணியன், S/o. எஸ். நாராயண ஐயர், பார்வதிபுரம் கிராமம் — 629 003
4280 பு. அருள்மொழி, ஆலாத்தூர், விக்கிரபாண்டியம் — 610 203.
4281 வி. ஆர். காந்தி, 93, இந்தியன் பாங்க் காலனி, திருச்சி — 21.
4282 மு. ஜெயகாந்த், 33, தானப்ப செட்டி தெரு, சென்னை — 5.
4283 த. கலாவதி, D/o. பொ. நடராஜன், பணிமனைப் பிரிவு, சேர்வலார் முகாம், திருநெல்வேலி மாவட்டம்.
4284 நா. கணேஷ்குமார், S/o. எஸ். நாராயண ஐயர், பார்வதிபுரம், கிராமம் — 629 003.
4285 எம். ரவிச்சந்திரன், 16-A, சாரதா தேவி வீதி, ராமகிருஷ்ணபுரம் கோவை — 6.
4286 ஆர். முத்துக்குமரன், 22, வீரேஸ்வரன் கோவில் தெரு, வட்கரை, பெரியகுளம் — 626 501.
4287 வி. மதுசூதன், 36, 3 வது தெரு, சிதம்பர நகர், தூத்துக்குடி — 8.


4288 வி. கிஷன், 36, 3 வது தெரு, சிதம்பர நகர், தூத்துக்குடி — 8.
4289 பா. பூபதிராஜ், 581-K, ஜவஹர் பஜார், கரூர்.
4290 கோ. வெங்கட்ரமணன், 39, ஸ்டேட் பாங்க் I காலனி, பைபாஸ் ரோடு, மதுரை 16.
4291 பா. அருள்செல்வம், 1, கோபால் பிள்ளையார் கோவில் தெரு, திருவண்ணாமலை.
4292 எஸ். கௌரிசங்கர், இ 63, காமராஜ் ரோடு, பிளாக் 11, நெய்வேலி — 3.
4293 ஆர். பஷீர், 584, பெரியார் ஹைரோடு, அரும்பாக்கம், சென்னை — 106.
4294 ஆர். ஷாகிர், 584, பெரியார் ஹைரோடு, அரும்பாக்கம், சென்னை — 106.
4295 கே. மீனாட்சி, 3, 43 வது தெரு, நங்கநல்லூர், சென்னை — 61.
4296 நா. நடராசன், 6, ரத்தினசாமி நகர், சிதம்பரம்.
4297 அ. ஜீவா, 8/A, புதுப்பேட்டை வடக்குத் தெரு, சிதம்பரம் — 1.
4298 அ. ஜீவா, 14-A/3, வெங்கடேசா காலனி, குத்தாலம் — 609 801.
4299 அ. கிருஷ்ணன், 192, காமராஜர் ரோடு, ஆத்தூர் — 636 102.
4300 ஆர். உமா, 12, குமரப் பிள்ளை வீதி, கோட்டுச்சேரி — காரைக்கால் — 609 609.
4301 வி. ஜெயஸ்ரீ, பிளாட் எண் 2159, L பிளாக் முதல் தெரு, 12 வது மெயின் ரோடு, அண்ணா நகர், சென்னை — 40.
4302 இரா. நாகசுப்பிரமணியன், E-110, கெமிகல்ஸ் காலனி, மேட்டூர் அணை — 2.
4303 பா. நடராஜன், 1, சுப்பா ரெட்டி தெரு, பழைய மாம்பலம், சென்னை — 33.
4304 ஆர். புவனேஸ்வரி, 23, அரியான் குறிச்சி, 2 ஆம் வீதி, கணேஷ் நகர், 33 ஆம் தெரு, காமராஜபுரம், புதுக்கோட்டை — 1.
4305 எம். சுபா, 146, வெள்ளாளத் தெரு, சென்னை — 84.
4306 எம். தெய்வலதா, 146, வெள்ளாளத் தெரு, சென்னை — 84.
4307 பி. கே. பாலசுப்பிரமணியன், க. பரமத்தி போஸ்ட், கரூர் தாலுகா — 639 111.
4308 சொ. ராஜேஷ் சந்திரன், 162, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை — 5.
4309 எஸ். சீனிவாசன், 24, கீழ் ஆண்டார் வீதி, திருச்சி — 2.
4310 ரா. ஆனந்த், 1, போஸ்ட் ஆபீஸ் சாலை, குன்னூர் — 643 101.
4311 ஜி. கீதாஞ்சலி, 132, ஹவுசிங் யூனிட், அனுபா பாளையம், திருப்பூர் — 638 652.
4312 பி. லெட்சுமிநாராயணன், ஏ. பி. 59, அண்ணாநகர் மேற்கு, சென்னை — 101.
4313 பி. ராமலெட்சுமி, ஏ. பி. 59, அண்ணாநகர் மேற்கு, சென்னை — 101.
4314 சி. ராம்கோபால், 43, வடக்கு நரசிம்மபுரம், கரூர் — 639 001.
4315 சி. பாக்யஸ்ரீ, 43, வடக்கு நரசிம்மபுரம், கரூர் — 639 001.
4316 எஸ். பழனி, 42, ஏகாம்பர முதலி தெரு, இராமபாளையம் கிராமம், திமிரி — 632 512.
4317 அழ. அண்ணாமலை, 21, A. C. M. C. ரோடு, காரைக்குடி.
4318 வெ. ராஜா, 22-A, சக்தி வேலம்மாள் தெரு, எஸ். எஸ். காலனி, மதுரை — 16.
4319 ஜெ. ரெங்கநாத பாபு, கவிமணி மணிமலர் மன்றம், முத்துராமலிங்கபுரம்— 626 105.
4320 கே. என். குருபிரஸாத், 29/29, ஸ்ரீனிவாச ராகவன் வீதி, ஆர். எஸ். புரம், கோவை — 2.
4321 ஏ. ஜெ. ராம்குமார், 48, பெரிய சௌராஷ்டிரத் தெரு, திருச்சி — 8.
4322 வி. விஜயப்ரியா, 91, தெற்கு அக்ரஹாரம், பெரியகுளம், மதுரை மாவட்டம்.
4323 துரை விசாலாட்சி, D/o. எம். துரைசாமி, ஆசிரியர், அரசினர் உயர்நிலைப் பள்ளி, வடசித்தூர் — 641 202.
4324 கே. ரவி, 12, புனுகீஸ்வரர் மேல வீதித் தெரு, கூறைநாடு, மயிலாடுதுறை—609 001.
4325 ஓ. வி. சிவக்குமார், K/3, காவலர் குடியிருப்பு, உப்பிலிப்பாளையம், கோவை—18.
4326 பா. ஸ்ரீராம், வேங்கடத்தானூர் துறையூர் தாலுகா.
4327 சி. பவானி, 72 பி, சன்னதியாபுரம் மெயின் ரோடு, அரசரடி, மதுரை — 16.
4328 க. இராமானுஜம், 4/1-C, வண்டிச் சோலை, பழைய கார்டன் ரோடு, உதகமண்டலம் — 643 001.
4329 கி. முத்துராம நாதன், 66, இரட்டை அக்கிரகாரம், சோழவந்தான் — 624 214.
4330 ந. முகில்ராஜன், 33, நாகல் நகர், 6 வது சந்து, திண்டுக்கல்.
4331 பி. நாகராஜன், B-7, பெரியார் நகர், ஈரோடு — 1.
4332 ச. சரவணன், 3/33-C, பாரூர் — 635 201.
4333 கிருத்திகா, 2, நேருஜி வீதி, வேலநத்தம், ஆட்டையாம்பட்டி அஞ்சல், சேலம் மாவட்டம்.
4334 ஏ. மீனு, D — 4, பவர் அப்பார்ட்மெண்ட்ஸ், 47, கோடம்பாக்கம் ஹைரோடு, சென்னை — 17.
4335 டி. கலைச்செல்வி, D/o. டி. எம். தங்கவேல், பாம்பே ஏரோ டைலர், வேலூர் ரோடு, திருச்செங்கோடு.
4336 கி. சுமதி, 5/55-B, ஆஸ்பத்திரி தெரு, வேளாங்கண்ணி — 611 111.
4337 அ. லாரன்ஸ், தேவகி செட் எதிர்ப்புறம், துறையூர் ரோடு, பெரம்பலூர் — 621 212.

(இன்னும் வரும்)



துவாரகையில் மக்கள் ஆனந்தமாக வாழ்ந்தார்கள்.
என்னப்பா சௌக்கியமா?
கண்ணன் ஆட்சியில் சௌக்கியத்துக்கு என்ன குறை?
அரண்மனையிலும் ஆடல் பாடல்கள்.
ஆனால் கிருஷ்ணன் மட்டும்...
பஞ்சஜனனை வென்ற மாயக் கண்ணன்
கதை: ஆனந்தி
படம்: வினு
சுவாமி! என்ன யோசனை? ஏன் வருத்தமாகத் காணப்படுகிறீர்கள்!
ருக்மிணியின் கவலையைப் போக்கினார் கண்ணன்.
ஒன்றுமில்லை, என் இளம் பிராயத்து இணைபிரியா நண்பன் சுதாமாவை நினைத்துக் கொண்டேன்...



... சுதாமாவுடன் குருகுல வாசம் செய்தேன். அவனைப் பார்த்து எத்தனை நாளாயிற்று!
அது எப்படிக் கூறுகிறாய்?
அழகுதான்! கண்ணன் ஒன்று நினைத்து விட்டால் நடக்காமல் போகுமா?
அப்படியானால் அவர் புறப்பட்டு இங்கே வந்து கொண்டிருக்கிறார் என்று சொல்லுங்கள்!
சுதாமா ஒரு கிராமத்தில் பரம ஏழையாக வசித்து வந்தார்... இருபத்தேழு குழந்தைகள்...!
எங்கே எல்லாரும் கிருஷ்ணன் நாமத்தைப் பஜியுங்கள்!
கிருஷ்ணா! ராமா! கோவிந்தா! ஹரே ராமா கிருஷ்ணா, கோவிந்தா!
சுதாமாவின் மனைவி, புல்லரிசி சேகரிப்பாள்; பலவித கீரைகளைப் பறித்து வருவாள்...
குழந்தைகள் பசியோடு காத்திருப்பார்கள்.
கீரையைத் தண்ணீர் விட்டுக் கஞ்சி வைத்துக் கொடுப்பாள்...
இன்னிக்கும் கீரை கஞ்சிதானா அம்மா?
அதுதான் உடம்புக்கு நல்லது!


உடுத்த மாற்றுத் துணி இல்லேம்மா, இதுவும் கந்தலாப் போச்சு.
கிருஷ்ண பகவானைப் பிரார்த்தித்துக் கொள். மங்களம் உண்டாகும்.
இரவு குழந்தைகள் தூங்கிய பிறகு...
குழந்தைகளுக்கு வயிறு நிறைய வேண்டும் என்பதற்காக நீங்கள் தினம் பட்டினி கிடக்கிறீர்கள்...
நீயும் தான் பசிக்கொடுமையைத் தாங்கிக் கொண்டு இனிமையாகப் பேசுகிறாய்.
பசியைக் கூடப் பொறுக்கலாம். பரிகாசத்தை எப்படி சகிப்பது? எல்லாரும் உங்களைக் 'குசேலர்' என்று அழைக்கிறார்களே...
நீங்கள் குருகுல வாசம் செய்த போது கண்ணன் உங்கள் ஆருயிர்த் தோழராக இருந்ததாக அடிக்கடி சொல்வீர்களே...
ஆமாம் குரு சாந்தீபனி மகரிஷிக்கு எங்களிடம் ரொம்பப் பிரியம்...
உண்மையைத் தானே சொல்கிறீர்கள்? நான் கந்தல் துணி அணிந்த குசேலன் தானே!
நீங்கள் துவாரகைக்குப் போய் கிருஷ்ணனைத் தரிசித்து வரக் கூடாதா?
ஆ! எனக்குக் கூட ஆசையாகத்தான் இருக்கிறது.
அப்படியே நம் வறுமையை எடுத்துச் சொல்லி...



சேச்சே! எதையும் யாசிக்க மாட்டேன். அவரைத் தரிசிப்பதே பெரும் பாக்கியம்.
சுசீலைக்கு ஏமாற்றமாக இருந்தது. ஆனபோதிலும்....
பெரியவங்களைத் தரிசிக்கப் போனால் வெறும் கையோடு போகக் கூடாதே...
நம்மால் எதைப் பரிசளிக்க முடியும்?...
கிருஷ்ணனுக்கு என்ன பிடிக்கும்?
ஆ! நினைவுக்கு வருகிறது! அவல்! குரு பத்தினியிடம் கேட்டு வாங்கித் தின்போம்!
கண்ணனுக்கு எப்படியாவது அவல் இடித்து அனுப்ப வேண்டும் என்ற ஆர்வத்தில் சுசீலை - அக்கம் பக்க வீடுகளுக்குப் போய்...
மறுபடி நெல் கேட்க வந்துட்டியா?
பாவம், ஏகப்பட்ட குழந்தைகளுடன் அவஸ்தைப் படுகிறாய், இந்தா...
ஆண்டவன் உனக்கு அருள் புரிவார்.
ஆண்டவன் முதலில் உனக்கு அருள் புரியட்டும். போயிட்டு வா.


சுசீலை நெல்லைச் சுத்தம் செய்து ஊற வைத்து, சட்டியில் வறுத்தாள்....
அம்மா என்ன பண்ணறே?
கண்ணனுக்காக அவல் தயாரிக்கிறேன்!
இடித்தும் புடைத்தும் அவல் தயாராகும்போது....
அப்பா! துவாரகை போகிறீர்களா? கிருஷ்ணனை உங்களுக்குத் தெரியுமா?
ஓ!
குழந்தைகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க குசேலர், கிருஷ்ணரைப் பற்றிய நினைவுகளைக் கூறினர்....
சின்ன வயதில் நானும் கிருஷ்ணரும் மகரிஷி ஸாந்தீபனியிடம் குருகுல வாசம் செய்தோம்....
ஒரு நாள் குருபத்தினி....
கிருஷ்ணா! சுதாமா! அடுப்பெரிக்க விறகோ சுள்ளியோ எதுவுமில்லை.
இதோ, நாங்கள் போய்ச் சேகரித்து வருகிறோம்!
காரியத்தில் கண்ணாய் இருந்தவர்கள் இருட்டிக் கொண்டு வந்ததைக் கவனிக்கவில்லை....



கண்ணா! மழை கொட்டப் போகிறது! ஓடி வா!
இருவரும் ஒரு மலைச்சரிவில் புதரடியில் பதுங்கினார்கள்....
சுதாமா! இடிச்சத்தம் பயமாயிருக்கு!
கவலைப்படாதே, நான் இருக்கேன்!
பயங்கரப் புயல்! மின்னல் ஒளியில் மரங்கள் முறிவது தெரிகிறது!
குளிருது சுதாமா! என்னைக் கட்டிக் கொள்ளேன்!
அதிகாலையில் குரு சிறுவர்களைத் தேடி வந்தார்....
கிருஷ்ணா! சுதாமா! ... பாவம்! புயலில் எங்கே சிக்கி, எப்படி தவிக்கிறார்களோ....?
குருவின் குரல் கேட்டு, புதர் மறைவிலிருந்து வெளிப்பட்ட இருவரும்....
இதோ க்கிறோம், குருவே!
நல்ல வேளை, கடவுள்தான் காப்பாற்றினார்!





ஆசிரமம் திரும்பினர்....
ராத்திரி முழுதும் நாங்கள் தூங்கவேயில்லை! பயம்!
நாங்களும் தான் இரவு முழுதும் தூங்கவேயில்லை! கவலை!
உடை மாற்றி, உணவருந்தி, களைப்பு நீங்க...
எங்களை ஆசீர்வதியுங்கள்!
நீண்ட ஆயுசோடு நன்றாயிருக்கணும்.
சுதாமா கதையை முடித்தார்...
குழந்தைகளே! எல்லாம் வல்ல மாயக்கண்ணன் அன்று பயந்தது போலவும் இருட்டில் ஆசிரமம் திரும்ப வழி தெரியாதது போலவும் நடித்தான்!
எதற்கு நடிக்கவேண்டும்?
அண்ணன்போல் கண்ணனை அரவணைத்து ஆறுதல் சொல்லும் பாக்கியம் எனக்கும், பிள்ளைபோல் கண்ணனிடம் பாசத்தைச் சொரியும் வாய்ப்பு ஸாந்தீபனி தம்பதிக்கும் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான்!.. ...
...கண்ணனுக்கு அத்தனை கருணை! இதைக் குரு ஸாந்தீபனி அன்றே புரிந்து கொண்டிருப்பார்! ஆனால் எனக்கு வெகு நாட்கள் சென்று தான் அந்த ஞானம் பிறந்தது.



அப்பா! கிருஷ்ணர் பெரிய அரசர்! பகவான்! அவருக்கு அவலையா கொண்டு போவது?
பரிசுப் பொருளின் மதிப்பு முக்கியமில்லை; அதனுடன் இணைந்திருக்கும் நமது அன்புதான் முக்கியம்! வரட்டுமா?
சுதாமா விடை பெற்று, துவாரகை நோக்கிச் சென்றார்...
என்னைக் கண்ணனுக்கு ஞாபகம் இருக்குமோ என்னமோ....? குருகுல வாசம் முடிந்த பின் பார்க்கவேயில்லையே?
பல ஊர்களைக் கடந்து போனார்...
கிருஷ்ணர் பெரிய அரசர்; நானோ பரம ஏழை! எப்படி வரவேற்பாரோ?
துவாரகையை அடைந்தார், குசேலர்....
அடாடா! தேவலோகம் போல் இருக்கிறதே! இதில் கண்ணன் வசிக்கும் அரண்மனையை எப்படி கண்டு பிடிப்பது?
ஒரு காவலனை அணுகினார் குசேலர்....
யாரையா நீர்? ஊருக்குப் புதுசா?
என் பெயர் சுதாமா. கிருஷ்ணரைக் காண வந்திருக்கிறேன்....



காவலாளி சிரித்தான், கேலியாக...
ஓ! கிருஷ்ணரைப் பார்க்கணுமா? தாராளமாய்ப் போய்ப் பாரேன்!
ஐயா, அவர் வீடு எங்கிருக்கிறது?
வீடா! அதோ, ஏழடுக்கு மாளிகை தெரிகிறதே, அது தான்!
அரண்மனை மேன்மாடத்தில்...
என்ன, இன்றைக்கு ஒரே சந்தோஷம் உங்களுக்கு...?
காரணமாகத்தான்...!
கண்ணன் மேன்மாடத்திலிருந்து பார்க்க....
ருக்மிணி! நான் நினைத்தது நடந்துவிட்டது! நண்பர் சுதாமா வருகிறார். வா... வா.. வரவேற்கலாம்!
அரண்மனை வாசலில்...
யாரைய்யா நீர்? கந்தலை அணிந்து கண்ணனைப் பார்க்க வேண்டும் என்கிறீர்?
சுதாமா வந்திருப்பதாகச் சொல்லுங்கள்; கிருஷ்ணன் அவசியம் என்னைப் பார்க்கச் சம்மதிப்பார்!


அச்சமயம் கண்ணனை எதிர் கொண்டு அழைக்க ஓடி வர, காவலர் திகைத்தனர்.
வாருங்கள், தோழரே! வாருங்கள்! இவ்வளவு தூரம் நடந்து வந்திருக்கிறீர்களே!
குசேலரைத் தமது சிம்மாசனத்தில் அமரச் செய்து பாத பூஜை செய்தார் கண்ணன்.
குசேலரின் பாதங்களை அலம்பிய தீர்த்தத்தை அரண்மனையெங்கும் தெளித்து....
கண்ணா! இவ்வளவு உபசாரம் எதற்கு?
நல்லவர்களுடைய தரிசனம் புண்ணிய நதிகளில் நீராடுவதைவிடப் புனிதமானது!
புரிந்து கொண்டோம் பிரபோ! தங்களைப் போலவே அடக்கமாக இருப்போம்.
கிருஷ்ணா! நீ என்னை ஞாபகம் வைத்திருப்பாயோ என்னவோ என்று தயங்கிய படியே வந்தேன்...
அழகுதான்! குருகுலவாசம் செய்த நாட்களை மறக்க முடியுமா...?


மகரிஷி ஸாந்தீபனிக்கு நம்மிடம் எத்தகைய அன்பு....! ருக்மிணி! உனக்கு அந்தக் கதை சொல்லியிருக்கிறேனா?..
பழைய நினைவுகளில் ஆழ்ந்தார் கண்ணன்...
குரு ஸாந்தீபனி நெகிழ்ந்து போய்....
கிருஷ்ணா! குருபக்தி என்றால் என்ன என்று உலகுக்கு உணர்த்த, நீ என் சிஷ்யன் மாதிரி நடித்தாய். உனக்குத் தெரியாத எதையும் நான் கற்றுத் தந்து விடவில்லை.
எங்கள் குருகுல வாசம் முடிந்ததும் நாங்கள் குருவிடம் போய் என்ன தட்சிணை வேண்டும் என்று கேட்டோம்...
கிருஷ்ணன் வற்புறுத்தவும்...
அப்படியானால் கேள்... ஒரு நாள் நான் என் ஒரே மகனுடன் நதியில் நீராடப்போனேன்...
அப்போது பஞ்சஜனன் என்ற அசுரன் சங்கு உருவத்தில் வந்து..
ஐயோ! அப்பா! என்னையாரோ இழுத்துக் கொண்டு போகிறார்கள்.


கண்ணா! மகனை இழந்த
துயரை என் மனைவியும்
நானும் உங்களைச்
சீடர்களாக அடைந்ததில்
தாங்கிக் கொண்டோம்...
...இனி உங்களையும்
பிரிந்து...
கிருஷ்ணா! உனக்கும்
சுதாமாவுக்கும்
அன்போடு
அன்னமிட்டேன்...
எங்கள் பிள்ளையை
மீட்டுத் தருவாயா..
..?
பஞ்சஜனனின் பவழக்
கோட்டை கடலுக்கடியில்
இருப்பதைக் கண்ணன்
ஞான திருஷ்டியால்
உணர்ந்தான்.
சுதாமாவுடன் கடலில்
மூழ்கி, நீந்திச்
சென்றான் கண்ணன்...
பவழக் கோட்டையில் பஞ்சஜனனைப்
பார்த்தான்.
சுதாமா!
நீ குரு
மைந்தனைத்
தேடு!
நான்
இவனைச்
சமாளிக்
கிறேன்!


சங்குக்குள்ளிருந்து பஞ்சஜனன் என்ற நண்டு வடிவ அரக்கன் வெளிப்பட்டுத் தன் முழு உருவுக்கு வளர்ந்தான்.
அடேயப்பா! இவ்வளவு பெரிய ராட்சசனா நீ!
பொடிப்பயலே! கேலியா செய்கிறாய்! விழுங்கி விடுகிறேன் பார்!
பஞ்சஜனனுடன் வீரப்போர் புரிந்து கண்ணன் அவனைக் கொன்றான்.
இதற்குள் சுதாமா பவழக் கோட்டையில் தேடி, குருவின் பிள்ளையைக் கண்டு பிடித்தான்...
கண்ணா! இதோ வந்து விட்டேன்!
இருவரும் குரு மகனை மீட்டுக் கொண்டு திரும்பினார்கள்...
பஞ்சஜனன் வாழ்ந்த சங்கை எடுத்துக் கொண்டு வருகிறேன். குருவிடம் காட்டலாம்.




குருவும் குருபத்தினியும் மூவரையும் அணைத்துக் கொண்டு...
அப்பா! அம்மா!
கண்ணனின் கருணையால் கிடைத்த செல்வமே!
கண்ணன் வெற்றிச் சங்கு ஊதினன்...
கண்ணா! இந்தச் சங்கு பாஞ்சஜன்யம் என்று புகழ் பெறும்!
பழைய நினைவுகளிலிருந்து மீண்டான் கண்ணன்.
ருக்மிணி! அன்று குருவிடம் விடை பெற்று, வேறு வேறு திசையில் சென்ற நாங்கள் மீண்டும் இன்றுதான் சந்திக்கிறோம்!
அது சரி. சுதாமா! எனக்கு நீ என்ன கொண்டு வந்திருக்கிறாய்?
சுதாமா வெட்கப்பட்டு......
ஒன்றுமே கொண்டு வரவில்லை.
நம்ப மாட்டேன்! இதோ என்னமோ இருக்கிறதே!


குசேலர் தோளில் தொங்கிய சிறு மூட்டையை உருவிப் பிரித்தார் கண்ணன்...
கந்தலானாலும் சுத்தமான துணியின் ஒரு முனையில் கட்டி வைத்திருந்ததைப் பார்த்து....
ஆகா! அவல்! மல்லிப்பூ மாதிரி இருக்கே! அவல் தின்பதில் சூரன் என்றுபேர் வாங்கியவன் நான்....
ஒரு பிடி அவலை வாயில் போட்டு ருசித்தான் கண்ணன்.
ஆகா! என்ன ருசி! முன்பு குருபத்தினி கொடுத்த அவல் மாதிரியே இருக்கிறது!
இன்னொரு பிடி அவலை கண்ணன் உண்ண முற்பட்டபோது ருக்மிணி...
போதும்! உடம்புக்கு ஆகாது!
கண்ணன் காதோடு நினைவூட்டினள் ருக்மிணி...
ஒரு பிடி அவலை அவர்களுக்கு எல்லாம் கொடுத்து விட்டது. மேலும் சாப்பிட்டால் துவாரகையில் லக்ஷ்மி கடாட்சமே பிச்சாது!


கண்ணனும் ருக்மிணியும் சுதாமாவுக்கு விருந்தளித்து உபசரித்தனர்...
பழங்கள் சாப்பிடு; அதன் மேல் தேன் விடுகிறேன்!
போய் வருகிறேன் கண்ணா! உன் அன்பை என்றும் மறவேன்.
நானும் ருக்மிணியும் பாக்கிய சாலிகள்.
சுதாமா சொந்த ஊருக்குத் திரும்பினார்.
இது என்ன மாயம்? வேறு ஊருக்கு வந்து விட்டேனா?
அப்பா வந்துட்டார்!
சுவாமி! ஒரு நாள் காலையில் எழுந்து பார்த்தால் நம் வீடு மாளிகையாகி விட்டது! பொற்காசுகள், நகைகள், அணிமணிகள் ... ஊரே மாறிப் போய் விட்டது! எங்கும் செல்வச் செழிப்பு!
கண்ணனை என்ன கேட்டீர்கள்?
ஒன்றுமே கேட்கவில்லை. எல்லாம், அன்புடன் நிவேதித்த ஒரு பிடி அவலின் மகிமை!

ஜெர்மனி தேசக் கதை

மூன்று அரச குமாரர்கள்



தமிழில் :
எச். கிருஷ்ணமூர்த்தி

அரசருக்கு மூன்று பிள்ளைகள். உலக அனுபவம் பெறுவதற்காகவும், பொருள் சம்பாதிப்பதற்காகவும் முதல் இரண்டு பிள்ளைகளும் அப்பாவிடம் சொல்லிக் கொண்டு போயினர். அவர்கள் காலத்தை வீணே செலவிட்டனர். கைப்பொருளை இழந்தனர். அந்த நிலைமையில் மீண்டும் அப்பாவைப் பார்க்க அவர்கள் விரும்பவில்லை. ஊர் ஊராகச் சுற்றிக் கொண்டிருந்தனர். நீண்ட நாட்கள் ஆகியும் அவர்கள் அரண்மனைக்குத் திரும்பவில்லை.

மூன்றாவது பிள்ளை சிறுவன். நல்லவன். சுபாவத்திலேயே இரக்க குணம் உடையவன். அப்பாவுக்கு உதவியாக அரண்மனை நிர்வாகத்தைக் கவனித்து வந்தான்.

''மூத்த பிள்ளைகள் திரும்பி வரவில்லையே! அவர்களுக்கு என்ன ஆயிற்றோ?'' என்று அரசர் கவலைப் பட்டார்.

''கவலைப்படாதீர்கள், அப்பா. நான் போய் அவர்களை அழைத்து வருகிறேன். எனக்கும் ஓர் அனுபவமாக இருக்கும்,'' என்று சொல்லி விட்டு இளைய மகன் உற்சாகமாகக் கிளம்பினான்.

அவன் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் போனான். மக்களிடம் பேசிப் பழகினான். அவர்கள் சொன்ன தகவல்களின்படி, கடைசியில் தன் சகோதரர்கள் இருவரையும் ஓர் ஊரில் கண்டுபிடித்தான்.

''சகோதரர்களே! எனக்கும் உலக அனுபவம் வேண்டாமா? அதனால்தான் தனியாகப் புறப்பட்டு வந்தேன். எப்படியோ உங்களைச் சந்தித்து விட்டேன். அதில் எனக்கு ரொம்ப சந்தோஷம். அப்பா உங்களைப் பற்றிக் கவலையாக உள்ளார். வாருங்கள்; திரும்பிப் போவோம்!'' என்று அவன் அழைத்தான்.

அதைக் கேட்டு மற்ற இருவரும், ''உனக்கு என்னடா தெரியும்? நீ ஒரு சிறு பிள்ளை. நிறையச் சம்பாதிக்காமல், வெறுங்கையோடு நாங்கள் திரும்ப மாட்டோம். இவ்வளவு வயதான எங்களாலேயே உலகத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை. நீ

என்ன சாதித்து விடப் போகிறாய்? பேசாமல் திரும்பிப் போ!'' என்று சொல்லி அவனைக் கேலி செய்தனர். இளைய மகன் நல்ல முறையில் பேசி, மூத்தவர்கள் இருவரையும் தன்னோடு வரச் சம்மதிக்க வைத்தான்.

மூன்று அரச குமாரர்களும் தங்கள் சொந்த நாட்டை நோக்கிப் பயணம் செய்தனர். சாலையில் ஓரிடத்தில் ஒரு பெரிய எறும்புப் புற்று இருந்தது. மூத்தவர்கள் இருவருக்கும் ஒரு விநோத எண்ணம் வந்தது. ''இந்த எறும்புப் புற்றை அழிப்போம். இதிலுள்ள எறும்புகள் எல்லாம் பயந்து போய்த் தங்கள் முட்டைகளைக் கவ்விக் கொண்டு ஓடும். அதைப் பார்த்து ரசிக்கலாம்!'' என்று கூறினர்.

''ஐயோ பாவம், இந்தச் சின்ன ஜீவன்களை ஏன் இம்சிக்க விரும்புகிறீர்கள்? வேண்டாம், வேண்டாம். நான் இதை அனுமதிக்க மாட்டேன். அவற்றை நிம்மதியாக விட்டு விடுங்கள்!'' என்று இளைய பிள்ளை சொன்னான்.

''வாத்துக்களைக் கொல்லாதீர்கள். அவை சந்தோஷமாக இருக்கட்டும். நாம் வேறு உணவு தேடிக் கொள்ளலாம்!'' என்றான் இளைய மகன்.

சிறிது தூரம் போனதும், மரத்திலே ஒரு தேன்கூட்டைப் பார்த்தனர். பெரிய கூடு. பொந்திலிருந்து தேன் ஒழுகிக் கொண்டிருந்தது.

''தீயை மூட்டலாம், இந்த ஈக்களைக் கொன்று விட்டுத் தேனைக் குடிக்கலாம்!'' என்று மூத்தவர்கள் இருவரும் ஆசைப்பட்டனர். இளையவன் அவர்களைத் தடுத்து நிறுத்தினான்.

''பாவம், தேனீக்கள். அவற்றைக் கொல்லாதீர்கள். அவை சந்தோஷமாக இருக்கட்டும்!'' என்று சொல்லி அவன் மற்றவர்களை அழைத்துக் கொண்டு மேலே நடந்தான்.

அவர்கள் பல நாட்கள் பயணம் செய்து கடைசியில் ஒரு விநோதமான அரண்மனையை அடைந்தனர். அகழியையும், வாயிலையும் கடந்து உள்ளே நுழைந்தனர். குதிரைகள் கம்பீரமாக லாயத்தில் நின்றன. ஆனால் அவற்



மூவரும் மேலே நடந்து ஓர் ஏரியை அடைந்தனர். அநேக வாத்துக்கள் அதில் நீந்திக் கொண்டிருந்தன.

''ரொம்பப் பசிக்கிறது. இரண்டு வாத்துக்களைப் பிடித்துச் சமைத்துச் சாப்பிடலாம்!'' என்று மூத்தவர்கள் அவசரப்பட்டனர்.

றுக்கு உயிர் இருக்கவில்லை. சிலை வடிவத்தில் நின்றன. அவர்கள் மூவரும் அந்த அரண்மனையின் பல பகுதிகளையும் சுற்றிப் பார்த்தனர். அங்கே ஒரு மனிதனைக் கூடக் காணவில்லை. ஆனால் மனிதர்களின் சிலைகள் பல ஆங்காங்கே காணப்பட்டன. கடைசி

யில் மூன்று பூட்டுகள் பூட்டப்பட்ட ஒரு கதவின் முன்னால் நின்றனர்.

அந்தப் பெரிய கதவின் உள்ளேயே ஒரு சின்னக் கதவும் பொருத்தப்பட்டிருந்தது. அவர்கள் தொட்டதும் கதவுகள் திறந்து கொண்டன. அந்தச் சின்ன அறை நடுவே மேசை நாற்காலிகள் இருந்தன. அங்கு ஒரு முதியவர் உட்கார்ந்திருந்தார். அவருடைய தாடி வெள்ளை வெளேரென்று நீண்டு தொங்கியது. அவர்கள் அவரை இரண்டு முறை கூப்பிட்டனர். அவர் அதைக் கேட்கவில்லை போல் தோன்றியது. மூன்றாம் முறை கூப்பிட்டனர். அவர் மெதுவாக எழுந்து வந்தார்.

அந்த முதியவர் வாயைத் திறந்து பேசவே இல்லை. மௌனமாக அவர்களை வேறொரு அறைக்கு அழைத்துச் சென்றார். அங்கு ஏராளமான உணவுப் பொருள்கள் இருந்தன. அரசகுமாரர்கள் மூவரும் பசியாறச் சாப்பிட்டனர். முதியவர் அவர்களை இன்னொரு அறைக்கு அழைத்துப் போனார். அவர்கள் இளைப்பாறினர்.

மறுநாள் காலை முதியவர், முதல் அரசகுமாரனிடம் போனார். மௌனமாக அவனை அழைத்துப் போய் ஒரு சலவைக் கல் மேசையைக் காட்டினார். அந்த மேசையின் மீது மூன்று கற்கள் பதிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு கல்லின் மீதும் அழகான எழுத்துக்களில் சில வாசகங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. எப்படி அந்த அரண்மனை ஒரு தேவதையின் சாபத்திற்கு உள்ளாயிற்று என்றும், அந்த சாபம் நீங்க என்ன என்ன செய்ய வேண்டும் என்ற வழிமுறைகளும் அவற்றில் பொறிக்கப்பட்டிருந்தன.


அரசகுமாரன் முதல் கல்லின் அருகில் சென்று படித்தான். அதன் மீது, "காட்டின் மையத்தில் பரந்த சதுப்பு நிலம் உள்ளது. அங்கு பாசி மண்டிக்கிடக்கிறது. பாசியின் அடியில் அரசகுமாரியின் ஆயிரம் முத்துக்கள் சிதறிக் கிடக்கின்றன. சூரியன் தோன்றி மறையும் ஒரு பகல் பொழுதிற்குள் எல்லா முத்துக்களையும் ஒருவன் பொறுக்கி எடுக்க வேண்டும். அப்படி எடுக்கும் போது ஒரு முத்து குறைந்தால் கூட, அதைத் தேடும் மனிதன் சூரியன் மறைந்ததும் கற்சிலை ஆகிவிடுவான்!" என்று எழுதப்பட்டிருந்தது.

அதைப் படித்த உடனே மூத்தவன் முத்துக்களைத் திரட்டி எடுப்பதற்காகக் குறிப்பிட்ட இடத்திற்கு விரைந்தான். நாள் முழுவதும் தேடினான். நூறு முத்துக்கள்தான் எடுக்க முடிந்தது. மாலை ஆயிற்று. கல்லின் மேல் குறிப்பிட்டபடி அவன் சிலை ஆனான்.

அடுத்த நாள் இரண்டாம் அரசகுமாரன் முத்துக்களைத் தேடுவதற்காகப் போனான். தன் அண்ணனைப் போலவே அவனும் ஒரு நூறு முத்துக்களைத் திரட்டினான். அதற்குள் மாலைப் பொழுது வந்தது. அவனும் கல்லாக மாற்றப்பட்டான்.

மூன்றாவது அரசகுமாரன் அந்த முதியவரின் அனுமதியோடு முத்துக்களைத் தேடப் போனான். முத்துக்களை எடுக்க வேண்டும் என்பதை விட, கற்சிலை ஆகிப் போன தன் சகோதரர்களையும், மற்றவர்களையும் எப்படிக் காப்பாற்றுவது என்ற எண்ணமே அவனை ஆட்கொண்டிருந்தது.

பாசி நிறைந்த அந்தப் பூமிக்குப் போனான். அங்கே முத்துக்களைத் தேடுவது அவ்வளவு எளிதாக அவனுக்குத் தோன்றவில்லை. முத்துக்கள் பாசியின் அடியில் சிக்கி இருந்தன. சில முத்துக்களைத் தேடி எடுப்பதற்குள்



நம் ஊரில் தயாராகும் மின் சுவிட்சுகளில் 'ஆன்' (ON), 'ஆஃப்' (OFF) என்று பொறிக்கப்பட்டிருப்பதைப் பார்த்திருப்பீர்கள். ஆனால், சீனாவில் தயாராகும் மின் சுவிட்சுகளில் அவற்றை 'லைட் — ஆன்' என்றும், 'டார்க் — ஆன்' என்றும் பொறிக்கிறார்கள்.

— ஆர். எஸ். சுப்பிரமணியன்.



ளையே அவன் களைத்துப் போனான். மீதமுள்ள முத்துக்களை எப்படி எடுப்பது என்று யோசித்தான். அவனுக்கு ஒரு வழியும் புலப்படவில்லை. தானும் தோற்றுவிடுவோமோ என்ற எண்ணம் மேலிட, அவன் அழத் தொடங்கினான்.

அப்போது சாரை சாரையாக எறும்புகள் அவனை நோக்கி வந்தன. எந்த எறும்புகளின் உயிரை முன்பு ஒரு நாள் அவன் காப்பாற்றினானோ, அதே எறும்புகள் இப்போது அவனுக்கு உதவி செய்வதற்காக வந்து கொண்டிருந்தன. வெகு விரைவில் அவை முத்துக்களைக் கவ்விப் பாசிக்கு வெளியே கொண்டு வந்து குவித்தன!

முதல் முயற்சியில் வெற்றி அடைந்ததும், அவன் இரண்டாவது சலவைக் கல் இருக்கும் இடம் சென்றான். அதன் மேல் இருந்த எழுத்துக்களைப் படித்தான். ''இளவரசிகளின் அறைக் கதவு பூட்டப்பட்டுள்ளது. சாவி ஏரியின் ஆழத்தில் கிடக்கிறது. சாவியைத் தேடி வெளியே கொண்டு வர வேண்டும்!'' என்று அதில் காணப்பட்டது. அவன் ஏரிக்கரைக்குச் சென்று யோசித்தான். அன்று ஒருநாள் அவன் காப்பாற்றிய வாத்துக்கள் ஏரியில் நீந்திக் கொண்டிருந்தன. அவனைக் கண்டதும், அவை தண்ணீருக்கு அடியில் முழுகிச் சாவியை எடுத்து வந்தன. இரண்டாவது சோதனையிலும் அவன் வென்றான்.

மூன்றாவது சலவைக் கல் என்ன சொல்லுகிறது என்று பார்த்தான். அந்தச் சோதனை மிகவும் கடினமாக இருந்தது. ''அரசருக்கு மூன்று பெண்கள் உள்ளனர். அவர்கள் நல்ல அழகிகள். எந்தவித வித்தியாசமும் இல்லாமல் பார்ப்பதற்கு ஒரே மாதிரி இருப்பார்கள். அவர்களில் கடைசியானவளும், சிறந்த அழகியுமான அரசகுமாரி யார் என்று கண்டுபிடிக்க வேண்டும். முதல் இளவரசி கற்கண்டு சாப்பிட்டிருக்கிறாள். இரண்டாமவள் பழரசங்களைப் பருகியிருக்கிறாள். மூன்றாவது இளவரசி தேன் சாப்பிட்டிருக்கிறாள். அந்த மூவரில் தேன் சாப்பிட்டது யார் என்று ஒருவன் யூகித்துச் சொல்ல வேண்டும்!'' என்று அதில் எழுதப்பட்டிருந்தது.

மூன்றாவது சோதனையை எப்படிச் சமாளிப்பது என்று இளைய அரசகுமாரன் யோசித்துக் கொண்டிருந்த போது, அவனால் காப்பாற்றப்பட்ட தேனீ அங்கே பறந்து வந்தது. அவன் அதைத் தொடர்ந்தான். தேனீ, முதல் இரண்டு இளவரசிகளின் உதடுகளின் அருகிலும் சென்று சென்று பார்த்தது. ஆனால், உட்காரவில்லை. மூன்றாவது இளவரசியிடம் வந்ததும் அது அவள் உதட்டின்மேல் உட்கார்ந்தது. ஆகவே, அவள்தான் மூன்றாவது அரசகுமாரி என்றும், சிறந்த அழகி என்றும் அவன் சரியாகக் கண்டுபிடித்தான். மூன்றாவது சோதனையிலும் வென்றான்.

அந்த அரண்மனையைப் பிடித்திருந்த சாபம் உடனே விலகியது. சிலையாக மாறி இருந்த வீரர்களும், குதிரைகளும் மறுபடியும் உயிர் பெற்றுப் பழைய உருவத்தை அடைந்தனர். அவனுடைய இரு சகோதரர்களும் மீண்டும் உயிர் பெற்றதைக் கண்டு அவன் சந்தோஷமடைந்தான்.

எல்லோரும் சிறிது நாட்களுக்கு அந்த அரண்மனையின் விருந்தினர்களாகத் தங்கிவிட்டுத் தத்தம் ஊர் திரும்பினர்.

நாளடைவில் மூன்று அரசகுமாரர்களும், அந்த மூன்று அரசகுமாரிகளை மணந்து கொண்டனர்.

நன்றி மறவேல்

பல்லவன்




ஏணி ஒன்று அவனை மேலே
ஏற்றி விட்டது.
'ஏ! அப்பா!' என்று காண்போர்
வியக்கும் வண்ணமே!
ஆணவத்தின் உச்சிக்கு அவன்
ஏறிய தாலே,
அலட்சியமாய் ஏணிதன்னை
அவமதித்தானே!

ஏணி நம்மை மேலே ஏற்றி
விட்டதென்றாலே
ஏது நமக்கு இந்தப் பெருமை
என்று எண்ணியே,
வீணனவன் உயர்த்தி விட்ட
அந்த ஏணியை
வேகமாக எட்டி உதைத்து
வீழ வைத்தானே!

ஏன் இப்படி நடந்து கொண்டான்
ஏற்றம் கண்டவன்?
எண்ணிப் பார்த்து மண்ணில் சாய்ந்த
ஏணி சொன்னது:
"நான் இப்படி யாவரையும்
நாளும் உயர்த்துவேன்!
நன்றி மறந்து விட்டால் என்ன?
நன்றே செய்குவேன்!"

ஏணியைப் போல் உதவும் சான்றோர்
இருக்கின்றார்களே!
ஏற்றம் பெற்றோர் அவரை எட்டி
உதைக்கின்றார்களே!
நான் அப்படி இருக்க மாட்டேன்;
நாளும் போற்றுவேன்!
நல்லவரை மறக்க மாட்டேன்;
நன்றி செலுத்துவேன்!



கேளுங்கள்;

* 'பெருவாரி நோய்' என்கிறார்களே, அப்படியென்றால்...?

— பி. சீதாலட்சுமி, குமாரபாளையம்.

காலரா, அம்மை, பிளேக், மலேரியா, டைபாயிடு, இன்புளுயன்சா, சீதபேதி முதலிய நோய்களைத்தான் 'பெருவாரி நோய்' என்கிறார்கள். ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குச் சுலபமாகப் பரவும் நோய்கள் இவைகள்.

* யானை மணிக்கு எத்தனை மைல்கள் போகும்?

— கே. பி. கதிர்வேல், செந்துறை.

யானையால் ஓட முடியாது. அது வேகமாக நடந்தால், அதுவே ஓடுவது போலிருக்கும். சாதாரணமாக நடந்தால் மணிக்கு 4 மைல்; வேகமாக நடந்தால் 20 மைல் போகும்.

* கடல் அலை எதனால் தோன்றுகிறது? காற்றினாலா? மழையினாலா?

— ம. சாமிநாதன், தஞ்சாவூர்—2.

காற்றினால்தான். கடலின் மேல் பரப்பில் உள்ள நீர் அசைந்து கொண்டே இருக்கிறது. ஆனால், இந்த அசைவு 600 அடி ஆழம் வரையிலும்தான் இருக்கும். அதற்குமேல் இராது.

* தேன் குடித்தால் சிலருக்கு விஷம் ஏறுதாமே! உண்மையா?

— என். சந்திரசேகரன், கோட்டத்தூர்

ஒரு தாய் கருவுற்றிருக்கும்போது அவளுக்குத் தேன் கொட்டினால் அவள் பெறுகின்ற பிள்ளைக்குத் தேன் கொட்டினால்கூட விஷம் ஏறாது என்று சொல்கிறார்கள்.

* எங்கள் கோகுலத்தின் கௌரவ ஆசிரியருக்கு 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' என்ற பட்டம் இருப்பதாக சமீபத்தில் மாயவரத்திற்கு வந்தபோது சொன்னார்கள். அந்தப் பட்டம் யாரால் வழங்கப்படுகிறது? எதற்காக வழங்கப்படுகிறது?

— எஸ். முத்துவேல், மாயவரம்

மதுரை காமராசர் பல்கலைக் கழகம் ஒவ்வோராண்டும், தமிழ்மொழிக்குச்சிறப்பாகத் தொண்டு செய்த இருவருக்கு இந்தச் சிறப்புப் பட்டத்தைவழங்குகிறது. இந்தப்பட்டமளிப்பு விழாவில் ரூ 5000/— மதிப்புள்ள தங்கப் பதக்கமும், பொன்னாடையும் சான்றிதழும் கொடுப்பார்கள். குழந்தைகளுக்கான சிறந்த கவிதைகளை இயற்றி, பலருக்கு வழிகாட்டியாக விளங்கியதற்காகவும், வாழ்நாள் முழுதும் குழந்தைகளின் அறிவியக்கத்துப் பணி புரிந்ததற்காகவும் 1981ம் ஆண்டு இப்பட்டம் 'கோகுலம்' கௌரவ ஆசிரியருக்கு வழங்கப்பட்டது.

* ஹார்ஸ் பவர் (Horse power) என்கிறார்களே, அப்படியென்றால்...?

— வெ. சூடாமணி, சென்னை—19.

நம் நாட்டில் மாடுகளை நாம் பயன்படுத்தி வருவதுபோல், இங்கிலாந்தில் குதிரைகளைப் பயன்படுத்துகிறார்கள். ஆகையால் பாமர மக்களும் புரிந்து கொள்ளும்படி நீராவி எந்திரத்தின் திறமையை விளக்க விஞ்ஞானி ஜேம்ஸ் வாட் குதிரைத் திறன் (Horse Power) என்ற சொற்களை முதலில் பயன்படுத்தினார். திறமைமிக்க குதிரைகள் வேலை செய்யும் திறனின் சராசரியை அவர் அளவிட்டு இவ்வாறு கூறினார். ஒரு குதிரைத் திறன் என்பது சுமார் ஒன்றரை வாட்டுக்குச் சமம். இதையே வேறுவிதமாகவும் சொல்வார்கள். 550 பவுண்டு எடையுள்ள ஒரு பொருளை ஒரு விநாடி நேரத்தில் ஓர் அடி உயரம் தூக்கக் கூடிய திறனே குதிரைத் திறன் என்பார்கள்.

* எங்களுக்கான அழகழகான வண்ணப் படங்களை மாதந்தோறும் தந்துவரும் ஓவியர் விநு அவர்களின் படத்தை வெளியிடக் கூடாதா? அவருடைய முகவரியைத் தெரிவிப்பீர்களா?

— பி. ஏகாம்பரம், கோவை — 8.



இவர்தான் ஓவியர் விநு. இவரது முகவரி: ஓவியர் விநு, 16, வேலாயுத முதலித் தெரு, நுங்கம்பாக்கம், சென்னை — 34.

* நாம் வாழும் நாடு 'இந்தியா' என்று யாரால் அழைக்கப்பட்டது? எப்போது?

— இரா. முருகன், பழனி—1.

சொல்லுகிறோம்.

நம் நாட்டினர் இதைப் பாரதம் என்றும் பரத கண்டம் என்றுமே ஆரம்ப காலத்திலிருந்து அழைத்து வந்தார்கள். நம் நாட்டு அரசியல் அமைப்பிலும் 'பாரதம்' என்ற பெயரே அதிகாரபூர்வமாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும், முதல் முதலாக நம் நாட்டுக்கு வந்த அயல்நாட்டுக்காரர்களான கிரேக்கர்களும், பாரசீகர்களும் சிந்துப் பகுதியைத்தான் நன்கு தெரிந்து வைத்திருந்தார்கள். ஆகையால் பாரசீக மொழியில் நம் நாட்டை 'ஹிந்து' என்றும், கிரேக்க மொழியில் 'இந்தஸ்' என்றும் தங்கள் நூல்களில் எழுதினார்கள். இந்தச் சொற்களே பிறகு, 'இந்தியா' என்று மாறிவிட்டது!

* குரங்கையும், பாம்பையும் சண்டைக்கு விட்டால், எது ஜெயிக்கும்?

— ஆர். சுந்தரம், சென்னை — 17.



பாம்பைக் கண்டாலே குரங்கு பயந்து நடுநடுங்கி, நாலு கால் பாய்ச்சலில் ஓடிவிடும். அப்புறம் எப்படிச் சண்டை போடுவதாம்!

* அண்டார்க்டிகா கண்டத்தைக் கண்டு பிடித்தவர் யார்?

— ஆர். ஆனந்தி, தென்கரை.

அண்டார்க்டிகா கண்டத்தில் முதல் முதலாகக் கால் வைத்தவர் ஒரு நார்வேக்காரர். பெயர்: கிறிஸ்டென் ஜன்.

* பேரிக்காய் நமக்கு எங்கிருந்து கிடைக்கிறது?

— வெ. பொன்னியம்மாள், திருச்சுழி

நம் தமிழ்நாட்டிலுள்ள நீலகிரி, பழநி, ஏர்க்காடு போன்ற இடங்களிலிருந்து கிடைக்கிறது.

* கேரளாவில் பள்ளி மாணவர் மூவர் தேசிய கீதம் பாட மறுத்தார்களாமே, அப்படிப் பாட மறுப்பது சரியா?

— எஸ். லதா (392), நாட்டரசன்பேட்டை

சரியில்லை. தேசியக் கொடி, தேசியச் சின்னம், தேசிய கீதம் ஆகியவற்றுக்கு உரிய மரியாதை செலுத்த வேண்டியது மிக மிக அவசியம். தேச விடுதலைக்காகப் பெரும் பெரும் தியாகங்கள் செய்த தலைவர்கள் தேர்ந்தெடுத்த கீதம் இது. இதை அலட்சியப் படுத்தும் போக்கு வளர்ந்தால், தேச ஒற்றுமைக்கே ஆபத்து!

* நீக்ரோக்கள் எந்த எந்த நாடுகளில் வசிக்கிறார்கள்?

— சி. குமாரசாமி, கொன்னிடம்.

ஆப்பிரிக்காவில் சுமார் 20 கோடி. அமெரிக்காவில் சுமார் 13 கோடி நீக்ரோக்கள் இருக்கின்றனர்.

* 'வெள்ளாடு,' 'வெள்ளாடு' என்கிறோம். ஆனால், நான் பார்க்கும் வெள்ளாடுகளெல்லாம் கறுப்பாகவே இருக்கின்றனவே, எப்படி அதற்கு வெள்ளாடு என்று பெயர் வைத்தார்கள்?

— மீ. குமரன், திருமயம்.



ஒரு சில வெள்ளாடுகள், வெள்ளை நிறத்திலும் இருக்கின்றன. பழுப்பு நிறத்திலும் இருக்கின்றன. ஆனாலும், பெரும்பாலான ஆடுகள் நீ பார்த்தது போல் கறுப்பு நிறத்தில்தான் இருக்கின்றன. ஆகையால், 'கறுப்பாடு' என்ற பெயர்தான் பொருத்தமாக இருக்கும். ஆனால், வெள்ளாடு என்று பெயர் வைத்தவர் பார்த்த ஆடு வெள்ளையாக இருந்திருக்குமோ?


பழமொழிப் புதிர்





இரண்டு பழமொழிகளை இந்த இரண்டு படங்களும் நினைவூட்டுகின்றன. அவை எந்த எந்தப் பழமொழிகள்?

விடை 67 ஆம் பக்கம்.



வெறிநாய்க் கடி நோய்

டாக்டர் கு. கணேசன்.

ஞாயிற்றுக்கிழமை மாலை.

அன்று நான் ஓய்வாக இருந்தேன். பக்கத்துவீட்டிலிருந்துபத்தாம்வகுப்பு படிக்கும் மணியும், எட்டாம் வகுப்பு படிக்கும் கீதாவும் என்னைச் சந்திக்க வந்தார்கள். அப்போது எங்களுக்குள் நடந்த உரையாடலை இங்கே தருகிறேன்.

கவனமாகப் படியுங்கள். கண்டிப்பாக உங்களுக்கு உபயோகமாக இருக்கும்.

மணி, கீதா (இருவரும்): வணக்கம், டாக்டர்!

நான்: வணக்கம். என்ன, அண்ணனும் தங்கையும் சாவகாசமாக வருகிறீர்கள். வீட்டு வேலை எல்லாம் முடிந்ததா?

மணி: முடிந்தது டாக்டர்...

நான்: என்ன கீதா, எப்பவும் சிரிச்சிக்கிட்டே வருவே... இன்னைக்கு ஏதோ கப்பல்மூழ்கினமாதிரிசோகமா இருக்கியே... என்ன விஷயம்?

மணி: உண்மைதான் டாக்டர். கீதா சோகமாகத்தான் இருக்கிறாள். இன்னைக்குக் காலையிலே அவள் வகுப்புத் தோழி ஒருத்தி வெறிநாய் கடிச்சதாலே இறந்துட்டாளாம். அதான் காரணம்.

நான்: அப்படியா! வெறிநாய்க்கடி நோய் மிகவும் ஆபத்தான நோயாச்சே!

கீதா: அப்படித்தான் எல்லாரும் சொல்லிக்கிட்டாங்க, டாக்டர். அதான் அதைப்பத்தி விளக்கமா உங்ககிட்டே கேட்கலாம்னு வந்திருக்கோம்...

நான்: ரொம்ப நன்றி. வெறிநாய்க்கடி நோயைப் பற்றி நீங்கள் அவசியம் தெரிந்து கொள்ளணும்... நல்லா விளக்கமாகவே சொல்றேன்...

மணி: வெறிநாய்க்கடி நோய்னு என்ன, டாக்டர்?

நான்: வெறிநாய்க்கடிநோய்ங்கறது 'ரேப்டோ வைரஸ்' (Rabdo Virus) எனப்படுகிற வைரஸ் கிருமிகளின் தாக்குதலினால் வரக் கூடிய நோய். இதை ஆங்கிலத்தில் 'ரேபீஸ்' (Rabies) என்று அழைப்பார்கள்.

கீதா: இந்நோய் எப்படி வருகிறது.



எப்படிப் பேசுவார்கள்?

வார்த்தையை அளந்து பேசுபவர் — தையற் கடைக்காரர்
வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என பேசுபவர் — கசாப்புக் கடைக்காரர்
சட்டத்தோடு பேசுபவர் — படக்கடைக்காரர்
மட்டம் தட்டிப் பேசுபவர் — கொத்தனார்
சரம் மாறிப் பேசுபவர் — பூக்கடைக்காரர்
பட, படவென்று பேசுபவர் — வெடிக் கடைக்காரர்
பிரஸ் பண்ணிப் பேசுபவர் — அச்சாபீஸ் வைத்து இருப்பவர்

— எடையூர் சிவமதி.

டாக்டர்?

நான்: அசுத்தமான காற்று மண்டலத்தில் மிதந்து கொண்டிருக்கிற ரேப்டோ வைரஸ் கிருமிகள் முதலில் தெருவில் அலைந்து கொண்டிருக்கும் சொறி நாய்களைத் தாக்கி, வெறிநாய்களாகமாற்றும். அச்சமயத்தில் நாயின் உடம்பில் வைரஸ் கிருமிகள் பல்கிப் பெருகி நாயின் உமிழ்நீர், இரத்தம், நிணநீர், நரம்பு மண்டலம் ஆகியவற்றில் பெருந்திரளாக வாழ்க்கை நடத்தும். இந்த வெறிநாய்கள் நம்மைக் கடிக்கும் போது நாயின் உமிழ்நீரிலிருந்து வைரஸ் கிருமிகள் வெளிப்பட்டு நம் இரத்தத்தில் கலந்து நேராக மூளைக்குச் செல்லும். அங்கு அவை சும்மா இருப்பதில்லை. மூளையின் திசுக்களைத் தின்று வெறிநாய்க்கடி நோயினை உண்டாக்கும்.

மணி: சரி டாக்டர், நமக்கு வெறிநாய்க்கடி நோய்தான் வந்துள்ளது என்பதை எப்படி அறிந்து கொள்வது?

நான்: அதையும் சொல்கிறேன், கேள். ஒருவரை வெறிநாய் கடித்து விட்டது என்று வைத்துக் கொள்வோம். கடித்த பத்தாவது நாளிலிருந்து சுமார் மூன்று மாதங்களுக்குள் வெறிநாய்க்கடி நோயின் அறிகுறிகள் தெரிய ஆரம்பிக்கும். முதலில் கடிபட்ட இடத்தில் வலி ஏற்படும். வீக்கம் உண்டாகும். லேசாகக் காய்ச்சல் வரும். சரியாகப் பசிக்காது. சாப்பிட்டாலும் வாந்தி வரும். எப்போதும் போல் இல்லாமல் அமைதி குலைந்து காணப்படுவார்கள். இவையெல்லாவற்றையும் விட முக்கியமான அறிகுறி என்னவென்றால், வெறிநாய் கடிபட்டவர்கள் தண்ணீரைக் கண்டாலே பயப்படுவார்கள். தண்ணீரைக் குடிக்கச் சொன்னாலும் குடிக்க மாட்டார்கள். அப்படியே வற்புறுத்திக் குடிக்கச் செய்தாலும், அவர்களால் குடிக்க இயலாது. தண்ணீரைக் கண்டதும் முகம் விகாரமடையும். வேகமாக மூச்சு வாங்கும். முகம் கோணி வலிப்பு வரும். வாயில் நுரை தள்ளும். மயக்கம் வரும். நோய் ஆரம்பித்த 48 மணி நேரத்திற்குள் மரணம் அவர்களை ஆட்கொள்ளும்.

மணி: அப்படியா! கேட்கவே பரிதாபமாக இருக்கிறதே! வெறிநாய்க்கடி நோயைக் குணப்படுத்த மருந்துகளே கிடையாதா, டாக்டர்?

நான்: ஆமாம் மணி! வெறிநாய்க்கடி நோய் வந்துவிட்ட பிறகு, அதைக் குணப்படுத்த இன்னமும் மருந்துகள் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால், நோய் ஆரம்பமாவதற்குள் அதைத் தடுத்துவிடக் கூடிய தடுப்பு மருந்துகள் உள்ளன.

கீதா: அப்படித்தான் டாக்டர் என் தோழி வீட்டிலும் சொல்லிக் கொண்டார்கள். நாய் கடித்து பத்து நாட்கள் வரை கவனிக்காமல் விட்டு விட்டார்களாம். ஆரம்பத்திலேயே கவனித்து முறையாகத் தடுப்பு ஊசிகளைப் போட்டிருந்தால் தோழியின் உயிரை இழந்திருக்க மாட்டோம் என்று வகுப்பாசிரியர் கூடச் சொன்னார், டாக்டர்.

மணி: அப்படியென்றால் அந்தத் தடுப்பு முறைகளை எங்களுக்கும் சொல்லுங்களேன், டாக்டர்!

நான்: அவசியம் சொல்கிறேன். முதலில் நாய் கடித்த இடத்தை நன்கு சோப்புப் போட்டு வெந்நீரால் கழுவ வேண்டும். சுத்தமான துணியால் காயத்தைத் துடைத்துச் சுத்தம் செய்து

விட்டு உடனே மருத்துவரிடம் செல்ல வேண்டும். மருத்துவர் 'டெட்டனஸ் டாக்சாய்டு' (Tetanus Taxoid) என்ற தடுப்பு மருந்தை முதலில் போடுவார். பின்னர் 'ஆன்டி ரேபீஸ் வேக்சின்' (Anti Rabies Vaccine) என்ற தடுப்பு மருந்தைத் தொப்புளைச் சுற்றி தினமும் ஓர் ஊசி வீதம் பதினான்கு நாட்களுக்குச் செலுத்துவார். இப்போதுள்ள நவீன மருத்துவத்தில் இந்த அளவு முறைகள் கூடக் குறைந்துள்ளன. இந்தத் தடுப்பு ஊசிகளை முறையாகப் போட்டுக் கொள்ள வேண்டும். சோம்பேறித்தனத்தினாலோ, அலட்சியப் போக்கினாலோ அரைகுறையாக வைத்தியம் செய்தால் நம் உயிருக்குத்தான் கேடு வரும்.

சீதா: இது தவிர வேறு தடுப்பு முறைகள் இருந்தாலும் சொல்லுங்கள், டாக்டர்!

நான்: பொதுவாக நாய்க்கடியைத் தவிர்க்கவேண்டும். சில விளையாட்டுக் குழந்தைகளுக்கு நாயைக் கண்டாலே குஷி கிளம்பிவிடும். அதைக் கல்லெறிந்து வம்புக்கிழுத்து விளையாடுவார்கள். இதைத் தவிர்க்க வேண்டும். நாயுடன் விளையாடுவது ஆபத்தை விளைவிக்கும் என்பதை உணர வேண்டும்.

சிலர் வீட்டில் செல்லமாக நாய் வளர்ப்பார்கள். அந்நாய்களுக்கு, கால் நடை மருத்துவரின் உதவியுடன் தடுப்பு ஊசி போட்டுக் கொள்ள வேண்டும்.

தடுப்பு ஊசி போடாத தெரு நாய்களை அகற்ற வேண்டும். முக்கியமாக வெறிநாய் என்று சந்தேகம் வந்தால் உடனே அகற்ற வேண்டும்.

மணி : வெறிநாய் என்பதை எப்படி அறிந்து கொள்வது டாக்டர்?

நான்: வெறி நாய்கள் எப்போதும் எச்சில் வடிய நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு தெருவில் அங்குமிங்கும் அமைதியின்றி ஓடும். ஓயாமல் குரைக்கும். தூண்டுதலே இல்லாமல் கடிக்கும். வெறிபிடித்த சில நாட்களில் நாய் இறந்து விடும். எனவே, கடித்த நாயை அடித்துப் போடாமல் கட்டி வைத்துப் பாதுகாக்க வேண்டும். அந்நாய் சுமார் பத்து நாட்களுக்குள் இறந்து விட்டால் அதை வெறி நாய் என்றும், இறக்கா விட்டால் சாதாரண நாய் என்றும் அறிந்து கொள்ளலாம்.

சீதா: சில சமயம் நாய் கடிக்காமல் நக்கி விடுமில்லையா, டாக்டர்? அப்போது என்ன செய்வது?

நான்: சரியான சந்தேகம். நாய் கடித்தாலும் சரி, நக்கினாலும் சரி, அல்லது சிறு கீரலிலோ, காயத்திலோ அதன் உமிழ்நீர் பட்டாலும் சரி, உடனே தடுப்பு ஊசி போட்டுக் கொள்ள வேண்டும். இதே மாதிரி சில மாதங்களுக்கு முன்பு கடிபட்டு, அதற்காகத் தடுப்பு ஊசி போட்டுக் கொண்டவர்கள் மீண்டும் மற்றொரு நாயால் கடிபட்டால், மீண்டும் தடுப்பு ஊசி போட்டுக் கொள்ளத்தான் வேண்டும்.

மணி: கடைசியாக ஒரு கேள்வி டாக்டர். வெறிநாய் கடித்த மனிதன் நாய் மாதிரியே குரைப்பானமே... அது உண்மையா டாக்டர்?

நான்: உண்மையில்லை. உன்னை மாதிரிப் பலரும் இப்படித் தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். வெறி நாய் கடித்த மனிதன் நாய் மாதிரி குரைப்பதில்லை. ஆனால், அவனது தொண்டைக் குழாய் சுருங்கி, விடுவதால், அந்தக் குறுகிய வழியாகக் காற்று உள்ளே இழுக்கப்படும் போது ஒருவிதக் கேவல் போன்ற சத்தம் கேட்கும். இதைத்தான் அவ்வாறு தவறாகப் புரிந்து கொள்கிறார்கள்.

சீதா: வெறிநாய்க்கடி நோயுள்ள மனிதன் நம்மைக் கடித்துவிட்டால் என்ன செய்வது, டாக்டர்?

நான்: அதுவும் ஆபத்துத்தான். அப்போதும் நாம் மேற்சொன்ன தடுப்பு ஊசிகளைப் போட்டுக் கொண்டால் வரக்கூடிய ஆபத்தைத் தவிர்க்கலாம்.

மணி, சீதா (இருவரும்): ரொம்ப நன்றி, டாக்டர். வெறிநாய்க்கடி நோய் பற்றி விளக்கமாகத் தெரிந்து கொண்டோம். இனிமேல், நாங்கள் கவனமாக இருந்து கொள்வோம்.


நான்: மிக்க சந்தோஷம்.

மணி, சீதா (இருவரும்): குட்பை, டாக்டர்... குட்நைட்!

(விடைபெறுகிறார்கள்)

பிருந்தாவனம்

கடவுளுக்குக் கடிதம்!



நம் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் நாம் கடிதம் எழுதுகிறோம். ஆனால், கடவுளுக்குக் கடிதம் எழுதுவது பற்றி உங்களுக்குத் தெரியுமா? ஆம்; உப்பிலியப்பன் கோயிலில் ஸ்ரீனிவாசப் பெருமாளுக்கு யார் வேண்டுமானாலும் கடிதம் எழுதலாம். அவரவருடைய ஆசைகளை, வேண்டுதல்களை, குறைகளை எழுதி, அங்குள்ள 'பிரார்த்தனைப் பெட்டி'யில் போடுகிறார்கள். வெளியூரில் இருந்தும், இந்த மாதிரிக் கடிதங்கள் வரும். அவற்றையும் பிரார்த்தனைப் பெட்டியில் போடுவார்கள். ஒரு குறிப்பிட்ட நாளில், இக்கடிதங்களெல்லாம் பெருமாளின் காலடியில் சேர்க்கப்படும். பெருமாள் பக்தர்களின் வேண்டுகோளை உடனே நிறைவேற்றி விடுவார் என்று நம்புகிறார்கள்.

— பி. அருண் (13,561), பாபநாசம்.

எளிய முறை



L. K. G., U. K. G. படிக்கின்ற குழந்தைகளுக்கு Ten க்குப் பிறகு, Eleven, Twelve என்று சொல்வதும் எழுதுவதும் சிரமமாயிருக்கிறது. இதை ஏன் கீழ்க்கண்டவாறு மாற்றி அமைக்கக் கூடாது?

Twenty க்குப் பிறகு Twenty-One, Twenty-Two, Twenty-Three என்கிறோம். Thirty, Forty என்பதற்குப் பிறகும் கூட One, Two, Three என்று சேர்த்து Nine வரை கூறுகிறோம். அதேபோல் Ten-One, Ten-Two, Ten-Three என்று Ten-Nine வரை கூறினால் சிறு குழந்தைகளுக்கு எளிதாக இருக்குமே?

— ஜெ. விஜயலட்சுமி (2847), கோவை — 20.

எழுதாத பெரியார்கள்!



புத்தர், இயேசு கிறிஸ்து, ஹோமர், சாக்ரடீஸ், ஈசாப் இவர்களில் எவருமே ஒரு வரி கூட எப்போதும் தங்கள் கையால் எழுதியதில்லை!

— வி. நாராயணன் (12,014), புதுக்கோட்டை.

முதுமையும் இளமையும்

“நீங்கள் கண்ணாடி அணியும்போது முதியவராகவும் கண்ணாடி அணியாத போது இளைஞராகவும் தோன்றுகிறீர்கள்” என்று பிரதமர் ராஜீவ் காந்திக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தாள், ராஜஸ்ரீ போஸ்லே என்ற ஒரு கல்லூரி



மாணவி. கடிதத்துடன் ராஜீவ் காந்தி கண்ணாடி அணிந்தும், அணியாமலும் உள்ள புகைப்படங்களையும் ஆதாரமாக அனுப்பியிருந்தாள்.

அதற்கு பிரதமர் எழுதிய பதிலில், 'எனக்கு 42 வயதாகிறது. ஆனாலும், பார்வை நன்றாகவே உள்ளது. நான் அணிவது சன் கிளாஸ். போட்டோ எடுத்த விதம் என்னை முதுமையாகக் காட்டுகிறது'' என்று குறிப்பிட்டிருந்தார்.

— இர. நந்தினி (13,743),
சேலம் — 1.

தம்பி எழுதியவை

என் அருமைத் தம்பியிடம் சில சொற்களைக் கூறித் தவறில்லாமல் எழுதச் சொன்னேன். அவன் எழுதிய சொற்களைப் பாருங்கள்:


நான் கூறியவை	அவன் எழுதியவை
வரிசை	வரிஸ் ஐ
கை	கய்
இங்ஙனம்	ங்ஙனம்
இல்லை	ல்லை
தலைவர்	தலய்வர்
தேவை	தேவய்
இண்டிகேட்டர்	ண்டிகேட்டர்



''என்னடா இப்படி எழுதியிருக்கிறாய்?'' என்று கேட்டதற்கு, 'ஒலியின் அடிப்படையில் எழுதினேன். நீயே படித்துப் பார்'' என்கிறான்.

— ம. அருள் (2167),
கதிராமங்கலம்.

பலசாலிகள்




''பஸ் கண்டக்டர்களெல்லாம் பலசாலியா! எப்படிடா?''

''அவங்க ஊதினாலே பஸ் ஓடுதே! அதினாலேதாண்டா.''

— இரா. ஆனந்த் (8412),
வேளச்சேரி.

என் பொழுதுபோக்கு



நான் இதுவரை 3000 க்கும் மேற்பட்ட பொது அறிவுக் கேள்வி — பதில்களையும் 200 க்கு மேற்பட்ட பொன் மொழிகளையும் சேகரித்துள்ளேன். நான் பலபுத்தகங்களிலிருந்தும்

பெரிய தமிழறிஞர்களின் சொற்பொழிவுகளிலிருந்தும், 'கோகுலம்' போன்ற பத்திரிகைகள் மூலமாகவும் இவற்றைச் சேகரித்தேன். என் தந்தையும் எனக்கு நிறையப் புத்தகங்களை வாங்கிக் கொடுத்திருக்கிறார். பாடப் புத்தகங்களைப் படிக்கும் நேரம் தவிர, மற்ற நேரங்களில் இதன் மூலம் அறிவை வளர்த்துக் கொள்ளலாம்.

— எஸ். கணேஷ் (9661),
வண்டு வாஞ்சேரி.

ஒற்றிக் கொள்ளுதல்



குமார், தன் பாடப் புத்தகங்களைப் பரப்பி வைத்துக் கொண்டிருந்தான். அப்போது, வேகமாக வந்த அவன் அம்மாவின் கால், பரப்பியிருந்த ஒரு புத்தகத்தின் மீது பட்டுவிட்டது. உடனே, அவள், அந்தப் புத்தகத்தைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டாள்.

பிறகு, குமாரைப் பார்த்து, "ஏண்டா, இப்படிப் புத்தகங்களைப் பரப்பி வைத்திருக்கிறாய்?" என்று கேட்டாள்.

"நீதானேம்மா, நான் புதிசாப் புத்தகங்களை வாங்கி வந்ததும், பிறர் கண்ணில் ஒற்றிக் கொள்ளும்படி புத்தகங்களை வைத்துக் கொள்ளுமாறு சொன்னியே, அதை மறந்திட்டியா, அம்மா" என்று கேட்டான் குமார்.

— எஸ். ராஜகோபால் (3087),
சென்னை — 28.

முடியுமா? முடியாதா?

அட்மிரல் இ—சுன்—சின் என்பவர் உலகின் முதல் நீர் மூழ்கிக் கப்பலைக் கண்டுபிடித்த கொரிய நாட்டுக்



கடற்படை வீரர். அவர் சிறுவராயிருந்த போது, அவருடைய தந்தை அவரை அழைத்து, "நான் இப்போது இந்த அறையில் இருக்கிறேன். உன்னால் என்னை இந்த அறையை விட்டு வெளியில் வரவழைக்க முடியுமா?" என்று கேட்டார்.

"நீங்கள் அறைக்கு வெளியே இருந்தால், நிச்சயமாக உங்களை உள்ளே அனுப்ப முடியும்" என்றார் சிறுவராயிருந்த சி—சுன்—சின்.

"எங்கே பார்க்கலாம்" என்று கூறி அறையை விட்டு வெளியே வந்தார் தந்தை.

"ஆ! முதலில் கேட்டீர்களே, 'என்னை அறையை விட்டு வெளியே வரவழைக்க முடியுமா?' என்று. இதோ இப்போது வெளியே வரவழைத்து விட்டேனே!" என்று கூறிக் குதித்தார் இ—சுன்—சின்!

— இ. மாயா (12,095),
கும்பகோணம் — 2.


வெள்ளைத் தங்கம்

* எகிப்தில் பருத்தியை 'வெள்ளைத் தங்கம்' என்று அழைக்கிறார்கள்!
* முதன் முதலில் ஐந்தாண்டுத் திட்டம் ரஷ்யாவில் ஸ்டாலினால் அமுல் படுத்தப்பட்டது.




* வெள்ளைக் கொடி சமாதானத்தைக் குறிப்பது போல, சிவப்புக் கொடி போரையும், மஞ்சள் கொடி நோயையும் குறிக்கின்றன.

— கோ. நாகேஸ்வரன் (10,265),
குடியாத்தம்.



இருவருக்கும் ஒற்றுமை!



கருமி குப்பன் அவசர வேலையாக ஓர் இடத்திற்குச் செல்ல வேண்டி ஆட்டோவில் ஏறினான். பஸ்ஸில் கூட ஏறாத அவன் ஆட்டோவில் சென்றது ஆச்சரியமே.

குப்பன் இறங்க வேண்டிய இடம் வந்தது. அப்போதுதான் ஆட்டோ டிரைவருக்கு, தான் மீட்டரைப் போட மறந்தது தெரிந்தது. அதை அவன் குப்பனிடம் சொன்னான்.

உடனே குப்பன், ''ஆஹா! நம் இருவருக்கும் என்ன ஒற்றுமை, பார்த்தாயா? நீ ஆட்டோ மீட்டரைப் போட மறந்து விட்டாய். நானோ என் பர்ஸை எடுத்து வர மறந்து விட்டேன். ஆஹா, ஆஹா, என்ன ஒற்றுமை?'' என்று கூறிக் கொண்டே வேகமாக நடந்து போய் விட்டான்!

— மு. சுரேஷ்குமார் (381),
கும்மிடிப்பூண்டி.

எத்தனை பேர்?

''டேய் ராஜா, உனக்கு இந்த ஆண்டு எத்தனை பேர் தீபாவளி வாழ்த்துக்கள் அனுப்பினார்கள்?'' என்று கேட்டார் ராஜாவின் தந்தை.

''எனக்கு வாழ்த்து அனுப்பியவர்கள், அவர்களைப் போல் இன்னொரு மடங்கு, வாழ்த்து அனுப்பியவர்களில் பாதி — மூன்றையும் கூட்டினால் மொத்தம் 70 வரும். அப்படியானால், எனக்கு எத்தனை பேர் அனுப்பினார்கள் என்று நீங்களே கண்டுபிடியுங்கள் அப்பா!'' என்று சிரித்துக் கொண்டே சொன்னான்.

அவரும் சிரித்துக் கொண்டே சரியான விடையைக் கூறிவிட்டார். அவர் கூறிய விடை என்ன?

— சு. ஜெயராஜ் (12,259),
திருவள்ளூர்.

விடை: 28.

ஐந்து ரூபாய்




''ஏண்டா செல்வா, 'ஐந்து ரூபாய் போச்சு, ஐந்து ரூபாய் போச்சு'ன்னு புலம்புறியே, ஐந்து ரூபாயைத் தொலைச்சிட்டியா?''

''இல்லேடா, ஒரு ஜோக் எழுதிப் பத்திரிகைக்கு அனுப்ப நினைச்சேண்டா. ஜோக் மறந்து போச்சுடா. அனுப்பினால்தானே ஐந்து ரூபாய் சன்மானம் கிடைக்கும்?''

— எஸ். ஜெயஸ்ரீ (1254),
திருச்சி — 14.

கடவுளைக் கண்டவர்கள்

சாய்ந்த லிங்கம் நிமிர்ந்தது!



தேவி. நாச்சியப்பன்

"குங்கிலியம்... குங்கிலியம்.. வாசனை மிக்கது. பூசைக்கு ஏற்றது. வாங்கலியோ குங்கிலியம்... குங்கிலியம்..." என்று கடைவீதியில் ஒருவன் கூவி விற்றுக் கொண்டிருந்தான். மாட்டின் மீது மூட்டையைப் போட்டுக்கொண்டுவந்த அவனைக் கண்டார் கலியனார்.

"ஏன் அப்பா, இந்தக் குங்கிலியம் நல்ல வாசனை உள்ளதா? இறைவனுக்குப் பூசை செய்ய ஏற்றதா?

இதோ, இந்தத் தங்கத் தாலியை வைத்துக்கொண்டு அந்தக் குங்கிலிய மூட்டையை என்னிடம் தந்துவிடு" என்றார் கலியனார். தான் எதிர்பார்த்ததற்கு மேலாகவே பொன் கிடைத்த மகிழ்ச்சியில் வியாபாரி குங்குலிய மூட்டையைக் கலியனாரிடம் கொடுத்துச் சென்றான்.

கலியனார் குங்கிலியம் கிடைத்த மகிழ்ச்சியில் வீட்டில் ஒரு துளி அரிசியும் இல்லாமல் மனைவி, மக்கள் வாடுவதை மறந்தார். தாலியை விற்றுப் பணம் பெற்று அரிசி வாங்கி வரச் சொன்ன மனைவியின் சொல்லையும் மறந்தார்.

நேராகக் கோவிலுக்குச் சென்றார். வாங்கிய குங்கிலிய மூட்டையை ஓர் இடத்தில் வைத்தார். அன்றைய பூசைக்குத் தேவையான குங்கிலியத்தை எடுத்துக் கொண்டு, வழக்கம் போல் குங்கிலியம் புகைத்து வழிபாடு செய்தார். இதில்தான் கலியனார் பெருமகிழ்வு பெற்றார்.

இரண்டு நாள் பட்டினியாகக் கிடந்த கலியனாரின் மனைவி, மக்கள் அனைவரும், அரிசியுடன் கலியனார் வருவார், வருவார் என்று எதிர்பார்த்தனர். அவர் வந்தபின் சமைத்து உண்ணலாம் என ஆவலாகக் காத்திருந்தனர். கலியனார் வராததால், களைப்பில் குழந்தைகள் தூங்கிவிட்டனர். கலியனாரின் மனைவியோ 'தாலியை விற்க முடியாமல் சிரமப்படுகிறாரோ? அரிசி வாங்க இத்தனை நேரமாகுமா?' என்று பலவாறு சிந்தித்தபடி கண்ணயர்ந்து விட்டார். அப்போது அந்த அம்மையார் ஒரு கனவு கண்டார். அக்கனவில் இறைவனே தோன்றி, "அம்மையாரே, எழுந்து உம் கணவருக்கு உணவாக்குக," என்றார். அம்மையார் கண் விழித்துப் பார்த்தார். என்ன ஆச்சரியம்! வீடு முழுவதும் நெற்குவியலும், பொற்குவியலுமாக இருந்தன! இறைவன் திருவருளை நினைத்தபடி கணவருக்கும் பிள்ளைகளுக்கும் சமையல்

செய்யத் தொடங்கினார்.

கலியனார் கோவிலில் பூசை செய்து கொண்டிருக்கும் போது, "நீ மிகப் பசியாய் இருக்கிறாய். வீட்டிற்குச் சென்று உணவருந்துக" என்று ஆண்டவன் கூறுவது போலிருந்தது. உடனே பூசையை முடித்துக் கொண்டு வீடு நோக்கி வந்தார், கலியனார். தயங்கியபடியே வீட்டுக்குள் நுழைந்த அவர் வீட்டிலே தங்கக்குவியலையும் நெற்குவியலையும் கண்டு வியப்படைந்தார்.

அவருடைய மனைவி நடந்ததைக் கூறினார். கலியனார் மகிழ்வுடன் இறைவனுக்கு நன்றி செலுத்தினார். வழக்கம் போல் குங்கிலியம் புகைத்து இறை வழிபாடு செய்வதை மட்டும் அவர் என்றுமே மறந்ததில்லை. தாம் பெற்ற செல்வத்தைக் கொண்டு அடியார்களுக்கு அமுதளித்தும், வேண்டிய உதவிகளைச் செய்தும் வாழ்ந்து வந்தார்.

அப்போது, திருப்பனந்தாள் என்னும் ஊரில் உள்ள சிவலிங்கம் ஒரு பக்கமாகச் சாய்ந்திருக்கும் செய்தியைக் கலியனார் அறிந்தார்.

அந்த இறைவனுக்கு வழக்கமாகப் பூசை செய்து வந்தவர், ஒரு நாள் வெளியூர் செல்ல வேண்டியிருந்ததாம். அவருக்கு ஆண் குழந்தை இல்லை. ஒரே ஒரு பெண்தான் இருந்தாள். அவளை அழைத்து, "நான் இன்று வெளியூர் செல்வதால், நீ கோயிலுக்குச் சென்று பூசை செய்து வா" என்றார்.

தினமும் தந்தை எவ்வாறு பூசை செய்வார் என்பது அந்தச் சிறுமிக்குத் தெரியும். ஆகவே, அவள் தந்தை செய்வது போலவே அபிஷேகம் செய்தாள். பூசைக்கு உரிய பொருட்களை எதிரே வைத்தாள். பிறகு லிங்கத்திற்கு அணிவதற்காக மாலையை எடுத்தாள். அப்போது, இடையிலிருந்த ஆடை சிறிது நழுவவே, அவள் இரு முழங்கைகளாலும் ஆடையை இடுக்கிக் கொண்டு, மாலையைப் போட முயன்றாள். முடியவில்லை. கையில் எடுத்த மாலையைக் கீழே வைக்க மனம் வரவில்லை. மீண்டும் மீண்டும் முயன்றாள். 'ஐயோ! எட்டவில்லையே!' என்று ஏங்கினாள். அவள் பட்ட துயரத்தைக் கண்ட இறைவன் அவள் இருந்த பக்கமாகச் சாய்ந்தான். உடனே சிறுமி மிகுந்த மகிழ்ச்சியுடன் மாலையைப் போட்டுவிட்டு வீடு வந்து சேர்ந்தாள்.

மறுநாள், அவளுடைய அப்பா வந்து பார்த்த போது சிவலிங்கம் ஒரு பக்கமாகச் சாய்ந்திருப்பதைக் கண்டார்., நிமிர்த்திப் பார்த்தார்; முடியவில்லை. பலமுறை முயன்றார்; பலனில்லை.

இச்செய்தி ஊரெங்கும் பரவியது. அரசன் காதுக்கும் எட்டியது. சிவலிங்கத்தை நிமிர்த்தி வைத்துக் கும்பிட வேண்டுமென்று அரசன் விரும்பினான். படை வீரர்களை வரவழைத்தான். அவர்கள் சிவலிங்கத்தைச் சுற்றிக் கயிற்றைக் கட்டி இழுத்துப் பார்த்தார்கள். லிங்கம் நிமிரவில்லை. பிறகு குதிரைகள் வந்தன; யானைகள் வந்தன. யார் இழுத்தாலும் லிங்கம் அசைந்து கொடுக்கவில்லை. வீரர்களும், யானைகளும், குதிரைகளும் சோர்ந்து விழுந்த காட்சியைக் கண்டு மன்னன் மனம் வருந்தினான்.

அப்போது அங்கு வந்தார் கலியனார். அவர் சிவலிங்கத்தைச் சுற்றி ஒரு கயிற்றைக் கட்டினார். அதைத் தம்முடைய கழுத்தில் கட்டி இழுத்துப் பார்த்தார். "எல்லாரும் கயிற்றைக் கைகளால் பிடித்தே இழுத்தார்கள். இவரோ கழுத்தில் கட்டி இழுக்கிறாரே! கழுத்து இறுகினால்... ஐயோ! இவர் உயிர் போய்விடுமே!" என்று எல்லோரும் பயந்தார்கள்.

கலியனார் பயப்படவில்லை. தொடர்ந்து இழுத்து இழுத்துப் பார்த்தார். அவர் வெறும் கயிறு கொண்டு இழுக்கவில்லை; பக்தியென்னும் கயிறு கொண்டு இழுத்ததால், சிறிது நேரத்தில் சிவலிங்கம் நிமிர்ந்து விட்டது! முன்பு இருந்த நிலைக்கு வந்துவிட்டது!

இக்காட்சியைக் கண்டு மன்னனும் மற்றவர்களும் வியந்து போற்றி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள்.

அப்போது சிவபெருமான், விண்ணவர்கள் தூவிய மலர்களுக்கு இடையில் தோன்றி, கலியனாரை வாழ்த்தி அருளினார்.

இந்தக் கலியனாரே, பெரிய புராணத்தில் பாடப் பெற்ற குங்கிலியக் கலிய நாயனார்!



பாசம் வென்றது!

ரங்கநாயகி நாராயணன்

"பாலு! மணி ஆறரை ஆகிவிட்டது. எழுந்திரு. பள்ளிக்கு நேரமாகி விட்டது" மூன்றாவது முறையாக மகனை எழுப்பினாள் லட்சுமி.

"இதோ எழுந்திருக்கிறேம்மா" என்று கூறிக் கொண்டே புரண்டு படுத்தான் பாலு.

அடுப்பில் பால் வைத்திருந்தது நினைவுக்கு வர, உள்ளே சென்றாள் அவன் அன்னை. மறுபடி வந்து பார்த்தபோது மீண்டும் உறங்கிக் கொண்டிருந்தான் பாலு.

அவன் அன்னைக்குக் கோபம் வந்தது. "என்னடா பாலு, தினமும் இப்படியே செய்கிறாய்! எட்டு மணிப் பள்ளிக்கு ஏழு மணிக்கு எழுந்தால் எப்படி? எத்தனை முறை சொன்னாலும் கேட்பதே இல்லை நீ" — அலுத்துக் கொண்டே அவனை எழுந்திருக்கச் செய்து படுக்கையை மடித்தாள் அன்னை.

முணுமுணுத்தவாறே மெல்ல எழுந்து சென்றான் பாலு. அவன் அன்னை சொல்வது போல அவன் தினமும் மிகவும் தாமதமாக எழுந்திருப்பதால், எந்த வேலையையும் சரியாகச் செய்ய மாட்டான். பல் தேய்ப்பது, குளிப்பது, சாப்பிடுவது என்று எல்லாம் அரைகுறையாகச் செய்து விட்டு அவசர அவசரமாகப் பள்ளிக்கு ஓடுவான். இந்த அவசரத்தில் பாதி நாட்கள் ஹோம் வொர்க் நோட்டையெல்லாம் வீட்டிலேயே விட்டு விடுவான். பாதித் தூரம் சென்று மறுபடி வருவான். அதனால் பள்ளிக்கும் தாமதமாகச் செல்வான்.

இப்படி இருந்தாலும், பாலு படிப்பில் கெட்டிக்காரன். அவனுக்குத் தன் அன்னையிடம் பாசம் அதிகம். தன் தாய்க்கு உடல்நிலை சரியில்லாமல் போனால், பள்ளி செல்லக் கூட அவனுக்குப் பிடிக்காது. வெளியே விளையாடக் கூடப் போகாமல் பள்ளி நேரம் போக மீதி நேரமெல்லாம் அன்னையின் அருகிலேயே இருப்பான்.

காலையில் சீக்கிரம் எழுந்திருக்கும் விஷயத்தில் மட்டும் அம்மா சொல்வதைக் கேட்பதில்லை அவன். அவ்வளவு சோம்பல்!

இன்றும் அவன் எழுந்திருக்கும் போது மிகவும் நேரமாகிவிட்டது. அவனுடைய தங்கை நீலா பள்ளிக்குச் செல்லத் தயாராக இருந்தாள். இவனைப் பார்த்ததும் கேலியாகச் சிரித்தாள். பாலுவுக்குக் கோபம் வந்தது. ஓடிச் சென்று அவளை அடிக்கப் போனான். தந்தையின் அதட்டல் சப்தம் கேட்டு அங்கிருந்து அகன்றான்.

அன்றும் அவன் பள்ளி செல்லத் தாமதமாகிவிட்டது. அவன் அன்னைக்கு பாலுவை நினைத்து ஒரே கவலையாக இருந்தது. ஆனால், அவள் தன் குழந்தைகளை எப்போதும் அடிக்கவே மாட்டாள். அன்பினாலேயே திருத்தப் பார்ப்பாள். இப்போதும் அவனுடைய இந்தத் தவறான வழக்கத்தை எப்படிச் சரி செய்வது என்ற யோசனை அவளுக்கு.

இரவு சமையலை முடித்ததும், கணவரையும் குழந்தைகளையும் அழைத்து உணவு கொடுத்தாள் பாலுவின் அன்னை. அனைவரும் சாப்பிட்ட பிறகு எல்லாவற்றையும் மூடி வைத்துவிட்டு, படுக்கச் சென்றாள்.

"அம்மா இன்னும் சாப்பிடவில்லையே?" என்று பார்த்துக் கொண்டேயிருந்த பாலு, "அம்மா, நீங்கள் சாப்பிடவில்லையே இன்னும்?" என்றான்.

"இல்லை பாலு. இனிமேல் இரவு உணவை நான் நிறுத்திவிடப் போகி

றேன். நீ என்று ஒழுங்காகக் காலையில் சீக்கிரம் எழுந்திருக்கிறாயோ, அன்றிலிருந்துதான் நான் இரவில் சாப்பிடுவேன்,'' — என்று கூறிவிட்டு விளக்கை அணைத்தாள் லட்சுமி.

''அம்மா! நாளையிலிருந்து சரியான நேரத்துக்கு எழுந்து விடுகிறேன். தயவு செய்து சாப்பிடுங்கள் அம்மா'' என்று மெல்ல வேண்டினான் பாலு. அம்மாவிடமிருந்து பதிலே இல்லை. வருத்தமாக இருந்தது பாலுவுக்கு.

பாலு நினைத்தான். ''ஒரு வேளை நான் தூங்கிய பிறகு சாப்பிடலாம் என அம்மா நினைக்கிறார்கள் போலும். நான் சீக்கிரம் எழுந்திருக்கணும்னு அப்படிச் சொல்றாங்க போலிருக்கு.'' அம்மாவின் மேலுள்ள பாசம் காரணமாகத்தூக்கம்வராமல்புரண்டு கொண்டே இருந்தான். திடீரென விளக்கு கண்ணைக் கூசவே மெல்லக் கண்ணைத் திறந்தான். அம்மாதான் விளக்கைப் போட்டாள்.

''நான் நினைத்தது சரிதான். இப்போது அம்மா சாப்பிட்டு விடுவார்கள்.'' மகிழ்ச்சி பாலுவுக்கு. பார்த்துக் கொண்டேயிருந்தான்.

அவன் அன்னை லட்சுமி ஒரு டம்ளரில் நீரை எடுத்துக் குடித்துக் கொண்டிருந்தாள்.

'லட்சுமி' பாலுவின் தந்தை அழைத்தார். ''இதோ பார். வீணாக் உடம்பைக் கெடுத்துக்கொள்ளாதே. அவன்தான் தூங்கிவிட்டானே. அவனுக்குத் தெரியாது. நீ இப்போது சாப்பிடு.''

''வேணாங்க. நான் சாப்பிட மாட்டேன். என்னை வற்புறுத்தாதீங்க. அவனுக்குத் தெரியாது என்பதற்காக நான் சாப்பிட மாட்டேன். அவன் இப்படி சோம்பேறித்தனமாக இருந்தால், வருங்காலத்தில் அவனுடைய முன்னேற்றம் பாதிக்கப்படுமே! இந்த வயதில் சுறுசுறுப்பு இல்லை என்றால், பின்னால் இதே வழக்கம் வரும். வாழ்க்கையிலே ரொம்பச் சிரமப்படுவான். அவன் நலனுக்குத்தானே செய்கிறேன். மேலும், அவனுக்கு என் மேல் பிரியம் அதிகம். இதற்கு நிச்சயம் பலன் இருக்கும்'' கூறிவிட்டுப் படுக்கப் போனாள் பாலுவின் அன்னை லட்சுமி.



பாலுவின் கண்களிலிருந்து நீர் அருவியாகக் கொட்டியது. ''அம்மாவுக்குத்தான் என் மேல் எவ்வளவு அன்பு!'' அழுது கொண்டே உறங்கிப் போனான் பாலு.

காலையில் அலாரம் சப்தம் கேட்டு எழுந்தலட்சுமிக்குஒரே வியப்பு. பாலுவும் கூடவே எழுந்தான்.

''அம்மா! என்னை மன்னித்து விடுங்கள். இனிமேல் தினமும் நான் சீக்கிரம் எழுந்து விடுவேன். நீங்கள் சாப்பிடாமல் இருக்காதீர்கள்'' மெல்ல விசும்பினான் பாலு.

அன்புடன் அவனை அணைத்துக் கொண்டாள் லட்சுமி. தன் மகனை எண்ணி அவளுக்கு மிகவும் பெருமிதம் ஏற்பட்டது. தன் முயற்சிக்கு உடனேயே கிடைத்த பலன் குறித்து மகிழ்ச்சியும் அடைந்தாள்.

பழமொழிப் புதிர்—விடை:

புதிர் — 5 : தும்பை விட்டு வாலைப் பிடிப்பதா?

புதிர் — 6 : சிறு துளி; பெரு வெள்ளம்.

பிஞ்சுமனக் கதையரங்கம்



பேராசை

கே. வித்யா (4634)

சுவாமிமலையில் கண்ணன் என்ற இளைஞன் வாழ்ந்து வந்தான். அவன் பெற்றோர்கள் இளமையிலேயே இறந்துவிட்டனர். அவன் ஒரு குரங்கை ஆசையாக வளர்த்து வந்து, அதை வைத்தே பிழைத்துக் கொண்டான். அவன் இரண்டாவது வரை படித்திருந்தான். தமிழில் ஓரளவு எழுதுவான்.

அவனுக்கு, தான் பெரிய பணக்காரன் ஆக வேண்டும் என்னும் ஆசை ஏற்பட்டது. அதனால் முருகனைக் குறித்துக் கடும் தவம் செய்தான். முருகன் அவன் முன் தோன்றி, "உனக்கு என்ன வரம் வேண்டும், கேள்" என்றார்.

"நான் தொட்டது எல்லாம் பொன் ஆக வேண்டும்" என்றான், கண்ணன்.

"நீ உழைத்துச் சம்பாதித்தால்தான் நலமாக வாழ்வாய்," என்று கூறினார்.

கண்ணன் விடாப்பிடியாக முன்பு சொன்னதையே சொல்லியதால், முருகன் அவனுக்குப் புத்தி புகட்ட எண்ணி அவனிடம், "கண்ணா, உன் விருப்பம் என்னவோ அதை ஒரு காகிதத்தில் எழுதி நாளை இதே இடத்திற்குக் கொண்டு வா!" என்று கூறி மறைந்து விட்டார்.

கண்ணனுக்கு இதை மற்றவர்களிடம் கூறவோ, தன் விருப்பத்தை மற்றவர்களைக் கொண்டு எழுதி வாங்கவோ விருப்பம் இல்லை. அதனால், தனக்குத் தெரிந்த தமிழில், 'நான் தொட்டதெல்லாம் பொன் 'ஆக வேண்டும்' என்பதற்குப் பதில், நான் தொட்டதெல்லாம் பெண் ஆக வேண்டும்' என்று எழுதி மறுநாள் முருகனிடம் தந்தான். முருகனும் "அப்படியே ஆகட்டும்" என்று கூறி மறைந்து விட்டார்.

கண்ணன் நேராகத் தன் வீட்டிற்கு வந்து செல்லமாக வளர்த்து வந்த தன் குரங்கைத் தொட்டான். தொட்டவுடன் குரங்கு முகத்தை உடைய ஒரு பெண் தோன்றினாள். கண்ணன் திடுக்கிட்டான். அந்தக் குரங்கு முகத்துப் பெண்ணை அழைத்துக் கொண்டு போய் மீண்டும் தவம் செய்தான். முருகன் அவன் முன் தோன்றி, "என்ன, வரம் பலித்ததா?" என்று மனத்திற்குள் சிரித்துக் கொண்டே கேட்டார்.

அதற்கு கண்ணன், "கடவுளே! இந்தப் பெண்ணைப் பார். நீ என்னை ஏமாற்றி விட்டாயே? நான் போய்க் குரங்கைத் தொட்டதும் அது பொன் ஆக மாறாமல் பெண்ணாக மாறி விட்டதே!" என்றான்.

கடவுள், "நீதானே நான் தொட்டதெல்லாம் பெண்ணாக வேண்டும் என்று எழுதினாய்," என்று கூறிக் கண்ணன் கொடுத்த காகிதத்தை அவனிடமே காட்டினார்.

கண்ணனும் அதை எழுத்துக் கூட்டிப் படித்துப் பார்த்தான். தான் செய்த தவறை உணர்ந்து, "இறைவா, என்னுடைய குரங்கை மீண்டும் குரங்

காகவே மாற்றிவிடு. எப்படியாவது பிழைத்துக் கொள்கிறேன்'' என்று கெஞ்சினான்.

முருகன், "கண்ணா, கொடுத்த வரத்தை மாற்ற இயலாது. அதற்கு ஒரு வழி இருக்கிறது. ஆனால், நீ உழைத்துச் சம்பாதித்தால்தான் நான் அதைச் சொல்வேன்'' என்றார்.

கண்ணனும், ''கடவுளே, நான் இனிமேல் உழைத்துச் சம்பாதித்துக் கொள்கிறேன்'' என்று உறுதி கூறினான்.

உடனே முருகன், ''நீ அந்தக் குரங்கு முகத்துப் பெண்ணை மணந்து கொள். இரண்டு வருடம் கழித்து அவள் மிக அழகிய ஒரு பெண்ணாக மாறி உன் கஷ்டத்தைப் போக்குவாள்!'' என்று கூறினார்.

முருகனும் தன் பேராசைக்குத் தகுந்த தண்டனை கிடைத்துவிட்டது என்று எண்ணி, அந்தப் பெண்ணை மணந்து கொண்டு ஊராரின் கேலிக்கு ஆளானான்.



அந்த ஆரம்பப் பள்ளியில் டாண்.. டாண்... டாண் என்று மணி அடிக்க, அதுவரை வெட்டவெளியில் துள்ளிக்குதிக்கும் ஆட்டுக்குட்டிகளைப் போல் துள்ளி விளையாடிய மாணவர்கள், கடவுள் வாழ்த்துப்பாடி முடித்து விட்டுத் தங்கள் வகுப்புக்குச் சென்று அமர்ந்தனர். ஆனந்தனும் தன் வகுப்பிற்குச் சென்று அமர்ந்தான்.

ஆசிரியர் வந்தார்.. மாணவர்கள் எழுந்து நின்று மரியாதை செலுத்தினார்கள். மரியாதையை ஏற்றுக் கொண்ட ஆசிரியர், ''மாணவர்களே, இன்று சுதந்திரம் என்ற தலைப்பில் ஒரு பாடம் நடத்தப் போகிறேன். இந்த நன்றாகக் கூர்ந்து கவனித்துப் புரிந்து நடந்து கொள்ளுங்கள்'' என்று தம் உரையை ஆரம்பித்தார்.

''மிருகங்களையோ, பறவைகளையோ நாம் சிறைப்படுத்தக்கூடாது. அவைகள் எங்கு, எப்படி, எந்தச் சூழ்நிலையில் வாழவேண்டும் என்று அவைகளுக்குப் போதிய அறிவைக் கொடுத்து வாழ வைத்து இருக்கிறான் இறைவன். நாம் அவைகளைப் பிடித்து, அதற்கு மாறுபட்ட சூழ்நிலையில் வளர்க்கிறோம். அல்லது சாப்பிடுகிறோம். என்னதான் அதற்குப் போதிய வசதிகளையும், உணவுகளையும் கொடுத்து வளர்த்தாலும், அது இறைவன் அதற்கு அளித்த, அதற்குப் பிடித்த சூழ்நிலையில் சுதந்திரமாக வாழவே விரும்புகிறது. அப்படிப்பட்ட மிருகங்களையும் பறவைகளையும் சிறைப்படுத்தி வைத்து இருப்பதும் சிறைப்படுத்தி வைப்பதற்கு உதவுவதும் மிகப் பெரிய பாவச் செயல் ஆகும். பாரதியாரே பாடியிருக்கிறார், உயிர்களிடத்தில் அன்பு வேணும்'னு. நாம் உயிர்களிடத்தில் அன்பைச் செலுத்தாவிட்டாலும், அவைகளை அடிமைப்படுத்துவதோ, துன்புறுத்துவதோ கூடாது. பலர் கிளிகளையும், புறாக்களையும், லவ் பேர்ட்ஸ்களையும், இன்னும் பல பறவைகளையும் வீட்டில் அழகுக்காகவும், தங்கள் குழந்தைகளை மகிழ்விப்பதற்காகவும் கூண்டில் சிறைப்படுத்தி வைத்து இருப்பார்கள். அது மிகமிகப் பெரிய பாவச் செயல் ஆகும். அந்த வாயில்லா ஜீவன்களை வதை பண்ணுகிறோம்.'' என்று கூறினார்.

பள்ளியிலிருந்து திரும்பியதும் ஆனந்து, தன் குடிசை வீட்டிற்குள் நுழைந்து, தன் புத்தகப் பையை டமார் என்று சத்தமாக வேண்டும் என்றே வைத்துவிட்டு, சுவரோர

மாகப் போய் அமர்ந்து, கன்னத் தில் கைவைத் தபடி அமர்ந்திருந்தான். ஆனந்தின் வருகையை உணர்ந்து பக்கத் துக் குடிசையில் இருந்து தன் வீட்டிற்குள் நுழைந்த மீனாட்சியம்மாள் மகன் கன்னத் தில் கைவைத் து அமர்ந்து இருப்பதைப் பார்த் ததும் பயந்து விட்டாள். உடனே, ''டேய் அனந்து, என்னாச்சு உனக்கு? வாத் தியார் அடிச்சாரா? பையனுக யாராவது அடிச்சானுகளா? இல்லே, உடம்புக்குச் சரியில்லேயா?'' என்று அடுக்கடுக் காய்க்கேள்விகள்கேட்டுக்கொண்டே போனாள்.

எதற்கும் பதில் சொல்லாமல் அமர்ந்து இருந்த ஆனந்தைப் பார்த் து மீனாட்சி மனத் துக்குள், 'ஒரு வேளை பசியோ என்னவோ! பசியாகத் தான் இருக்கும்' என்று தனக்குத் தானே முடிவு செய்து கொண்டு சாதத் தைத் தட்டில் போட்டுப் பிசைந்து ஆனந்திடம் கொண்டு வந்தாள்.

அப்போது அவன் அப்பா பரமசிவம், வரும் சப்தம் கேட்டது.

ஆனந்து தினம் தினம் தேங்காய் பன்னுக்காகவே வாசலில் நின்று கொண்டிருப்பான். 'அப்பா வந்துவிட்டாரா...?' என்று அடிக்கடி எட்டிப் பார்க்கும் ஆனந்து... முழு தேங்காய் பன்னை ஒரே வாயில் போட்டு விழுங்கி விடும் ஆனந்து... ஏன் இன்று 'ஆனந்து உனக்குத் தேங்காய் பன் வாங்கி வந்திருக்கிறேன்' என்று அப்பா சொன்ன போது திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

பரமசிவம் ஆனந்தின் அருகில் சென்று, அவனது தோளைப் பிடித் து உலுக்கினார். உடனே ஆனந்த், ''அப்பா! இந்தத் தேங்காய் பன் வாங்கக் காசு ஏது?'' என்று கேட்டான்.

'இது ஏதுடா புதுசா இருக்கு?' என்றபடி பதில் சொன்னார். ''கிளி வித் த காசுலேதான் வாங்கினேன்.''

''இந்தக் கிளி ஏது உங்களுக்கு?''

''கிராமத் தில் பிடித் து வந்தேன்.''


''அப்படீன்னா, கிளி வித் த காசுலே எதுவாங்கிவந்தாலும், சமைச்சாலும், இனிமேல் நான் சாப்பிட மாட்டேன்'' என்று முடிவாகக் கூறிய ஆனந்துவை மீனாட்சியும் பரமசிவமும் ஆச்சரியத் தோடு பார்த் தார்கள். ஆனந்த், அப்பா பிடித்துக் கூண்டிலே அடைத் துக் கொண்டு வந்த கிளிகளையே பரிதாபத் தோடு பார்த் துக் கொண்டிருந்தான்.

''என்ன காரணம்? இத் தனை நாளாகச் சாப்பிடலியா? இன்னைக்கு மட்டும் ஏன் சாப்பிட மாட்டேனென்கிறாய்?'' என்று மகனைப் பார்த் துக் கேட்டார் பரமசிவம். இந்தக் கேள்வியை எதிர்பார்த் துக் கொண்டு இருந்த ஆனந்து, தன் பள்ளி ஆசிரியர் கூறிய பாடத் தை அப்படியே தன் அப்பாவிடம் ஒப்பித் தான்.

ஆனந்து ஆசிரியர் கூறியதைக் கூறிவிட்டு, மேலும் ''அப்பா,. ஆசிரியர் பறவைகளை அடிமைப்படுத் துவதோ அல்லது அடிமைப்படுத் துபவர்களுக்கு உதவுவதோ பாவச் செயல்னு சொல்லியிருக்கார். அதாவது, நீங்க பறவைகளைப் பிடித் துக் கூண்டுக்குள் அடைத் து, அடிமைப்படுத் தியேவிற்கிறீங்க. பாவத் தை விலை கொடுத் து வாங்கறீங்க... ஏம்பா, இந்தத் தொழிலை விட்டால் வேறே தொழிலே இல்லேயா? தயவு செய்து இந்தக் கிளித் தொழிலை விட்டுவிடுங்கப்பா. இந்தக் கிளிகளையும் விடுதலை செய்யுங்கப்பா...'' என்று மனம் உருகிக் கூறினான்.

மேலும், ''நீங்களே பாருங்கப்பா, அந்தக் கிளிகளை. எப்படிக் கூண்டை

எப்போது கிரகப்பிரவேசம்?



அம்மா! நாமகட்டின இந்தப் புது வீட்டுக்குக் கிரகப்பிரவேசம் எப்பம்மா...?

— குமார்.

விட்டு வெளியே வரத் துடிக்குது? மனிதர்களை ஜெயிலில் போட்டால், எப்படி வெளிவரத் துடிக்கிறார்கள்? அது போலத்தானே இந்தப் பறவைகளுக்கும் இருக்கும்? இந்தக் கிளிகளைக் காணாமல் அதுகளுடைய அப்பாவோ, அம்மாவோ, இல்லை குஞ்சுகளோ எப்படித் துடிக்கும்! துயரத்தோடே இருக்கும்! உதாரணத்திற்கு நானே காணாமல் போயிட்டா, எப்படித் துடிப்பீங்க? பள்ளியை விட்டுப் பத்து நிமிஷம் தாமதமா வந்தாலே 'என்னாச்சோ, ஏதாச்சோ'ன்னு நினைத்துக் கலவரப்பட்டுப் போகிறீங்களே! அது போலத்தானே அந்த வாயில்லா ஜீவன்களுக்கும் இருக்கும். நீங்களே யோசிச்சுப் பாருங்க'' என்றான் ஆனந்த்.

பரமசிவம் சிறிது நேரம் யோசித்தார். ''ஆனந்த், நீ சொன்னது நூத்துக்கு நூறு சரி. இனிமேல், கிளி பிடித்துக் காசுக்கு விற்கும் தொழிலைச் செய்ய மாட்டேன். வேறே ஒரு கண்ணியமான நல்ல தொழிலைச் செய்யப் போகிறேன். இந்தப் பாவத் தொழிலை இப்பொழுதே விட்டொழிக்கிறேன். உன் விருப்பம் போல் ஒரு பாவமும் அறியாத, இந்தக் கூண்டுக்குள்ளே இருக்கிற ஏழு கிளிகளையும் சுதந்திரமாக உன் கையாலே பறக்க விடு'' என்று தன் மகனிடம் கூறினார் பரமசிவம்.

தனக்கு அறிவுரை கூறிய ஆசிரியரை நன்றி கலந்த நெஞ்சுடன் நினைத்துக் கொண்டு கிளிக் கூண்டை எடுத்து, ஏழு கிளிகளுக்கும் விடுதலை அளித்தான்.

விடுதலையான மகிழ்ச்சியில் ஆனந்தமாக, வானத்தில் உல்லாசமாகப் பறந்தன, அந்தக் கிளிகள்!



டீசல் என்ஜினுக்குரிய 'பேம்' என்ற சத்தத்துடன் மதுரையிலிருந்து சென்னை செல்லும் வைகை எக்ஸ்பிரஸ் கிளம்பிற்று. அதில் உட்கார்ந்திருந்த எனக்கு மகிழ்ச்சியிலும் மகிழ்ச்சி. ஜன்னல் ஓரத்து சீட் வேறு. அந்த ஜன்னல் என்னும் டீ.வி.யில் பல இயற்கைக் காட்சிகள், ஆறுகள், பச்சைப் பசேல் வயல்கள்!

வண்டியின் வேகம் அதிகரித்தது. காலைக் குளிரில் உதயமாகும் சூரியனைப் பார்த்துக் கொண்டிருந்த என் கண்கள், 'தம்பி' என்ற குரலால் திசை மாறியது. திரும்பிப் பார்த்தேன். எனக்கு முன்பே வண்டியில் ஏறியிருந்த 60 வயது மதிக்கத்தக்க ஒரு பெரியவர். அந்தத் தள்ளாத வயதிலும் பேண்ட் போட்டுக் கொண்டு ஜம்மென்று அமர்ந்திருந்தார். அப்பெரியவர் என்னைக் கூப்பிட்டு, ''தம்பி! அந்த சுவிட்சைப் போடு'' என்றார். எனக்கு ஒரே கோபம். ''ஏன் அவர் எழுந்து போடக் கூடாதா?'' என்று நினைத்தேன். ஆனாலும் அதை வெளிக்காட்டாமல், எழுந்து சுவிட்சைப் போட்டுவிட்டு உட்கார்ந்தேன்.

திருச்சி ஜங்ஷன் வந்தது. அக்கிழவர் என்னைக் கூப்பிட்டு, ''இந்தாப்பா! எனக்கு ரெண்டு தோசை வாங்கி வா!'' என்று இரண்டு ரூபாய் நோட்டை நீட்டினார். நான் அதை வாங்காமல், ''தாத்தா! இங்கேயே தோசை, வடை எல்லாம் கொண்டு வருகிறார்களே! அதையே நீங்கள் வாங்கிக்கொள்ளலாமே!'' என்றேன்.

அதற்கு அவர், ''கண்ணா! இங்கு அதிக விலையில் விற்கிறார்கள். ஆனால், பிளாட்பாரத்தில் குறைவான விலையில் கொடுப்பார்கள் என்று மீண்டும் ரூபாய் நோட்டை நீட்டினார். நான் அதை வெடுக்கென்று வாங்கிப் போய் அவர் கேட்ட தோசையை வாங்கிக் கொடுத்தேன். அதை அவர் நன்றாகச்

சுவைத்துச் சாப்பிட்டார்., பிறகு, "தம்பி, ஒரு கப் காப்பி வாங்கித் தருவியா? இந்தா, இந்த டம்ளரை எடுத்துப் போ. இதோ காசு" என்றார். வேறு வழியில்லாமல், அவர் சொன்னபடி செய்தேன்.

'இந்தக் கிழவர் எப்போது வண்டியை விட்டு இறங்குவார். எப்போது நிம்மதியாகப் பயணம் செய்வோம்' என்ற நினைப்போடு, "தாத்தா! நீங்க எந்த ஊரு?" என்று கேட்டேன்.

"விழுப்புரம்"என்று பதிலளித்தார். 'ஆகா, இன்னும் சிறிதுநேரத்தில் ஊர் வந்துவிடும்' என்று எண்ணிக் கொண்டேன். ஆனால், மனிதர் இருக்கையை விட்டு நகராமல் எல்லா வேலைக்கும் என்னையே பயன்படுத்திக் கொண்டார்,.

வைகை எக்ஸ்பிரஸ் விழுப்புரத்தை நெருங்கியது. அப்போது அவர், "கண்ணு! மேலேயிருக்கும் சூட்கேஸை எடுத்துக் குடுப்பா!" என்றார். நான் சூட்கேஸை எடுத்து அவரிடம் கொடுக்கத் திரும்பிய போது, அவர் இருக்கையின் அடியிலிருந்து எடுத்த பொருளைப் பார்த்த எனக்கு ஒரே அதிர்ச்சி!

ஆம், அது ஊனமுற்றோர் பயன்படுத்தும் இரு ஊன்றுகோல்கள்! இப்போது புரிந்தது அவர் ஏன் என்னை வேலை வாங்கினார் என்பதும், ஏன் பேண்ட் போட்டிருந்தார் என்பதும். என் கண்களில் வந்த கண்ணீரை அடக்கிக் கொண்டு, "ஏன் தாத்தா, துணைக்கு யாரையும் கூட்டி வரலையா?" என்று கேட்டேன். அதற்கு அப்பெரியவர், "தம்பி, எனக்கு யாரும் துணையில்லையப்பா. உன்னைப் போல நல்ல மனசுக்காரங்க தேவையான போது துணை செய்வாங்க. ஆனால், எனக்கு எப்போதும் துணையாயிருப்பது இந்த ஊன்றுகோல்கள்தானப்பா" என்று இரு ஊன்றுகோல்களையும் காட்டினார். தொடர்ந்து, "தம்பி, இந்தா, நீ செய்த உதவிக்கு இந்தச் சின்னப் பரிசு" என்று கூறிப் பையிலிருந்து ஒரு விஞ்ஞானக் கதைப் புத்தகத்தை எடுத்துக் கொடுத்தார். பிறகு, "நான் வரேம்பா. நீ தீர்க்காயுசா இரு" என்று சொல்லிவிட்டு இறங்கப் போனார். நான் அவருக்கு உதவியாக இருந்து இறக்கிவிட்டேன்.

அவர் வண்டியை விட்டு அன்றே இறங்கிவிட்டார். ஆனால், அவரின் நினைவுகள் என் மனத்தை விட்டு இன்று வரை இறங்க மறுக்கின்றன!

தமிழ் தந்த பரிசு!



ஆண்டுதோறும் எஸ்.எஸ்.எல்.சி. அரசுத் தேர்வு தமிழ்ப் பாடத்தில் அதிக மதிப்பெண் பெறுபவர்க்கு ரொக்கப் பரிசு தருவதற்குத் தஞ்சை மாவட்டம் திருப்பனந்தாள் ஆதீனம் அறக்கட்டளை நிறுவியுள்ளது.

கடந்த ஆண்டு 93% பெற்ற மாணவி செல்வி ஜி. பரணி கோமதிக்கு முதன் முறையாக இப்பரிசு கிடைத்துள்ளது. அருள்மிகு காசிவாசி தில்லை நாயக சுவாமிகள் நினைவு தமிழ் ரொக்கப் பரிசு என வழங்கும் இப்பரிசுக்குரிய ரொக்கம் ரூ 2192ம் 20 காசும் சென்னை அடையாறு காந்தி நகர் இராணி மெய்யம்மை பெண்கள் பள்ளிமுன்னாள் மாணவி ஜி.பரணி கோமதிக்குக் கிடைத்துள்ளது.

பரிசு பெற்ற மாணவி ஜி. பரணி கோமதி சென்னை தி. நகர் பனகல் பூங்கா சாரதா மேல்நிலைப் பள்ளியில் 'ப்ளஸ் டூ' வகுப்பில் தற்போது படித்து வருகிறார்.


இத்தகைய பரிசு இனிமேல் ஆண்டுக்கு ஒருவருக்குக் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

பின்கோட் முறை

—ஜானகி மணாளன்

குழந்தைகளே! உங்கள் வீட்டுக்குத் தபால்காரர் கடிதம் கொண்டு வந்து தருகிறார் அல்லவா?

அதில் உங்கள் வீட்டு விலாசம் எழுதப்பட்டிருக்கும். அதன் கடைசி வரியில் ஊரின் பெயர் இருக்கும். அதற்கு அடியில் PIN என்று எழுதப்பட்டு, அருகில் ஆறு இலக்கங்களில் ஓர் எண் எழுதப்பட்டிருக்கும்.



அதற்கு என்ன பெயர் தெரியுமா? அதுதான் 'பின்கோட்' — PIN-CODE' எண்.

நமது பாரத நாடு பரப்பளவில் மிகவும் பெரியது. மக்கள் தொகை ஏராளம். தினசரி கோடிக்கணக்கான தபால்கள், ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு அனுப்பப்படுகின்றன. ஒவ்வொரு கடிதமும் எந்த ஊருக்குப் போய்ச் சேர வேண்டும், அது எந்தப் பிரதேசம் அல்லது மாநிலத்தில் உள்ளது என்பதைப் படித்துப் பிரித்து அனுப்புவது மிகக் கடினமான பணி. இல்லையா? நேரமும் அதிகம் ஆகும். விரைவாகப் பட்டுவாடா செய்ய முடியாது. எனவேதான், இந்த 'பின்கோட்' முறை கையாளப்படுகிறது. தபால்களைப் பிரிப்பவர்கள், 'பின் கோட்' எண்ணை மட்டும் பார்த்து, அவற்றை உரிய ஊர்களுக்கு அனுப்பி விடுவார்கள்.

இதனால், நேரம் மிகவும் மிச்சமாகும். அதுமட்டுமல்ல, விலாசம்

எந்த மொழியில் இருந்தாலும் சரி... அல்லது கையெழுத்து தெளிவின்றி இருந்தாலும் கூட, கடிதம் உரிய தபால் பட்டுவாடா நிலையத்துக்குப் போய்விடும். அங்கு அவர்கள், அவசரப் படாமல் படித்தறிந்து உரிய வீட்டில் சேர்ப்பித்து விடுவார்கள். நம் நாட்டில் இம்முறை 1972 இல் அறிமுகப்படுத்தப்பட்டது.

'பின்கோட்' எழுதப்பட்டிருக்கும் தபால்கள், போய்ச் சேர வேண்டிய சரியான ஊரில், விரைவாகப் பட்டுவாடா செய்யப்படுகின்றன.

'பின் கோட்' என்பது ஆறு இலக்கங்கள் கொண்ட 'எண். படிக்கும் போது மற்ற 'எண்களைப் போன்று படிக்கக் கூடாது. அதாவது 600 002 என்று வைத்துக் கொண்டால், ஆறு லட்சத்து இரண்டு என்று சொல்லக் கூடாது. ஆறு — பூஜ்யம் — பூஜ்யம் — பூஜ்யம் — பூஜ்யம் — இரண்டு என்று சொல்ல வேண்டும். எழுதும் போதும் ஒரு முறையைப் பின்பற்ற வேண்டும். முதல் மூன்று 'எண்களுக்கும் கடைசி மூன்று 'எண்களுக்கும் இடையில் கொஞ்சம் இடைவெளி விட வேண்டும். அதாவது 600 002 என்று.

நாட்டில் உள்ள ஒவ்வொரு தபால் பட்டுவாடா அஞ்சல் நிலையத்துக்கும் தனித்தனி 'பின்கோட்' கொடுக்கப்பட்டுள்ளது. அது நிரந்தரமானது. அதில் இருக்கும் ஒவ்வொரு 'எண்ணும் ஒவ்வொரு இடத்தைக் குறிக்கும். எப்படித் தெரியுமா?

நம் நாடு பல தபால் பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதை முதல் எண் குறிக்கும். உனக்குத் தெரிந்திருக்குமே! டில்லியின் பின்கோட் எண் 1 ல் தொடங்கும். சென்னை — 6 ல் தொடங்கும்.

அடுத்ததாக, ஒவ்வொரு தபால் பிரதேசமும் சில துணைப் பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதை இரண்டாவது எண் குறிக்கும்.

ஒவ்வொரு துணை பிராந்தியமும் பல தபால் மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதை மூன்றாவது எண் குறிக்கிறது.

கடைசி மூன்று 'எண்களும் தபால்களைப் பிரித்துப் பட்டுவாடா செய்யும் அஞ்சல் நிலையங்களைக் குறிக்கின்றன.

குழந்தைகளே! இப்போது 'பின் கோட்' முறை பற்றிப் புரிந்து கொண்டிருப்பீர்கள்.


சரி! உங்கள் ஊரின் பின் கோட் எண் உங்களுக்குத் தெரிந்திருக்கும். நாம் கடிதம் எழுத வேண்டிய ஊரின் எண்ணை எவ்வாறு அறிவது? முன் கூட்டியே விசாரித்துக் குறித்து வைத்துக் கொள்ளலாம். அல்லது பெரிய தபால் அலுவலகங்களில் அச்சிட்ட 'பின்கோட்' பட்டியல் புத்தகமாக விற்பார்கள்; வாங்கி வைத்துக் கொள்ளலாம்.

அத்துடன், நீங்கள் எழுதும் எந்த ஒரு கடிதத்திலும் 'அனுப்புதல்' விலாசத்தை எழுதுங்கள். அதில் உங்களுடைய ஊரின் 'பின்கோட்' எண்ணை மறக்காமல் எழுதுங்கள். அது, அவர்கள் எழுதும் பதில் கடிதம் விரைவாக உங்களுக்குக் கிடைக்க உதவும்.

என்ன செய்கிறீர்களா?



மரங்களைத் தூக்கும் பலூன்!



பசிபிக்வடமேற்குமலைகளில்வெட்டப் பட்ட மரங்களைக் கப்பல்களில் ஏற்றுவதற்குக் காற்றடைத்த இராட்சச பலூன்கள் பயன்படுத்தப்படுகின்றன. பலூன்களால் இப்படி ஒரு பயன்!

— சீதா பஞ்சு.



இரு மொழிகளில் பழமொழிகள்

PARALLEL PROVERBS

அக்கம் பக்கம் பார்த்துப் பேசு.
Walls have ears.

வெறுங்கை முழம் போடுமா?
Bare words buy no barley.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
All that glitters is not gold.

பேராசை பெருநஷ்டம்.
Covet all, lose all.

தான் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும்.
Man proposes, God disposes.

கழுதை அறியுமா கற்பூர வாசனை?
Casting pearls before swine.

எலி வளையானாலும் தனி வளை வேண்டும்.
East or west. Home is best.

ஊரோடு ஒத்து வாழ்.
Do in Rome as Romans do.

யானைக்கும் பானைக்கும் சரி.
Tit for Tat.

ஆழமறியாமல் காலை விடாதே.
Look before you leap.

அரசன் எவ்வழி; குடிகள் அவ்வழி!
As is the king so are the subjects.

அரசன் அன்று கொல்வான்; தெய்வம் நின்று கொல்லும்!
The mills of God grind slow but sure.

பார்த்தால் பூனை; பாய்ந்தால் புலி.
Lamb at home and a lion at the chase.

மன்னுயிரைத் தன்னுயிர் போல் நினை.
Do unto others as you would wish to be done by others.

அமாவாசைச் சோறு சும்மா சும்மா கிடைக்குமா?
Christmas comes but once a year.

அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகும்.
Too much of anything is good for nothing.

எரிகிற கொள்ளியில் எண்ணெய் ஊற்றினாற் போல்.
Add fuel to the fire (flames).

எருமை வாங்கும் முன் நெய் விலை பேசாதே; பிள்ளை பெறும் முன் பெயர் வைக்காதே.
Count not your chickens before they are hatched.

தானம் கொடுத்த மாட்டைப் பல்லைப் பிடித்துப் பார்க்காதே.
Do not look a gift horse in the mouth.

பழகப் பழகப் பாலும் புளிக்கும்; கிட்ட இருந்தால் முட்டப் பகை.
Familiarity breads contempt.

மாரியல்லது; காரியமில்லை.
No rains, no grains.

முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப் படலாமா?
First deserve, then desire.

வெள்ளம் வருமுன்னே அணை போட வேண்டும்.
Prevention is better than cure.


வேலியே பயிரை மேய்ந்தால், விளைவு தெப்படி?
The law-makers should not be law breakers.

தொகுத்தவர்: **A. R.** அப்துல் லத்திப்

கர்வத்தின் விளைவு

படக்கதை – S.K.ராமானுஜம் (ராஜு)




பொல்லாத சிங்கம் கால் நடையாகவே நகரம் வந்து சேர்ந்தது.
சிங்கத்தைக்கண்ட நகர மக்கள் பயந்து ஓடினர்....
ஐய்யோ! சிங்கம்!
சிங்கம் வருவதைப் பார்த்த ஒருவன், தன் வீட்டைப் பூட்டாமல் பயந்து ஓடிவிட்டான்
நரி சொன்னது போல் நகர மக்களையும் இனி அடக்கி ஆளப் போகிறேன்.
இனி காட்டிற்கும், இந்நாட்டிற்கும் நான் தான் ராஜா!
டுமீல்
டுமீல்
ஐய்யோ! என்ன... வெடிச்சப்தம்?
நகரப்போலீஸ் படை சிங்கத்தை, துப்பாக்கியால் சுடப் பார்த்தது.
நடுங்கிய, சிங்கம் பூட்டாத வீட்டில் ஓடி, ஒளிந்தது.
சிங்கம் நுழைந்த வீட்டை ஒருவன் தாழிட்டு விட்டான்.
போலீசார், சிங்கத்தை மிகவும் ஜாக்கிரதையாக உயிருடன் பிடித்து, மிருகக் காட்சிசாலைக்கு அனுப்பினர்
மிருகக்காட்சி சாலை வண்டி
கர்வத்தின் விளைவு என்ன என்பதை இப்பொழுது தான் அறிந்தேன்

அணுகுண்டுப் போர்



லூர்து எஸ். ராஜ்

அன்று ஞாயிற்றுக்கிழமை. பள்ளி விடுமுறை நாள். அண்ணன் சங்கரும் தம்பி விஜயனும் கடற்கரைக்குச் செல்வதென முடிவு செய்திருந்தனர்.

ஆனால், மத்தியானம் 11 மணிக்கே மழை பிடித்துக் கொண்டது. கோடை மழை! வானத்தில் வாண வேடிக்கைகள் நடந்து கொண்டிருந்தன.

மாலை 3 மணி., மழை குறைந்து விட்டது. ஆனாலும் பன்னீர் தெளிப்பு நிற்கவில்லை. சில சிறுவர்கள் தெருவில் ஓடும் நீரைப் பார்த்துக் கொண்டு நின்றனர்.

சில நிமிடங்களில் மழைத் தூறலும் நின்று விட்டது. சங்கரும் விஜயனும் வெளியே வந்தனர். தண்ணீரின் ஓட்டமும் தெருவில் நின்றுவிட்டது.

''விஜயா, அணுகுண்டு செய்யலாம், வர்றியாடா?'' என்றான், சங்கர். அவனும் தலையை ஆட்டிக் கொண்டு சங்கரைத் தொடர்ந்து தெருவில் இறங்கி நடந்தான்.

இருவரும் இரண்டு கைகளிலும் களி மண்ணை அள்ளிக் கொண்டு வந்தனர்; வீட்டின் பின்புறம் அவற்றைக் குவித்தனர்.

சங்கர் சிறிதளவு களிமண்ணை எடுத்து இரு உள்ளங்கைகளுக்கிடையே வைத்து உருட்டினான். அது அழகிய உருண்டைக் கோலி போலாகியது.

விஜயனும் அவ்வாறே செய்ய முயன்றான்; ஆனால், அவனது அணுகுண்டு அம்மிக் குழவிபோல் நீண்டதே ஒழிய உருண்டை வடிவம் பெறவில்லை..

இப்போது சங்கர், விஜயனுக்கு விளக்கமாகச் செய்து காட்டினான். கைகளில் வைத்து எவ்வாறு தேய்த்து உருட்ட வேண்டும் என்று கற்றுக் கொடுத்தான். விரைவில் விஜயன் நன்கு கற்றுக் கொண்டு விட்டான்.

இருவரும் விரைவாக உருட்டத் தொடங்கினர். அணுகுண்டுகளைச் செய்து குவித்தனர்.

''ஆஹா! என்னுடைய அணுகுண்டுகளைப் பார்; அவைகள்தான் மிகவும் அழகாக இருக்கின்றன'' என்றான் விஜயன், சங்கரைப் பார்த்து.

''என்னடா நெனச்சுக்கிட்டே,

உனக்கு அணுகுண்டு செய்யக் கத்துக் கொடுத்ததே நான்தான்; என் குண்டை விட உன் குண்டு அழகாய் இருக்குமோ? நீ எங்கிட்டேயே வாலாட்டுறியா?'' என்றான் சங்கர்.

தன் குண்டுகள் அழகாய் இருக்கின்றன என்பதை அண்ணன் சங்கர் ஒத்துக் கொள்ளவில்லையே என்ற கோபம் விஜயனுக்கு. அவன் எழுந்தான். சங்கரின் குண்டுகளைக் காலால் மிதித்து விட்டு ஓடினான். பதிலுக்கு சங்கர் சில குண்டுகளை எடுத்து விஜயன் மீது வீசி எறிந்தான். அவைகள் குறி தவறிச் சமையல் கூடத்தின் சுவரில் ஒட்டிக் கொண்டன. விஜயன் தன் கையிலிருந்த குண்டை, சங்கர் மேல் எறிந்தான். ஆனால் சங்கர் நகர்ந்து கொண்டான். விரைந்து வந்த குண்டு, மாமா மாணிக்கத்தின் நெற்றியைப் பதம் பார்த்ததோடு அதில் நன்றாக ஒட்டியும் கொண்டது.

இதைப் பார்த்த அச்சிறுவர்களின் அம்மா ஓடி வந்தாள். அவர்களின் முதுகில் ஓங்கி 'பளார்' 'பளார்' என அறைந்தாள்.

''அக்கா, நிறுத்து! அவர்களை என்னிடம் விடு, நான் இப்பிரச்சினையைக் கவனிக்கிறேன்'' என்றார் மாமா. எனவே அம்மா அவர்களை விட்டு விட்டுத் தனது வேலையைக் கவனிக்கச் சென்றுவிட்டாள்.

மாமா, தன் நெற்றியில் ஒட்டிக் கொண்டிருந்த உருண்டையை வழித்தெறிந்து விட்டு முகத்தைக் கழுவினார்.

''சமையலறைச் சுவரில் இவ்வுருண்டைகளை வீசியது தவறு; முதலில் அவைகளை எடுத்துவிட்டு அச்சுவரைச் சுத்தமாக்குங்கள்'' என்றார் மாமா சங்கரும் விஜயனும் அவ்வாறே செய்தனர்.

பின்னர், அவர்களை அணுகுண்டு தயாரிக்கப்பட்ட இடத்துக்குக் கூட்டிச் சென்றார்.

சிறிதளவு களிமண்ணைக் கையிலெடுத்து மாமா ஒரு மாங்கனி செய்தார். எவ்வாறு மாம்பழம் செய்வது என அச்சிறுவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தார்.. பின்னர், அச்சிறுவர்களும் மண்ணால் மாம்பழம் செய்து பழகினர். சில நிமிடங்களில் நன்றாகக் கற்றுக் கொண்டனர்.

வாழைப்பழம், கத்தரிக்காய், முந்திரி, அன்னாசி, சீத்தா, மாதுளை போன்றவற்றைச் செய்யும் முறையையும் அவர் விளக்கிச் செய்து காட்டினார். சில நிமிடங்களில் அதையும் சிறுவர்கள் கற்றுக் கொண்டனர்.,

அம்மூவரும் செய்த காய் கனிகளை எல்லாம் மாடியிலே பத்திரமான இடத்தில் மாமா உலர வைத்தார். பிறகு அவர்களைக் கடற்கரைக்கு அழைத்துச் சென்றார். நல்ல பல புத்திமதிகளை நயம்பட எடுத்துரைத்தார்.

மறுநாள் மாமா வரும்போது சிறுவர்கள் வீட்டுப்பாடங்களைச் செய்வதில் கவனமாயிருந்தனர். அவ்வேலைகள் முடிந்ததும் மாடியில் உலர வைத்த காய் கனிகளை எடுத்து வரச் செய்தார். அவைகள் நன்றாய் உலர்ந்திருந்தன. அவைகளுக்குரிய வண்ணங்களைத் தீட்டினார். சிறுவர்கள் கவனமாய்ப் பார்த்துக் கொண்டனர். அவர்களும் வர்ணம் பூசக் கற்றுக் கொண்டனர். வர்ணம் பூசப்பெற்ற அக்காய்கனிகள் மிக அழகாய் இருந்தன. அவை இயற்கையா செயற்கையா என்பதைக் கண்டு கொள்ளவும் முடியவில்லை!

இப்போதெல்லாம் சங்கரும் விஜயனும் ஓய்வு நேரத்தை வீண் போக்குவதில்லை; காய்கனிகளைச் செய்து வண்ணம் தீட்டுவதிலேயே செலவிடுகின்றனர்.

அக்காய்கனிகளை வாங்கி விற்பனை செய்யும் பொம்மைக் கடையை ஒரு நாள் மாமா அச்சிறுவர்களுக்குக் காட்டினார். அச்சிறுவர்களும் வாராவாரம் ஏராளமான காய்கனிகளை அக்கடைக்குச் செய்து கொடுத்தனர். நாள்தோறும் பள்ளிக்கூடம் சென்று வரத் தேவையான பஸ் கட்டணமும் இன்னும் சில சிறிய செலவுகளுக்குரிய பணமும் அவர்களுக்குக் கிடைத்து வந்தது.

இப்போதெல்லாம் அவர்கள் அணுகுண்டு செய்வதுமில்லை; அணுகுண்டுப் போர் நடத்துவதுமில்லை. ஆக்க வேலைகளில் ஈடுபடுகின்றனர். சமாதானப் புறாக்கள் அவ்வீட்டில் வட்டமிடுகின்றன.

உறுப்பினர் வரைந்த ஓவியங்கள்



எம். எஸ். சுரேஷ் (7005)

R. கருமுத்து (3728)






மு. கீர்த்திவாசன் (16

S. செந்தில்குமார் (13,978)



R. காமாட்சி (2149)



சில்லு - முள்ளு



— அரசு மணிமேகலை

"எதுக்காக நீ அழறே?"

கரடி அந்தப் பையனைப் பார்த்துக் கேட்டது.

பையனோ அழுதுகொண்டே இருந்தான். கரடிக்குஎன்ன செய்வதென்றே தெரியவில்லை.

"இந்தா! பையா! உன் பெயர் என்ன? எதுக்காக நீ அழறே?"

கரடி திரும்பவும் கேட்டது. அந்தப் பையனுக்கு நான்கு வயது இருக்கும்.

பார்க்க, பொம்மையைப் போல ஜோராக இருந்தான். அழகான, களையான முகம். கன்னம் மாம்பழக் கதுப்புப் போல, பளபளப்பாக இருந்தது. அறிவுக்களை வீசும் அழகிய கண்கள்...

"அம்மா... அம்மா... எங்க அம்மா..." பையன் கண்களைக் கசக்கிக் கொண்டு அழ ஆரம்பித்தான்.

கரடிக்கு இப்போது புரிந்து விட்டது. எப்படியோ அம்மாவுக்கு டிமிக்கி கொடுத்துவிட்டு, விளையாட்டுப் போக்கில் ஓடி வந்து விட்டிருக்கிறான். இப்போது பயம் வந்துவிட்டது. அம்மா ஞாபகத்தில் அழத் தொடங்கி விட்டிருக்கிறான்...

"இதோ பாரு கண்ணு! உன் பேர் என்ன? சொல்லு ராஜா, பேரு..."

கரடி, அந்தப் பையனைக் கொஞ்சிற்று.

தன் பிள்ளைகள் முரண்டு பிடிக்கும் போதெல்லாம் கூட, அம்மா கரடியான அது இப்படித்தான் கொஞ்சும்.

குழந்தை மெல்லத் தலையை நிமிர்த்திப் பார்த்தான்.

"என் பேரு முத்து... பேரு நல்லா இருக்கா? எங்கம்மா என்னை 'முத்தூ'ன்னு கூப்பிடுவாங்க..."

"ஆங்! அப்படியா? அழகான பேரு கண்ணு! அம்மா 'முத்தூ'ன்னு உன்னைக் கூப்பிடுவாங்களா? ஓங்கம்மாவுக்கு உன் மேலே ரொம்ப ஆசையா?"

கரடி முத்துவைச் சமாதானப் படுத்துவதற்காக இப்படி எல்லாம் பேசவும் முத்துவின் அழுகை தானாகவே நின்று விட்டது.

"ஏன் முத்தூ... உங்கம்மா எங்கே இப்போ? நீ ஏன் காட்டுப் பக்கம் தனியா வந்தே?"

"கரடிம்மா! உன்னை நான் கரடிம்மான்னு கூப்பிடட்டுமா?"

கரடிக்கு மனசு நெகிழ்ந்து போயிற்று. என்ன இருந்தாலும் அதுவும் ஒரு தாயில்லையா?

"முத்தூ... நீ என்னைக் கரடிம்மான்னே கூப்பிடலாம். உங்கம்மா கிட்டே உன்னை நிச்சயமா நான் சேர்த்து வைப்பேன்."

"நிஜம்மாவா கரடிம்மா?"



அல்சர் நோய்க்குத் தவளை முட்டை!

அல்சர் நோய்க்குப் புதிய மருந்தொன்றை ஜெர்மன் டாக்டர்கள் கண்டு பிடித்துள்ளனர். அந்த மருந்து என்ன தெரியுமா? தவளை முட்டைதான்! ஆம், தவளை முட்டையை அல்சர் நோய்க்கு மருந்தாக இனி பயன்படுத்தலாம்.

— கீதா பஞ்சு.

"நிச்சயமா. ஆனா, இப்போ உடனே கிளம்ப முடியாது. ஏன் தெரியுமா? என்னை இப்படிப் பார்த்தா, உங்க நாட்டுப் பகுதியிலே யாராவது சுட்டுக் கொன்னுடுவாங்க... அப்புறம் என் குழந்தைங்க உன்னை மாதிரிதானே அலைவாங்க?"

"கரடிம்மா! அப்படின்னா எப்பம்மா என்னைக் கூட்டிக்கிட்டுப் போவீங்க?"

"இப்போ மத்தியான நேரம்! அதோ சூரியன் பாரு! தலைக்கு மேலே! சாயந்திரம் ஆகட்டும். அப்ப நாம கிளம்பினா, நாட்டுப் பக்கம் போறதுக்குள்ளே இலேசா இருட்டத் தொடங்கிடும். என்னை யாரும் கண்டுபிடிக்க மாட்டாங்க."

"அப்படியா? அப்படின்னா சரி.."

"முத்தா..."

"ம்! கரடிம்மா! நீங்க இப்படிக் கூப்பிடறது எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. எங்கம்மா இப்படித்தான் என்னைக் கூப்பிடுவாங்க..."

அதன் ஏக்கத்தைப் புரிந்து கொண்டது கரடி.

"சரிசரி... முத்தா! உங்க வீடு எங்கே?"

"எங்க வீட்டுப் பக்கத்துலே ஒரு தோட்டம்!"

"அப்படியா? தோட்டம் எங்கேப்பா இருக்குது?" கரடி ஆவலுடன் விசாரித்தது.

"எங்க வீட்டுப் பக்கத்திலேயே தான்" பெருமையாகச் சொல்லி விட்டு, வாயில் விரல் போட்டுக் கொண்டான்.

கரடிக்கு ஏமாற்றம்.

"ஐயோ! இந்தக் குழந்தைக்கு வீடு எங்கேன்னு தெரியலையே! எந்த ஊர், எந்தத் தெருன்னு தெரியாமே எப்படிக் கொண்டு போய் விடறது?"

வாய் விட்டே புலம்பியது கரடி.

"முத்தா! வா! இந்த வெயில்லே ரொம்ப நேரம் நின்னுக்கிட்டிருந்தா, தலை சுத்தி, மயக்கம் வந்து விழுந்துடுவே. எங்க வீட்டுக்குப் போகலாம் வா! கண்ணு!"

முத்து உடனே தன் 'கரடிம்மா'வின் கைவிரல்களைப் பிடித்துக் கொண்டு, நடக்க ஆரம்பித்தான்.

கரடியின் வீடு அருகில்தான் இருந்தது. அழகாக, சுத்தமாக வைத்திருந்தது.

"கரடிம்மா! இதுவா உங்க வீடு?"

முத்து ஆவலுடன் கேட்டு விட்டு.. அங்கும், இங்கும் எட்டிப் பார்த்தான்.

"என்ன பார்க்கிறே கண்ணு?"

கரடி கேட்டது.

"உங்க குழந்தைங்க எங்கே?"

"சில்லு... முள்ளு... வாங்க உள்ளே!"

கரடி வெளியே எட்டிப் பார்த்துக் கத்திற்று.

சில்லு, முள்ளு தேனடைகளை ருசி பார்த்துக் கொண்டிருந்தன, ஒரு புதரில் உட்கார்ந்தபடி.

அம்மா குரலைக் கேட்டதும் பறந்தோடி வந்தன.

"ஹை! யாரும்மா இது? பொம்மையா? ஜோரா இருக்கே...?"

குட்டி குட்டியாய்த் தன் உயரத்தை விடக் கொஞ்சம்தான் அதிகமான உயரத்தில் இருந்ததால், இரண்டு கரடிக் குட்டிகளையும் மிக மிகப் பிடித்து விட்டது முத்துவுக்கு.

தன் வீட்டிலிருக்கும் கரடிப் பொம்மையைப் போலவே 'குண்டாக, புஸு'புஸு'வென்று இருக்கின்ற இரண்டு குட்டிகளையும் முத்துவுக்கு மிகவும் பிடித்துவிட்டது.

"சில்லு..." சில்லு பக்கத்தில் போய்

நின்றான் முத்து.

''முள்ளு...'' ஓடிப் போய் முள்ளுவின் கையைப் பிடித்துக் கொண்டான்.

''கரடிம்மா! நீங்களும், சில்லு முள்ளுவும் எங்க வீட்டுலேயே இருந்துடறீங்களா?''

''எங்க அப்பா?'' சில்லு கேட்டது.

''ஓ! உங்க அப்பாவும்தான்...''

பேசிக் கொண்டிருக்கும் போதே அப்பாக் கரடி உள்ளே நுழைந்தது.

முத்து அதைப் பார்த்த மாத்திரத்தில் பயந்து விட்டான்.

அம்மா கரடியை விட, பிரம்மாண்டமான உருவத்தில் அது இருந்தது. முகத்தில் ஒரே சிடுசிடுப்பு. மிக மிகக் கண்டிப்பான அப்பா என்பது சில்லுவும், முள்ளுவும் ஆட்ட பாட்டங்களை அடக்கிக் கொண்டு ஒரு மூலையில் போய் உட்கார்ந்ததிலிருந்து தெரிந்தது.

''என்ன சத்தம்? எப்பப் பார்த்தாலும் மனுஷங்களை மாதிரியே வளவளன்னு பேசிக்கிட்டு இருக்கறீங்களே...''

அதட்டலுடன் உள்ளே நுழைந்த அப்பா கரடி, தன் மனைவியின் பக்கத்தில் நின்று கொண்டு மிரள மிரள விழிக்கிற குட்டிப் பையனைப் பார்த்து அதிசயித்துப் போனது.

''என்ன இது? மனுஷக் குட்டியா? வளர்க்க எடுத்துக்கிட்டு வந்திருக்கிறியா என்ன?'' மனைவியைப் பார்த்து அதட்டிற்று.

''இல்லீங்க! வழி தெரியாமே ஆல மரத்துக்குப் பக்கத்துலே நின்னு அழுதுக்கிட்டிருந்தது... அம்மாவை விட்டுப் பிரிஞ்சிட்டிருக்குது. அதுதான் நான் பார்த்துக் கூட்டிக்கிட்டு வந்தேன். சாயங்காலமா கொண்டு போய் விட்டுடறேன்.''

''ஒனக்கென்ன பைத்தியமா? மனுஷங்க இருக்கிற பக்கம் போறேன்னு சொல்றியே! உன்னைப் பார்த்தா அவங்க என்ன சும்மாவா இருப்பாங்க? துப்பாக்கி எடுத்துட்டு வந்து, 'டுமீல்' 'டுமீல்'னு சுட்டுட மாட்டாங்க? முதல்லே அந்தப் பையனை



வெளியிலே அனுப்பு... அவனுவே கண்டுபிடிச்சிப் போகட்டும்...''

கோபமாகச் சொல்லிற்று அப்பா கரடி.

''இது வெளியிலே போயி, சிங்கம், புலி, 'கண்ணிலேயோ, சிறுத்தை கண்ணிலேயோ பட்டுட்டா என்ன ஆகும்னு நினைச்சிப் பார்த்தீங்களா? நீங்க என்னைப் பத்திக் கவலையே படாதீங்க. நான் பத்திரமாப் போயிட்டு, பத்திரமா வந்துடுவேன்.''

''ஒண்ணை நினைச்சுட்டீன்னு, அது நடந்தாகணும். இல்லேன்னு விடமாட்டியே...''

அப்பா கரடி கோபமாகச் சொல்லி விட்டு வெளியே போய்விட்டது. சில்லு, முள்ளு பழையபடி துள்ளிக் குதித்து வந்து நின்றார்கள்.

''கரடிம்மா! நான் கரடிப்பா திட்டுனதைக் கேட்டு பயந்தே போயிட்டேன். நீங்க என்னை வெளியே விரட்டிடுவீங்களோன்னு...''

மிரண்டு மிரண்டு பார்க்கிற அந்தக் குட்டிப் பயலை ஆசையுடன் தூக்கி முத்தமிட்டு அணைத்துக்கொண்டது அம்மாக் கரடி.

''என் 'கண்ணு! உன்னை அப்படி விரட்டிடுவேனு? எனக்கும் என்ன, சில மனுஷங்க மாதிரி இரக்கமில்லாத மனசா என்ன? ஆமா? சில்லு—முள்ளுவின் அப்பாவைப் பார்த்து நீ ரொம்பப் பயந்து போயிட்டியா?''

''ஆமாம் கரடிம்மா! கரடிப்பா என்னம்மா இப்படிக் கத்தறுரு? ஐயோ! ரொம்பவே பயந்து போயிட்டேன்.''

முத்து அவசர அவசரமாக வாயில் விரலைப் போட்டுக் கொண்டான்.

''முத்து,விளையாட வா...!'' சில்லு ஆசையாகக் கூப்பிட்டது.

''போ முத்தா... சில்லு, முள்ளு! முத்துவோட ஆசையா விளையாடுங்க! 'சண்டை போட்டுக்கக் கூடாது.''

அம்மா கரடி சொல்லிவிட்டு, வீட்டு வேலைகளைப் பார்க்கத் தொடங்கியது.

சில்லு, முள்ளு முத்து மூன்று பேரும் ஓடிப் பிடித்து விளையாடினார்கள்.

ஒரு பத்து நிமிடம் கூட கழிந்திருக்காது.

ஓவென்று அழுது கொண்டே ஓடி வந்தான் முத்து.

''ஏன் 'கண்ணு என்ன விஷயம்? ஏம்மா அழறே?''

''தெரியலையே கரடிம்மா?''

''அம்மாவை உடனே பார்க்கணும் போல இருக்கா?''

''நீங்கதான் சாயந்திரமா கூட்டிக் கிட்டுப் போயி விடறதா சொல்லியிருக்கீங்களே... அதுவும் இல்லை.''

''என்னதான் பின்னே?''

''வயித்தை என்னவோ பண்ற மாதிரி இருக்கும்மா.''

முத்து அழத் தொடங்கினுன்.

''அம்மா! முத்துவுக்கு வயித்து வலியா இருக்கும். அன்னிக்கு ஒரு நாள் நிறைய பலாப்பழம் சாப்பிட்டுட்டு நான் வயித்து வலி, வயித்து வலின்னு அழலே! அது மாதிரித்தான்...'' முள்ளு கூறிற்று.

முத்துவுக்கு எதுவும் சொல்லத் தெரியவில்லை. 'திருதிரு'வென்று விழித்துக் கொண்டு நின்றான்.

கரடி ஏதோ நினைத்துக் கொண்டு முத்துவின் வயிற்றைத் தடவிப் பார்த்தது.

சரிதான்... வயிறு தொய்ந்து போயிருந்தது...

''முத்து... பசிக்குதா உனக்கு?'' கரடிம்மா கேட்டது.

முத்துவுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை.

இரண்டு வாழைப்பழம், கொஞ்சம் திராட்சைப் பழம் கொண்டு வந்து கொடுத்தது கரடிம்மா.

''கரடிம்மா! என்னை உங்க மடியிலே ஒக்கார வெச்சிக்கிட்டாத்தான் நான் சாப்பிடுவேன். என்ன?''

''என்னடா இது?'ஏண்டா அடம் பிடிக்கிறே? முள்ளு, சில்லு! ரெண்டு ரெண்டு வாழைப்பழம் எடுத்துக் கோங்க...''


அவர்கள் எடுத்துக் கொண்டு முத்துவின் எதிரில் வந்து உட்கார்ந்து கொண்டு, சாப்பிட ஆரம்பித்தார்கள்.

''பாத்தியா முத்தா... முள்ளு, சில்லு ரெண்டு பேரும் என்ன சமர்த்தா சாப்பிடறாங்க!''

கரடிம்மா! மடியிலே என்னை ஒக்கார வெச்சுக்கோங்க...''

பரிதாபமாக முத்து கெஞ்சினுன்.

(அடுத்த இதழில் முடியும்)



எருமையும் மனிதனும்

–பட்டுக்கோட்டை ராஜா

"இரக்கமில்லையா? உனக்கு, இதயமே கிடையாதா? ஹே மனிதா! ஏன் இப்படி என்னைப் பிரம்பால் அடித்துத் துன்புறுத்துகிறாய்?"

"பேசுவது யார்.... குரல் அசரீரி போல் ஒலிக்கின்றதே" வண்டி ஓட்டிக் கொண்டிருந்த மனிதன் அதிர்ந்து விழித்தான்.

"நான்தான்பேசுகிறேன்!" என்றது வண்டியில் பூட்டப்பட்டிருந்த எருமை.

"ஓ நீதானா....! உனக்குப் பேசவும் வருமா?"

"மனிதர்கள் அறிவிழந்து சில செயல்களைச் செய்யும்நேரத்தில், பேசுகின்ற சக்தியை ஆண்டவன் எங்களுக்கு அளித்திருக்கின்றான்!"

"அப்படியா....! சரி, நீ என்ன கேட்டாய்?"

"காளை மாடுகளைத்தானே வண்டியில் பூட்டுவார்கள். அந்த வேலையை நீ எனக்களித்தது ஏன்?"


"காளைதான் வண்டியிழுக்க வேண்டுமென்று ஏதாவது கட்டுப்பாடிருக்கிறதா....? ஏன் நீங்கள் இழுத்தால்வண்டி ஓடாதா?" என்றமனிதன் கேலியாகச் சிரித்தான்.

எருமை தன் விதியை எண்ணி நொந்து கொண்டது. "சரி, போகட்டும்.... வண்டியில்தான் பூட்டினாய், சரி.... விதியென்று இழுக்கிறேன். வேகம் போகச் சொல்லி ஏன் விரட்டுகின்றாய்? எங்களின் வேகம் உனக்குத் தெரியாததா? எங்களுக்கென்று ஆண்டவன் படைத்து வைத்ததே இத்தனை வேகம்தானே?"

"என்னது! ஆண்டவன் படைத்து வைத்தானா? அதை நான் மாற்றிக் காட்டுகிறேன் பார்!" என்ற மனிதன் மீண்டும் ஒருமுறை எருமையைப் பிரம்பால் விளாசினான்.

மின்னலாய் முதுகில் விழுந்த அடி ரணமாய் எரிந்தது. எருமை ஈனஸ்வரத்தில் குரலெடுத்துப் பேசியது. "மனிதா, நான் சொல்வதைப் பொறுமையாகக் கேள். அகம்பாவமும், ஆத்திரமும்தான் உன்னை அறிவிழக்கச் செய்கிறது. ஆண்டவன் எங்களின் நடை வேகத்தைக் குறைவாய்ப்

காயா? பழமா?



படைத்ததற்குச் சரியான காரணமிருக்கிறது. அது உனக்குத் தெரியாதா?''

''நீங்கள் மெதுவாக நடப்பதற்குக் காரணமிருக்கிறதா.... ஹ.... என்ன காரணம்?''

''ஐதீகப்படி நாங்கள் யாருக்கு வாகனம்? நன்றாக யோசித்துச் சொல்!''

''இதில் யோசிக்க என்ன இருக்கிறது? நீங்கள் எமனுக்கு வாகனம்?''

''இதையாவது தெரிந்து வைத்திருக்கிறாயே....! ஆச்சரியம்தான். அந்த எமன் யார்? மனிதர்களின் உயிரைக் கொய்திட வருபவன்.... அவனுக்கு நாங்கள் வாகனம். இன்னுமா புரியவில்லை?''

''புரியவில்லையே, விளக்கமாய்ச் சொல்.''

''அட மடமனிதா, சொல்கிறேன் கேள். எமனுக்கு வாகனமாயிருக்கும் எங்களின் நடை வேகம் அதிகமாய் இருந்தால், அந்த எமன் இன்னும் அதிகமான மனிதர்களின் உயிரை எடுத்துவிடமாட்டானா.... ஏன், உன் உயிரேகூடச் சீக்கிரமாய்ப் பறி போக வாய்ப்பிருக்கிறதே.... அதனால்தான் ஆண்டவன் எங்களின் வேகத்தைக் குறைத்துப் படைத்திருக்கிறான். அது புரியாத நீ என்னை அடித்து வேகம் போகச் சொல்கிறாயே, அது எப்படிச் சாத்தியமாகும்?'' என்றது எருமை.

எருமை கொடுத்த விளக்கத்தில் மனிதன் வாயடைத்துப் போனான். ''எருமையே, என்னை மன்னித்து விடு. இனி, நீ மெதுவாகவே போகலாம். இதுவே கடைசி முறை. இனி உன்னை நான் வண்டியில் பூட்ட மாட்டேன். இது சத்தியம்!'' என்றான்.

மனம் திருந்திய மன்னர்கள்

டி. ஜானகி



அரண்மனைப் பூங்காவில் வழக்கம் போல் மன்னர் பிரபுவர்மனும், சேனாதிபதி வீரப்பனும் பேசிக்கொண்டிருந்தனர்.

அப்பொழுது —

ஒற்றர் தலைவன் அங்கு வந்து மன்னரை வணங்கிச் செய்தியை அறிவித்தான்.

"மன்னரே! அவந்தி நாட்டு அரசன் அருள்வர்மன் தங்கள் மீது படையெடுக்கத் தயார் செய்து கொண்டிருக்கிறான்." என்று.

"என்...ன...? நிஜமாகவா?"

"ஆம் அரசே! உலைக்களத்தில் ஆயுதங்கள் செப்பனிடும் பணி மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தங்களிடம் தோற்றுப் போய்க் கப்பம் கட்டிக் கொண்டிருக்கும் சிற்றரசர்கள் எல்லோரும் அருள்வர்மனுடன் சேர்ந்து கொண்டு, நம்மை எதிர்க்க ஆயத்தமாக உள்ளனர். இருக்கும் நிலையைப் பார்த்தால், இன்னும் பதினைந்தே நாட்களில் நம் நாட்டின் மீது படையெடுத்து வந்து விடுவார்கள் என்று நினைக்கிறேன்."

"அப்படியா! நன்று. நீ போகலாம்" என்று உத்தரவு கொடுத்த மன்னர் அப்படியே நின்றுவிட்டார்.

நேரம் கரைந்து கொண்டிருந்தது. காற்று தயங்கியபடியே வீசியது. மன்னர் இன்னும் சிந்தனையிலிருந்து விடுபடவில்லை.

கடைசியில் சேனாதிபதிதான் அமைதியைக் கலைத்தார்.

"மன்னர்பிரானே! சண்டையும், யுத்த மைதானமும் தங்களுக்குப் புதிதல்லவே! எத்தனை பேர்களைத் தாங்கள் வென்றிருக்கிறீர்கள்! அப்படியிருக்க, அருள்வர்மன் படை எடுத்து வரப்போகிறான் என்ற செய்தியைக் கேட்டதும் சிலைபோல் நின்றுவிட்டீர்களே! காரணம் என்ன மன்னவா?"

சுயநினைவிற்கு வந்த மன்னர் பதில் சொல்ல ஆரம்பித்தார்.

"சேனாதிபதி! அருள்வர்மன் என்னைப் போலவே படைபலமும் போர்த் திறமையும் உடையவன். என்னிடம் கப்பம் கட்டுபவர்கள் அனைவரும் அவன் பக்கம் சேர்ந்திருக்கின்றனராம். அதனால்தான் தயக்கமாக இருக்கிறது."

"ஹ...ஹ்ஹா... இதற்காகவா கவலைப்படுகிறீர்கள்? தாங்கள் ஒரு முழு நிலா. அருள்வர்மனும் மற்றவர்களும் மின்மினிப் பூச்சிகள். உங்கள்

முன் அவர்களால் நிற்கக் கூட முடியுமா?'' என்று கேட்டார் சேனாதிபதி.

''சேனாதிபதி! சண்டை செய்யும் நிலையில் இன்று நாம் இல்லை. நம்மிடம் போதிய படைபலமும் இல்லை. ஆயுதங்களும் இல்லை. சேகரிக்க நேரமும் இல்லை. சண்டையில் வெற்றி ஒருவருக்குத்தான் கிடைக்கும். அதனால்...!'' தயங்கினான் மன்னன்.

''உத்தரவிடுங்கள் மகாராஜா! காத்திருக்கிறேன்!''

''நீர் மாறுவேடத்தில் அவந்தி நாட்டிற்குச் சென்று அருள்வர்மனின் படைபலத்தை அறிந்து வாரும். எதிரியின் பலத்தை அறிந்து கொண்டால், அதற்கேற்றபடி நாம் முடிவு எடுக்கலாமல்லவா?''

''இதோ... இன்று இரவே கிளம்புகிறேன், மன்னர்பிரானே! நல்ல முடிவோடு கூடிய விரைவில் உங்களைச் சந்திக்கிறேன்.''

சேனாதிபதி மன்னரிடம் விடை பெற்றுக் கொண்டார்.

மாலைக் கதிரவன் மலை வாயிலை நோக்கி விரைந்து கொண்டிருந்தான். வையகம் இருளை வரவேற்கத் தயாராகிக் கொண்டிருந்தது. பறவைக் கூட்டங்கள் போட்டி போட்டுக் கொண்டு தங்கள் இருப்பிடங்களை நோக்கி விண்வெளியில் விரைந்து கொண்டிருந்தன.

மரத்தடியில் தம் குதிரையைக் கட்டிப் போட்டுக் கொண்டிருந்த சேனாதிபதி வீரப்பன், ஆழ்ந்த யோசனையோடு ஆகாயத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்.

ஆம்! அவர் குதிரை வியாபாரி போல் வேடம் பூண்டு அவந்தி நாட்டிற்கு வந்து நான்கு நாட்களாகி விட்டன. இந்த நான்கு நாட்களாக இரவும் பகலும் சுற்றிப் பார்த்து அருள்வர்மனின் படைபலத்தை நன்கு அறிந்து கொண்டார். ஒற்றர் தலைவன் கூறியது முற்றிலும் உண்மை என்பதைத் தெரிந்து கொண்டார். மன்னர் பிரபுவர்மன் சந்தேகப்பட்டபடி போரில் வெற்றி பெறுவது கடினம் என்பதை நன்கு உணர்ந்தார்.

''ம்... என்ன செய்யலாம்? தோல்விதான் நிச்சயம் என்று தெரிந்த பிறகு விளக்கில் விழும் விட்டில் பூச்சிகளைப் போன்று என் வீரர்கள் மடிவதை நான் விரும்பவில்லை. ம்... சண்டை நடைபெறாது தடுக்க, என்ன செய்யலாம்?'' என்று தமக்குள் எண்ணியபடி சிந்தித்துக் கொண்டிருந்த அவருக்கு, ஒரு யோசனை மின்னியது... அந்த யோசனையைச் செய்கையில் நிறைவேற்றத் திட்டமிட்டார்.

****

மன்னர் அருள்வர்மன் அரியணையில் அமர்ந்திருக்கிறார். அவந்தி நாட்டு மக்களால் அரசவை நிரம்பிக் கொண்டிருந்தது. வழக்கமான பணிகளைத் தொடங்க எண்ணினார் மன்னர். அப்பொழுது வாயில் காப்போன் மன்னரிடம் வந்து,

''அரசே! தங்களைக் காண ஒரு துறவி வந்துள்ளார்'' என்று பணிவோடு தெரிவித்தான்.

''துறவியாரை அரண்மனைக்கு வெளியிலேயே நிறுத்தி வைப்பதா? அபசாரம், அபசாரம்... காலம் தாழ்த்தாது உடனே உள்ளே அழைத்து வா'' என்று கட்டளையிட்டார் அருள்வர்மன்.


சில வினாடிகளில் துறவி உள்ளே நுழைந்தார்.

அரியணையிலிருந்து எழுந்த மன்னர் ஓடோடிச் சென்று வரவேற்று

வேப்பம் பழ மகிமை!

பறவைகள் ஏன் வேப்பம் பழங்களைச் சாப்பிடுகின்றன தெரியுமா? அவை, தங்கள் வளர்ச்சிக்கும், இறகுகள் உதிரா வண்ணம் இருக்கவும், மேலும் இறகுகள் மிருதுவாக, பளபளப்பாக இருப்பதற்குமே வேப்பம் பழத்தை உண்கின்றன. வேப்பம் பழம் அவ்வளவு சிறப்பானது.

— ஆர். எஸ். சுப்பிரமணியன்.





இருக்கை கொடுத்து உபசரித்தார். சில விநாடிகளுக்குப் பிறகு துறவி கூறலானார்.

"மன்னா! நான் காசியிலிருந்து குமரி முனைக்குச் சென்று கொண்டிருக்கிறேன். அடியேன் பெயர் சிவானந்தர். எனது தவ வலிமையால், ஞானதிருஷ்டியால் அவந்தி நாட்டிற்கு வரப் போகும் ஆபத்தை அறிந்தேன். அதிலிருந்து காப்பாற்றத்தான் உன்னைச் சந்திக்க வந்துள்ளேன்."

"அவந்தி நாட்டிற்கு ஆபத்தா?" திடுக்கிட்டார் அருள்வர்மன்.

"துறவியாரே! என் நாட்டிற்கு ஆபத்தா? எப்படி? கொஞ்சம் புரியும்படி சொல்லுங்கள்" என்றார் பணிவான குரலில்.

"மகனே! நீ போர் புரியத் தயாராக இருப்பதாக என் தெய்வீக பலத்தால் அறிந்து கொண்டேன். போரிலே வெற்றி உனக்குத்தான்."

"ரொம்ப மகிழ்ச்சி துறவியாரே! வெற்றியைத்தான் நானும் விரும்புகிறேன்!"

"ஆ...னால்... மகனே...!"

"ஆனால்... என்ன சொல்லுங்கள் முனிவரே!"

"இந்த வெற்றியைக் காண நீ உயிரோடு இருக்க மாட்டாய்."

"எ...ன்...ன... நா...ன்... நான்... உயிரோடு இருக்க மாட்டேனா?"

"ஆம் மகனே! இந்தப் போரிலே எண்ணற்ற உயிர்கள் மடியும். உன் எதிரியும் பலம் வாய்ந்தவனாக இருப்பதால், சண்டையில் பல வீரர்கள் மடிவார்கள். வெற்றி உன் பக்கம் என்றாலும் அதனால் உனக்கோ... உன் நாட்டிற்கோ... எந்தவிதநன்மையும்கிடைக்காது! ஆம்! உன் அன்னை உன்னை இழந்து விடுவாள். உன் மனைவி தன் மஞ்சள் குங்குமத்தை இழக்க நேரிடும். எல்லாவற்றிற்கும் மேலாக உன் பச்சிளம் பாலகன், உன் குலக் கொழுந்து தன் தந்தையை இழந்து விடுவான். எந்த வெற்றிக்காக நீ அல்லும் பகலும் பாடுபடுகிறாயோ, அந்த வெற்றி உன் உயிரைப் பலிவாங்கும். உனக்குப் பிறகு உன் பகைவன் உன் மகனைக் கொன்று இந்த நாட்டைக் கைப்பற்றி விடுவான். எனவே, உனக்குப் போர் முக்கியமா? உன் நாடும், உன் உயிரும், உன்


30

ஓசூரில் எடுத்த திரைப்படம்

திக்கற்ற பார்வதி என்ற கதையை ராஜாஜி எழுதினார் என்பது உங்களில் பலருக்குத் தெரிந்திருக்கும். அந்தக் கதையைத் திரைப்படமாக எடுத்தார்கள். அப்படத்தில் கதாநாயகனாக நடிகர் ஸ்ரீகாந்தும் கதாநாயகியாக நடிகை லட்சுமியும் நடித்திருக்கிறார்கள். இந்தப் படத்தில் ஒரு விசேஷம் என்னவென்றால், படத்தில் ஆரம்ப முதல் முடிவு வரை எங்கள் ஓசூரில் எடுக்கப்பட்டன.

— கே. நரசிம்மன் (7378), ஓசூர்.

மகனும், உனது குடிமக்களும் முக்கியமா? எது வேண்டும்?'' கம்பீரமாக வினவினார் சிவானந்தர்.

அருள்வர்மன் போரின் கோரக் காட்சிகளையும் துறவி சொன்ன முடிவுகளையும் எண்ணினான். ஒரு நிமிடம் சிந்தித்த அவர், உறுதியான குரலில் தெளிவாகக் கூறலானார்:

''துறவியாரே.நீங்கள் என் நன்மைக்காக என் இருப்பிடத்தை நாடி வந்து என் கண்களைத் திறந்துவிட்டீர்கள். போருக்கான ஆயத்தங்களை நிறுத்தி விடுகிறேன். எனக்கு என் நாடும் என் மக்களும், என் மகனும்தான் முக்கியம்.''

''நல்லது மகனே! ஒன்று சொல்கிறேன் கேள்: போரினால் யாருக்கு என்ன லாபம்? போருக்குச் செலவிடும் பணத்தை நாட்டின் ஆக்கப் பணிகளுக்குச் செலவிடு. அன்புதான் நமக்குத் தேவை. அது ஒரு வற்றாத ஜீவநதி. நம்மையும் வாழ வைக்கும். பிறரையும் வாழ வைக்கும். அன்புதான் ஒற்றுமைக்கு வழிகாட்டும். ஒற்றுமை அமைதிக்கு வழிகாட்டும். அமைதி முன்னேற்றத்துக்கு வழிகாட்டும்.''

''முனிவரே! புரிந்தது; இன்றிலிருந்து இந்த அருள்வர்மன் போரே செய்ய மாட்டான். தாங்கள் கூறியபடி அன்பு வழியில் நடப்பான். இது சத்தியம்'' என்று கூறித் துறவியின் காலில் விழுந்து வணங்கினான்.

''மகிழ்ச்சி மகனே! எழுந்திரு. அன்னை பராசக்தி உனக்கு அருள் புரிவாள். வருகிறேன்!''

முனிவர் விடைபெற்றுக் கொண்டார்.

****

துறவி வேடத்தில் தன் முன்னால் நின்று கொண்டிருந்த சேனாதிபதி வீரப்பனைப் பார்த்ததும் ஒரு வினாடி திகைத்தார் மன்னர் பிரபுவர்மன். பிறகு,

''என்ன! சேனாதிபதியாரே! இதென்ன கோலம்? போன காரியம் காயா? பழமா?'' என்று அவசரமாக வினவினார்.

''மன்னரே! காரியம் பழம்தான். அருள்வர்மன் இனி போரே செய்வதில்லை என்று சொல்லிப் போருக்கான ஏற்பாடுகளை நிறுத்தி விட்டார்.

''அப்படியா?சபாஷ்... உம்முடைய சாமர்த்தியமே சாமர்த்தியம்... இனி கவலை இல்லை. நமது வீரர்களை வரவழையுங்கள். கொல்லன் உலைக்களத்தில் ஆயுதம் செய்யும் பணி இரவு பகலாக நடைபெறட்டும். வீட்டுக்கு ஒரு வீரனை அழைத்து வாருங்கள். இன்னும் எண்ணிப் பதினைந்தே நாட்களில் நாம் அருள்வர்மன் மீது போர் தொடுக்க வேண்டும்'' என்று ஆணை பிறப்பித்தார்.

சேனாதிபதி அசையவில்லை. ஆடவில்லை. சிலைபோல் நின்று கொண்டிருந்தார்.

''என்ன சேனாதிபதியே! நான் கூறியது உமது காதில் விழவில்லையா?'' — மன்னர் படபடத்தார்.

''நன்றாகவே விழுகிறது மன்னவா! ஆனால் நான் கேட்கும் ஒரு கேள்விக்குத் தாங்கள் பதில் கூறுகிறீர்களா?''

''தாராளமாகக் கேளும்.''

''ஓர் இறந்து போன எறும்பை, தங்களால் பிழைக்க வைக்க முடியுமா?''

''முடியாது.''

''அப்படி இருக்க... ஆண்டவனால் படைக்கப் பெற்ற விலை மதிக்க முடியாத மனித உயிர்களை அழிக்க உங்க

ளுக்கு என்ன உரிமை இருக்கிறது?''

''சேனாதிபதி... என்...ன, என்ன சொல்கிறீர்?''

''அரசே! என்னை மன்னிக்க வேண்டும். அருள்வர்மன் 'துறவி' என்றால் தெய்வத்தைப் போல மதிப்பவன் என்று கேள்விப்பட்டேன். கேவலம்... நம் சுயநலத்திற்காக, நான் துறவி வேடம் பூண்டு அருள்வர்மனைச் சந்தித்தேன். அவரோ... என் அறிவுரைகளைக் கேட்டுப் போரை நிறுத்திவிட்டார். போலித் துறவியின் வாக்கிற்கே இவ்வளவு மதிப்பு என்றால், உண்மையான துறவியின் வாக்கிற்கு எத்தனை மதிப்பு இருக்கும் என்று யோசித்தேன். ஆம், அப்பொழுது என் மனம் மாறிவிட்டது. நான் செய்த பாவத்திற்குப் பிராயச்சித்தமாக இனி வாழ்நாள் முழுவதும் உண்மையான துறவியாகவே இருந்து மக்களுக்குத் தொண்டாற்றப் போகிறேன்.''

''நீர் இல்லாமல் நான் எப்படிப் போர் செய்வேன்?''

''மன்னரே! ஒரு நிமிடம் யோசித்துப் பாருங்கள். பல உயிர்களைக் கொன்று குவித்து, நாட்டின் எல்லையைப் பெருக்கிக் கொண்டே போனாலும், கடைசியில் நாம் இவ்வுலகை விட்டுச் செல்லும் பொழுது என்னத்தைக் கொண்டு செல்கிறோம்? வெற்றி பெற்ற நாடுகளையா?''


''......''

''ஏன் பதில் பேசாது இருக்கிறீர்கள்? நாம் அனைவரும் ஆண்டவனின் குழந்தைகள். நமக்குள் ஏன் சண்டை? பகைமை? நாட்டின் முன்னேற்றத்திற்கு அன்பும், அமைதியும்தான் தேவை. அன்பு என்னும் ஜீவநதியை மக்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஓடச் செய்யப் போகிறேன்; வருகிறேன், மன்னா!''

''முனிவரே! தாங்கள் கூறியவை என் அகக்கண்களைத் திறந்து விட்டன. சக்கரவர்த்தி அசோகன் போன்று மக்களுக்காகவே வாழ்வேன். இனி, போர் செய்யவே மாட்டேன். இது உறுதி!'' என்றார் பிரபுவர்மன் ஆவேசத்தோடு.

மனம் திருந்திய மன்னரைக் கண்டு மகிழ்வுற்றார், 'சிவானந்தர்' என்ற பெயருடன் உண்மைத் துறவியாக மாறிய சேனாதிபதி வீரப்பன்..

ஓவியராகலாம்





திப்பிலி ராஜாவும் பிடிக்கும் கோட்டையும்

வாண்முகில்

திப்பிலி ராஜாவும், அவர் மந்திரியும் ஒளிந்து ஒளிந்து மலையேறிக் கொண்டிருந்தனர். இரகசியப் பயணம். எனவே ராஜா ஐந்தறைத் தலைக் கவசம் அணிந்திருந்தார். மந்திரி ஸ்கூட்டர் சட்டித் தொப்பி மாட்டிக் கொண்டிருந்தார். 'அஸ் — புஸ்' என மூச்சு வாங்கும் சத்தம் வெளியில் கேட்டு விடக் கூடாதென்று மூக்கின் மேலே 'சைலன்ஸர்கள்' பொருத்தப்பட்டிருந்தன.

ராஜா மெதுவாக, ''மந்திரி! நாம் இப்படி அஸ் — புஸ் வாங்கி, மலையேறிக் கோட்டையைப் பார்த்து விட்டுப் போய், நம் ஊரில் திப்பிலிக் கோட்டையைக் கட்டுவதை விட, அரண்மனை அடுப்பங்கரையிலேயே ஆறடிச் சுரங்கம் எளிதாக வெட்டி, அதிலேயே படுத்துக் கொள்ளலாம். வேளைக்குச் சோறும், குளிருக்குச் சூடும் கிடைக்கும். ஆட்டம் பாம் விழுந்தாலும், ஆட்டுக்குட்டி பாம்

விழுந்தாலும் கவலையில்லை. எதிரிகள் நம் சுரங்கத்தைக் கண்டுபிடிக்க முடியாது'' என முணுமுணுத்தார்.

''அலுக்காதீர்கள் அரசே! அணுகுண்டுத் தாக்குதலிலிருந்து தப்ப ஒரு கோட்டை கட்ட வேண்டும் என்று நீங்கள்தானே சொன்னீர்கள்? அதற்கு ஒரு 'மாதிரி' பார்ப்பதற்குத்தானே இந்தப் பாழடைந்த கோட்டைக்குப் போகிறோம்!''

''போகிறோம், போகிறோம்! என் உயிர் போகிறது. குன்னூரிலிருந்து ஆர்செடின், ஆர்செடினிலிருந்து 'நான்சச்' எஸ்டேட் வழியாக...''

''பொடி நடையாக வந்துவிட்டோமே. அதோ பகாசூரன் கோட்டை மலை உச்சியிலே.''

''இதோ இந்த மரத்தடியில் முதலிலே உட்காருவோம். ஏதோ பசி, தாகத்துக்கென்றுபழம்,பிஸ்கட்,கேக், லட்டு,மைசூர்பாகு,அதிரசம்,அல்வா, காப்பி, டீ, பால், மோர், தண்ணீர் — எல்லாம் முதுகிலே மூட்டையாக வைத்திருக்கின்றோமே! அவற்றையெல்லாம் தூக்கிக் கொண்டு குதித்துக் குதித்து மலையேறினால் எல்லாம் நசுங்கிப் பஞ்சாமிர்தம் ஆகிவிடுமே! இறக்கி வைப்போம்! மலை இறங்கி வந்து சாப்பிடலாம்! அதை விடக் கொஞ்சம் சாப்பிட்டு விட்டு மலை ஏறினால்...?''

என்று கூறிய ராஜா உட்கார்ந்து விட்டார்.

''வேண்டாம் அரசே! 'உண்ட களைப்பு மன்னருக்கும்' உண்டு. மூட்டைகளை இங்கேயே வைத்து விட்டுக் கோட்டைக்குப் போவோம்.''

''அய்யய்யோ! காக்கை, குருவி, காண்டா, சிங்கம், புலி, சிறுத்தை, முதலை, முள்ளம்பன்றி எல்லாம் வந்து அல்வாவை விழுங்கி விடுமே!''

''அஞ்ச வேண்டாம்! நான் மூட்டையைப் பார்த்துக் கொள்வேன்! நீங்கள் கோட்டையை.''

''மந்திரி! நீங்கள் கோட்டை! நான் மூட்டை.''

''பாழடைந்த கோட்டை என்றாலும் முதல் மரியாதை மன்னருக்குத்தானே!''.

மரியாதையை விட்டுவிட மனமில்லாமல் ராஜா மலையேறினார். ஒற்றைக் கல் பாதை சுற்றியது. ராஜாவின் தலையும் சுற்றியது. ஒரு பாறையின் மேல் அவர் படுத்துக் கொண்டார். அப்பொழுது திடீரென மலை மீது மூடுபனி இறங்கியது. கவசத்தின் காதினை ராஜா அழுத்தினார். கவச விளக்குகள் 'கபீர்' என மஞ்சள் ஒளி வீசின. அது மூடு பனியை ஊடுருவ, ராஜா அதனைத் தொடர்ந்து ஊர்ந்தார்.

திடீரென்று பனி நடுவில், 'ஒய், ஒய், ஒய்' — என்ற ஒலியுடன் வானிலிருந்து ஏதோ ஒன்று இறங்கியது. அதன் கீழ்ப்புறம் 'ப்ளிப் ப்ளிப்' எனப் பச்சை, சிவப்பு விளக்குகள் மாறி மாறி எரிந்தன.

ராஜா நடுங்கினார்; ஆனால் பயப்படவில்லை. "சிறு பயம் வந்தால் பெரும் பயம் சிந்தி" என்று அவர் பாட்டி கூறியது அவர் நினைவுக்கு வந்தது. அதன்படி, 'ஐயோ! அல்வாவை மந்திரி அபேஸ் செய்திருப்பாரே!' என்று ராஜா பெரிய பயத்தைச் சிந்தித்தார். எவனாவது சினிமாப் படம் எடுப்பான் — என்று நினைத்துக் கொண்டார். தைரியம் வந்தது.

எதிரே இறங்கியதோ ஒரு பறக்கும் கோப்பை. அதன் பிடியின் ஒரு முனை கழன்றது; 'க்ளிக்' 'ப்ளிக்' என்று சரிந்து தரையைத் தொட்டுச் சறுக்குப்

என்ன பண்றான்?

ஒருவர்: என்னங்க உங்க பையன் சின்ன வயசில வழவழன்னு பேசிட்டு இருப்பானே, இப்போ என்ன பண்றான்?

மற்றவர்: விளக்கெண்ணெய் வியாபாரம்.

— டி. எடிசன்.





பலகை போன்று அமைந்தது. கோப்பையில் ஒரு பகுதி வட்டமாகக் கரைந்தது. அதனுள், மஞ்சள், நீலம், கறுப்பு, வெள்ளை விளக்குகள் பளிச்சென வெளிச்சமிட்டன. யாரோ இல்லை எதுவோ — சறுக்கி இறங்கியது. அதன் தலைக் கம்பிகள் ராஜாவின் பக்கம் திரும்ப, அது அவரை நோக்கி...

'மீண்டும் ராஜாவின் மனத்தில் அல்வா பயம் நிறைந்தது; கோப்பை பயம் குறைந்தது. சினிமா 'ஷூட்டிங்'கில் டைரக்டர் கூறுவது போல், கைகளை உயர்த்திக் 'கட்! கட்!'' என்று கத்தினார். 'அது' நிற்காமல் 'கடகட' என்று உருண்டு வந்தது. ராஜா மிரண்டு விடவில்லை.

''யார் நீ! பேர் நீ! கூர் நீ!'' — என்று மிரட்டினார்.

அப்பொழுது அவர் கண் முன்னாலேயே ஒரு மந்திர ஜாலம், இந்திர ஜாலம், மகேந்திர ஜாலம் நடந்தது. சதுர உருண்டை வடிவில், முக்கோணமாய், 'கசமுசா'வென்று கம்பியும், தகடுமாய், இருந்த 'அது' ராஜாவின் பக்கம் திரும்பியது. 'டுர் புர் குர்'

ஓசைகள். 'களீர், தளீர், பளீர்' என ஒளிக் கற்றைகள் ராஜாவின் மேல் பாய்ந்தன. அப்போதும் அவர் பயப்படாமல் கண்களை இறுக மூடிக் கொண்டார். என்னதான் நடக்கும் நடக்கட்டுமே! நடக்கவில்லை.

ஒரு நிமிடம் ஓடியது!

''இப்பிலி ராஜாவுக்கு ஜே!'' என்ற குரல் வினோதமாக ஒலித்தது. ராஜா ஒருகண்ணைத் திறந்தார். எதிரே

அவர் உயரத்துக்கு ஒரு ராஜா! அவர் மாதிரியே! அட! இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் ராஜ ராஜன் போல், இரண்டாம் திப்பிலி ராஜாவா? மலை ராஜாவா?

"மன்னரே வருக! மலையரே வருக! தாங்கள் யாரோ? என்ன பேரோ? எந்த ஊரோ? அல்வா பிடிக்குமா? ஆலம் பழம் பிடிக்குமா?" என்று ராஜா அச்சமின்றி வினாக்களை வீசினார்.

அவற்றில் ஒன்றைப் பிடித்த எதிர் ராஜா: "தோம்! தோம்! வந்தோம்! யாம் காரிய மண்டல வாசி" — என்றார்.

"உமக்கு எம் ஆசி! என்ன மண்டலம்?" என்று திப்பிலிராஜா யோசித்தார்.

"காரிய மண்டலம்! சூரிய மண்டலத்திலிருந்து 100 ஒளி ஆண்டுத் தூரத்தில் இருக்கின்றது. நாங்கள் உங்களைப் போல் வீணைப் பேசிக் காலங்கழிக்க மாட்டோம். எல்லாம் காரியம்தாம்."

"காரிய மன்னரே! உமக்கு என் சிரிய வணக்கம்! உம் மண்டலத்தில் என்னைப் போல் ராஜாக்கள் ஏராளமோ? தமிழ் பேசுவதும் தாராளமோ?"


"அஹ்றஹிஹ்றஹ்! கிலெக்ட்ரான்களால் ஆன எங்கள் உடலுக்குக் குறிப்பிட்ட வடிவம் இல்லை. காற்றில் கரைந்திருப்போம். காற்று ஒரு பலூனுக்குள் புகுந்தால், அது பலூன் வடிவம் பெறுகிறது. உங்கள் குரல் கேட்டவுடன் எம் ரீடார் உங்கள் பக்கம் திரும்பி, உங்களைப் போல் ஒரு வீசர் பலூனைச் செய்துவிட்டது. அதனுள் கிலெக்ட்ரான்கள் புகுந்து விட்டதால் உங்களைப் போலவே இருக்கிறோம். ஹிஹ்றஹ்!" — என்று பலூன் மன்னர் விளக்கினார்.

பூ! பலூன் மன்னர்தானா? இருந்தாலும் ஒரு திப்பிலி நாட்டுக்கு இரண்டு ராஜாக்களா? 'ஒரே ஓர் ஊரிலே ஒரே ஒரு ராஜா!' என்று கதை சொல்லும் பாட்டிகள் குழம்புவார்களே! ஒன்றுக்கு மேலே எப்போதும் வேண்டாம்! — என நினைத்த ராஜா, கத்தியைத் தொட்டார். அவ்வளவுதான். பளீரென ஒரு மின் அதிர்ச்சி. கையை உதறினார் ராஜா.

"அஹ்றஹிஹ்றஹ்! கத்தியினால் எம்மைக் குத்த நினைத்தீரோ! அது எம் கிடாரில் பதிவானதும், உடனே கீசர் கதிர் பாய்ந்து விட்டது. எங்கள் மண்டலத்தில் தீய நினைப்புக்கே தண்டனை! ஆனால் நீங்கள் கத்தியில் குத்தினாலும் பலூன் கிழியாது!" — என்று கூறியபடியே பலூன் மன்னர் நெருங்கினார்.

ராஜா 'சர்' — என்று வாளை உருவினார். உறையிலிருந்து வந்ததோ ஒரு பிரம்பு. பிடி மட்டும் வாள் பிடி. ராஜா வாள் வீச்சை மறந்து பல்லாண்டாகி விட்டது. எல்லாம் வாய் வீச்சுதானே! எனவே சமையல் படைத் தலைவர் சாம்பார் (சாம்பு — ஆர்) வெண்ணெய் வெட்டக் கத்தியை எடுத்துக் கொண்டு, பிடியில் பிரம்பைச் செருகி வைத்திருந்தார். பலூன் மன்னரை வீரத்துடன் பார்த்துக் கொண்டிருந்த ராஜா அதைக் கவனிக்காமல், பிரம்பை வீசினார். அது பலூனை வெட்டியது. ஆனால் மறுநொடியில் வெட்டப்பட்ட பலூன் இணைந்தது.

பலூனர் 'பக பக'வென்று சிரித்தார். ராஜா 'கப கப'வென்று விழித்தார். அவரை எப்படியாவது மயக்கி



அரண்மனைக்கு அழைத்துச் சென்று அடுப்பங்கரை அகழியில் அடைத்து விட வேண்டும். வெளியில் திரிந்தால் விபரீதம் என நினைத்து,

"அய்யா வாருங்கள் அரண்மனைக்கு! அல்வா சாப்பிடலாம்" — என ராஜா ஆசை காட்டினார்.

"அல்வாவும் வேண்டாம்! ஆட்டுக்குட்டியும் வேண்டாம்!"

"வேண்டியதைக் கேளுங்கள்!"

"எங்களுக்கு வேண்டியது உலக அமைதி! உங்கள் மண்டலத்தில் அமைதியை நிலை நாட்டவே வந்துள்ளோம். கன்னாபின்னாவென்று அணு ஆயுதங்களைச் செய்து அழிந்து கொண்டிருக்கின்றீர்கள்! யாரோ நேற்று அணு ஆயுதச் சோதனை செய்தார்கள். அதனால் வந்தோம்! உங்கள் நாட்டில்..."

"அய்யய்யோ! தீபாவளிக்குக் கூட நாங்கள் 'ஆட்டம் பாம்' வெடிப்பதில்லை. வெறும் 'கூட்டம் பாம்' — தான்! அது சரி! நீங்கள் வழக்கமாகப் பறக்கும் தட்டில்தானே வருவீர்கள்! இப்பொழுது கோப்பையிலே குடியிருப்பா?"

"எல்லாம் பசுவலிங்கத்துக்குப் பயந்துதான். பறக்கும்தட்டுகளை அவர் கண்டுபிடித்து விளம்பரப்படுத்திவிடுகிறாரே!"

என்று பலூனர் விளக்கிக் கொண்டிருக்கும் பொழுதே,

'க்ளா' 'க்ளா' 'ப்ளா' 'ப்ளா' — என்ற ஓசை பறக்கும் கோப்பையிலிருந்து கேட்டது.

'ப்ளா, ப்ளா' 'க்ளா, க்ளா' — என்று ஓசை பலூனிலிருந்து வந்தது.

'க்ளா.'

'ப்ளா.'

"சரி! நான் போக வேண்டும். எங்கள் ஆசிரியர் கூப்பிடுகிறார்!"

"ஆசிரியரா!"

"ஆம்! நாங்கள் சுற்றுலா வந்துள்ள மாணவர்கள்! ஏதோ சென்னையில் பக்கம் செய்முறைப் பயிற்சி என்று வந்தோம்."

"செய்முறைப் பயிற்சியா?"

"ஆமாம்! உங்கள் மண்டல மாணவர்கள் தீப்பெட்டியில் பொன்வண்டு வளர்ப்பது போல், நாங்கள் உங்கள் பூமியை 'மண்வண்டாக' வளர்க்கிறோம்."

"பள்ளிக்கூடப் பையனா நீ! எத்தனாங் கிளாஸ்!"

"ரெண்டாங் கிளாஸ்! ராஜா!"

"பொடிப் பயலே! ரெண்டாங் கிளாஸ் படிச்சுக்கிட்டு எங்களை வண்டு, மண்டுன்னு பேசறியா?" — என்று ராஜா கோபங் கொண்டு உடைப் பிரம்பை உருவி வீச —

அதற்குள் பலூன் மறைந்து விட்டது.

கோப்பை கரைந்து விட்டது.

சிறு பயம் பறந்ததும், பெரும் பயம்.

பாழடைந்த கோட்டை பாழாய்ப் போகட்டும் என ராஜா மரத்தடிக்குத் திரும்பினார்.

அவர் பயந்தது போலவே, மந்திரி அல்வாவை அபேஸ்பண்ணிவிட்டிருந்தார். நல்ல வேளையாக ராஜா முன்னெச்சரிக்கையாக, ஐந்தறைத் தலைக் கவசத்தில் அரை கிலோ அல்வாவை ஒளித்து வைத்திருந்தார். அதை நைஸாக எடுத்துச் சாப்பிட்டுக் கொண்டே,

"மந்திரி! பறக்கும்தட்டு பார்த்திருக்கிறீர்கள் அல்வா?" — என்று ராஜா கேட்டார். 'அல்லவா' 'அல்வா' ஆகிவிட்டது.

"ஓ! சமையலறையில் ராணியார் கோபமாக இருக்கும் போது தட்டுகள் பறக்குமே!"

"அதில்லை! — சரி! பறக்கும் கோப்பைகள் பார்த்திருக்கிறீர்கள் அல்வா?"

"இல்வா!" — மந்திரியும் மன்னர் வழியிலேயே உளறினார்.

போனால் போகிறதென்று மந்திரிக்கும் கொஞ்சம் அல்வா கொடுத்த ராஜா, மலைமேல் தாம் பார்த்த பறக்கும் கோப்பை பற்றியும், பலூன் மன்னர் பற்றியும் விளக்கிக் குழப்பினார். நல்ல 'த்ரீ D ரீல்' — என நினைத்த மந்திரி 'உம்' 'உம்' என்றபடியே 'ஜம்' என்று தூங்கிவிட்டார். மரத்தடியும் ஒரு தூக்கத் தொழிற்சாலையே! கதை முடியவும், மந்திரி விழிக்கவும் சரியாக இருந்தது.

கனவா? எதிரில் இருப்பது திப்பிலி ராஜாவா? பலூன் மன்னரா?

மந்திரி கிள்ளினார்! ராஜா துள்ளினார்!

Printed and Published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600 032. Editor: K. Rajendran

Editorial Office: 28, Fifth Street, Lake Area, Nungambakkam, Madras-600 034 (Phone: 473389)

Administrative Office: Race Course Road, Guindy, Madras-600 032 (Phones: 431543, 434157 Press: 434190)

REGISTERED No. TN MS (S) 281

Registered as a Newspaper in Srilanka

